ஜோதி

ஆசிரியர் — வெ. சாமிநாத சர்மா

சுடர் 3 விக்கிரம௵ வைகாசி௴ கதிர் 11

ஜூன்-1940

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—		1
அஹிம்சையை ஸ்தாபிப்பது எப்படி?	—	'இந்திர பாலன்'	3
கட்டுரை எழுதுவது இலேசா?	—	ஸ்ரீ ராமச்சந்திரன்.	12
இந்தியாவும் இங்கிலாந்தும்	—	"தேவ குமாரன்"	14
வேதாந்த ரகசியங்கள்	—	ஸ்ரீ ஸதானந்த சுவாமிகள்	17
தவறுதலும் தண்டனையும்	—	"நாராயண சிவன்"	22
சுதந்திரத்தின் தேவைகள் யாவை?		ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள் 9 வெ. சா.	25
சித்தரஞ்சன தாஸர்	—	'ஒரு காங்கிரஸ்வாதி'	34
மனிதரின் பரஸ்பர சம்பந்தம்	—	ச. மு.	38
அஹிம்சா தர்மத்தின் அந்தரங்க மென்ன?		சுவாமி பரமானந்தரைத் தழுவி யெழுதியது 'ஆசிரமவாசி'	41
துலாக்கோல்	—	(புத்தகவிமர்சனம்)	46
இந்திய சமஷ்டி அரசியல்	—	கே. வி. ராமசுப்பிரமணியம் B. A. B. L.	47
இலங்கையில் இந்து மதம்	—	'லங்கா புத்திரன்'	52
அன்றாட உலகம்	—		57
யுத்தப் பிரதேசங்களைப் பற்றி	—		63

ஜோதி

கதிர் 3 ஜூன்—1940 சுடர் 11

புதிய சிருஷ்டி

எந்த நமது கண்கள், பத்திரிகைச் செய்திகளைத் திறந்து பார்க்கின்றனவோ அதே கண்கள், உலகத்தினைப் பார்த்து இறுக மூடிக் கொள்கின்றன. அதே சமயத்தில், 'உலகத்தினை ஏன் படைத்தாய் கடவுளே' என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டே மனமானது, தன்னால் எட்டிப் பிடிக்க முடியாத கடவுளிடத்தில் சரண் புகுந்து கொண்டு விடுகின்றது விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக விரிந்திருக்கும் மனமானது, அதே விஞ்ஞானத்தின் துணை கொண்டு நடைபெறும் கொலைகளைக் கண்டு குவிந்து விடுகிறது. இந்த மாதிரி மாறுபட்ட உணர்ச்சிகள் ஒரே சமயத்தில் தோன்றுவது விந்தைதான். ஆனால், அந்த விந்தைக்குக் காரணத்தைக் கண்டு கொள்ள முயற்சி செய்யாவிட்டாலும் அதை அநுபவித்து மட்டும் வருகிறோம்.

இன்றைய ஐரோப்பாவைப் பாருங்கள். ஒரே ரணகளந்தான். 'எல்லோரையும் சகோதரராக நேசியுங்கள்' என்று எந்த மகான் உபதேசித்தாரோ அதே மகானுடைய சிஷ்யர்கள்தான், நிரபராதிகளான ஜனங்கள் லட்சக் கணக்கில் துடி துடித்துச் சாவதற்குக் காரணர்களாயிருக்கிறார்கள். இதை நாம் நினைக்கிறபோது, மண்டியிட்ட பாதிரிமார்களின் பிரார்த்தனைகளும், மாதா கோயிலின் மணியோசையும் சூனியத்திலே தான் போய் கலந்து விடுகின்றனவா வென்ற சந்தேகம் உண்டாகிறது.

டால்ஸ்டாய் கூறிய மாதிரி, ஒவ்வொரு ராஜ தந்திரியும் அல்லது ஒவ்வொரு போர் வீரனும் தான் ஒரு மனிதன் என்று எண்ணி நடப்பானாகில் இந்தக் கொலைகள் நடைபெற இடமே யிருந்திராது. ஆனால் அவன் ஒன்று ராட்சதனாகவாவது ஆகி விடுகிறான்; அல்லது தேவ புருஷனாக ஆகிவிடவாவது ஆசை கொள்கிறான். அதாவது, தன்னினின்று வேறுபட்டவனாக ஒரு ராட்சதனே, அல்லது தேவபுருஷனே இருப்பதாக அவன் கருதிக் கொண்டு விடுகிறான்.

இதனால் தான், மாற்றத்தில் இவன் மனம் ஈடுபட்டு விடுகிறது. எனவே, தன் நிலையை மறந்து விடுகிறான்; அதனை இழந்தும் விடுகிறான்.

நம்மைப் பொறுத்த மட்டில் ராட்சதனும் தேவ புருஷனும் இந்தப் பூலோகத்திலேயே இந்தப் பூலோக மனிதனிடத்திலேயே ஐக்கியப் பட்டிருக்கிறார்களென்று கருதுகிறோம். மனிதனிடத்திலேயுள்ள மனமானது குவிந்து விடுமேயானால் அப்பொழுது அவன் ராட்சதன்; அதே மனம் விரிந்து நிற்குமேயானால் அவன் தேவ புருஷன். எனவே, இந்த இக லோக வாழ்க்கையிலேயே, இந்தத் தலை முறையிலேயே மனிதன் தெய்வத் தன்மை அடைய வேண்டுமென்பது நமது ஆவல். இந்த ஆவல் தான் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

மனிதத் தன்மையை இழந்து விட்டுத் தெய்வத்தன்மையை அடைய வேண்டுமென்ற கூட்டத்தில் நமக்கு இடமில்லை. எப்படி தேசியத்தைப் புறக்கணித்து விட்டு, சர்வ தேசியத்தைப் பற்றிப் பேசுவது, வண்டிக்குப் பின்னால் மாட்டைப் பிடித்துக் கட்டுவது போலிருக்குமோ அப்படியே, கைவசமிருக்கும் மனிதத் தன்மையை மறந்து விட்டு, எங்கேயே அப்பாற்பட்ட இடத்திலிருப்பதாகச் சொல்லப்படும் தெய்வத் தன்மைக்குக்காதல் கொண்டு நிற்பதும் இருக்கும். மனிதர்கள் ஏன் தேவலோகத்திற்குப் போக வேண்டும்? அந்தத் தேவர்கள் தான் இந்த மானிட உலகத்திற்கு வரட்டுமே. நம்மைப் பிறர் வழிபட வேண்டுமென்ற லட்சியந்தான் உயர்ந்த லட்சியமே தவிர, பிறரை நாம் வழிபட வேண்டுமென்பது உயர்ந்த லட்சியமாகாது.

ஆனால் இப்பொழுதைய உலகம் ராட்சதத் தன்மையில் போய்க் கொண்டிருக்கிறதென்று சொல்ல வேண்டும். இதனின்று நாம் மீள வேண்டுமானால் முதலில் நாம் மனிதர்கள். என்ற உணர்வு பெறுதல் அவசியம்.' அந்தக் காலம் எப்பொழுது?

தற்போது மூண்டிருக்கும் உலக யுத்தம், மானிட சமுதாயத்தை எந்த நிலைமைக்குக் கொண்டு போய் விடும் என்று யாரும் சொல்ல முடியாது. ஆனால், இந்த அழிவினின்று ஒரு புதிய சிருஷ்டி பிறக்குமென்பது மட்டும் நிச்சயம். அந்தச் சிருஷ்டியை நாம் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருப்போமாக. அப்படி எதிர் பார்த்துக் கொண்டிருப்பதன் மூலமாகத்தான், தற்போதைய துன்ப அநுபவத்தை மறந்திருக்க முடியும்.

"ஜோதி" அன்பர்களுக்கு

தற்போதைய ஐரோப்பிய யுத்தம் எப்படி விஷம் போல் பரவி வருகிறதோ அப்படியே காகித விலையும் நாளுக்கு நாள் விலையேறிக் கொண்டே வருகிறது. இந்த நிலைமையில், பக்கங்களைக் குறைத்து வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிர்ப்பந்தம் தற்காலிகமாகத்தான் இருக்கும். அது வரையில் வாசகர்கள், பொறுமையுடனிருந்து "ஜோதி"க்கு ஊக்க மூட்டி வருவார்களாக.

மானேஜர்.

அஹிம்சையை ஸ்தாபிப்பது எப்படி?

——"இந்திரபாலன்"

சிறு பருவத்திலிருந்த மனிதன் அறிவு பெறும் காலையில் முதன் முதலாக அவன் என்ன கற்றுக்கொள்கிறான்? நாம் சுதந்திர புருஷனு யில்லை, அடிமை என்ற படிப்புத் தான். அவன் கற்கும் சகல கல்வியும், அவன் அடையும் நாகரிகம் முதலியனவும், 'நீ அடிமையாயிருக்கிறாயே, உனக்குச் சுகங்கிட்டுவதெங்ஙனம்?' என்பதைத் தான் போதிக்கின்றன.

பழைய காலத்துப் பண்டிதர்கள் நமக்கு இரண்டுவித உபதேசங்கள் செய்தனர். ஒன்று, இந்த உலகத்திலே வாழ்வதற்கு; மற்றொன்று பரலோகத்தைப் பெறுவதற்கு. ஆனால் இன்றைய ஆராய்ச்சி உலகம், அந்தப் பரலோக எண்ணத்தைத் தவிடு பொடியாக்கி விட்டது! ஆயினும் ஆராய்ச்சிக் காலமாகிய இன்றுங் கூட இரண்டு விதமான கல்வி பரவியிருப்பதைப் பார்க்கிறோம். ஒன்று, சமூக ஆராய்ச்சி. மற்றொன்று பொருள்களின் ஆராய்ச்சி; இவைகளே, சமூக விஞ்ஞான மென்றும், பொருள்களின் விஞ்ஞான மென்றும் சொல்லப்படுகின்றன. அப்படியானால் மேற் கூறிய இரண்டு விஞ்ஞானங்களிலிருந்து மனிதனுக்குக் கிடைப்பதென்ன? சமூகத்தின் மத்தியிலே, அவனும் சிரமமின்றித் தன்னுடைய வாழ்க்கையை எவ்வாறு நடத்துவது என்பதே சமூக விஞ்ஞானத்தால் அவன் அடையும் பலன்.

பொருள்களை மனிதன் தன்னுடைய ஆதிக்கத்திற்குக் கொண்டுவர முயலுவதே பொருள் ஆராய்ச்சியின் அபிப்பிராயமாகும். சரித்திரத்தை நாம் புரட்டிப் பார்க்கும் போது, அந்தக் காலத்து மனிதன், இயற்கைச் சக்தியின் விருப்பப்படி நடந்து வந்திருப்பதை நாம் காண்கிறோம். ஆனால் இன்றைய மனிதன் விஞ்ஞான மூலமாக இயற்கையைத் தனக்குக் கீழ்ப்படியச் செய்து தன்னுடைய அனுமதிப்படி நடத்தி வருகிறான். இன்றைய மனிதன் தண்ணீருக்காக, நதியையோ குளத்தையோ நாடி அலைகின்றானில்லை. தண்ணீர் அவனை நாடி ஓடுகின்றது. சூரியன் உதயமாவதைப் பற்றியோ, அல்லது அஸ்தமிப்பதைப் பற்றியோ அவன் கவலை கொள்வதில்லை. அவன் விரும்பினால் பகல் இரவாகிறது. இரவு பகலாகிறது. அதாவது அவனுடைய விருப்பப்படி இயற்கை அவனுக்குத் தொண்டு செய்கின்றது!

மனிதனின் சுதந்திரம்

விஞ்ஞானத்தின் மூலமாக மனிதன் இயற்கையை வெற்றி கொண்டு விட்

டான்; பொருள்களைத் தன் வசப்படுத்தி விட்டான். ஆயினும் அவன், அவனுடைய சமூகத்தின் மீது வெற்றி கொண்டு விட்டானா? அந்தச் சமூகத்தின் ஆணையை அவன் ஒப்புக்கொள்ள வேண்டியவனாகிறான். எத்தனையோ சட்டங்கள் செய்யப்படுகின்றன. அவைகள் எதை உத்தேசித்துச் செய்யப்படுகின்றன? மனிதனை ஒரு வரம்புக்குட் படுத்துவதற்காக. எதற்காக அவனுடைய சுதந்திரத்திற்கு இவ்வித வரம்பு கட்ட வேண்டும்? மனித சமூகத்தின் நன்மைக்காக. சமூகம் என்பதே பல மனிதர்கள் சேர்ந்த கூட்டம் அல்லவா? இவ்விதம், மனித சமூகத்திற்குச் செய்யப்படும் சட்டங்களைப் பார்க்கும் நாம், மனிதனுடைய நன்மைக்காகவே அவனை ஒரு வரம்புக்கு உட்படுத்த வேண்டியிருக்கிறது; அவனுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காகவே அவனை அடிமையாக்க வேண்டியதிருக்கிறது என்ற முடிவுக்கு வருகிறோம்.

வாசகர்களுக்கு, மேலே கூறியுள்ள வாக்கியங்கள் ஒரு புதிர் போலத்தானிருக்கும். அப்படியானால் 'மனித சுதந்திரம்' என்பதுதான் என்ன என்பதை அறிய அவர்கள் ஆவலுறுவது சகஜம். அதே கேள்வியையே போடுவோமே. மனித சுதந்திரம் என்றால் என்ன? அவன் எதை விரும்புகிறானோ அதைச் செய்யும் உரிமையே மனித சுதந்திரம் என்று சுருக்கமாகக் கூறக்கூடும். ஆனால் மனிதன், அவன் விரும்புகிறபடி செய்ய முடியாது. மற்றவர்களுடைய பொருளைக் கொள்ளையடிக்க அவன் விரும்புகிறான். செய்ய முடியுமா? பிறரை அடிக்க விரும்புகிறான். முடியுமா? முடியாது. அப்படியானால், அவன் விரும்பும் காரியம், மற்றவர்களுக்குக் கெடுதி பயப்பதாயில்லாதவரை, அவன்—அந்த மனிதன்—எதை விரும்புகிறானோ அதைச் செய்ய அவனுக்கு உரிமை உண்டு. 'மனித சுதந்திரம்' என்பதற்கு இதுதான் அர்த்தம் என்று பொதுவாகக் கூறலாம்.

மனிதன், எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் ஒரு பிரயோசனத்தைக் கருதியே அவன் செய்கிறான். அதாவது, ஒரு விஷயத்தைப் பூர்த்தி செய்வதற்காக. மனிதன் மட்டுமில்லை; மிருகங்களுங் கூட அப்படித்தான். மனிதனோ அல்லது மிருகமோ வீணாகக் கல்லிலேபோய் மோதிக் கொள்வதில்லை. ஆனால் சாதத்தைக் கண்டால் அதில் ஓடி விழுகிறான் மனிதன். மிருகம் தீனியைக் கண்டால் விடுவதில்லை. இதிலிருந்து நாம் என்ன அறிகிறோமென்றால், மனிதனோ, அல்லது மிருகமோ, தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகவே முயலுவதாக நாம் முடிவு செய்யலாம். மனித சுதந்திரம் என்றால், தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான வழியில் மனிதனுக்கு யாதொரு இடையூறுகளும் இருக்கக் கூடாது என்பதாகக் கருதப்படுகிறது. அப்படி அவன் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முயலும் போது அவனுக்கும் மற்றவர்களுக்கும் ஏதேனும் சண்டை சச்சரவு நேரிடுமானால், ஒரு சட்டத்தைச் செய்து அதன் மூலமோ, அல்லது ஒரு உத்திரவு மூலமோ அதைத் தடுத்து அவனுக்கு ஒரு வழி காட்டப்படுகிறது.

மனிதன் வாழ்வதற்கு, சில பொருள்கள் தேவையாயிருக்கின்றன. அவைகள் இல்லையேல் அவன் வாழ்வது அசாத்தியம். இதனால் அவன் அந்தப் பொருள்களைத் தன்னுடைய ஆதீனத்தில் கொண்டு வர முயற்சிக்கிறான். அதாவது அந்தப் பொருள்களை அவன் சேர்த்துக் குவிக்க முயலுகின்றான். மனித சமூகத்திற்குச் செய்யப்படும் எல்லாச் சட்டங்களுமே இந்தப் பொருள்களைப் பற்றியதாகவே இருப்பதை நாம் பார்க்கலாம். ஏனெனில் அவன் வாழ வேண்டுமானால் இந்தப் பொருள்களில்லாது முடியாதல்லவா? ஆனால் அவன் சேர்க்கும்—குவிக்கும்—பொருள்கள் வளர்ந்து கொண்டு போகப் போக சட்டங்களும் கடுமையாக்கப்படுகின்றன. அந்தச் சட்டங்களைச் செய்யும் மனிதனும் சிரமப்பட வேண்டிய தேற்படுகிறது!

ஹிம்சை

மனித சமூகத்திலே, சட்டம் எதற்காக அமுல் நடத்தப்படுகிறது? அமைதியை நிலை நாட்டுவதற்காக என்று கூறப்பெறுகிறது. அதாவது சமூகத்திலே ஹிம்சை பரவக் கூடாது என்பதே. அப்படியானால் ஹிம்சை என்றால் என்ன? உசிதமற்ற வழியில் பிறருக்குத் துன்பம் கொடுப்பதை ஹிம்சையென்றும் உசிதமான வழியில் பிறருக்குத் துன்பம் கொடுக்கப்படுமானால் அதை அஹிம்சை யென்றும் சொல்லப்படுகிறது. உதாரணமாக, ஒருவனுடைய உணவை மற்றவன் பறிக்காமலிருப்பதற்காக ஏதேனும் கஷ்டம் கொடுக்கப்பட வேண்டியதாயிருந்தால் அதை ஹிம்சையென்று கூறுவதில்லை. இதிலிருந்து நாம் என்ன தெரிகிறோமென்றால், பொதுவாக, பொருள்களைக் காப்பாற்றுவதற்காகச் செய்யப்படும் முயற்சி அஹிம்சை யென்று கூறப்படுகிறது.

அப்படியானால் நாம் இங்கு, பொருள்கள் அதாவது சம்பத்து என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுவது அவசியமல்லவா? மனிதன் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக முயற்சிக்கிறான், உழைக்கிறான். தன்னுடைய முயற்சியினால், உழைப்பினால் அவன் எந்தப் பொருளை உற்பத்தி செய்கிறானோ அது அவனுடைய உடைமை—சொத்து—ஆகிறது. அப்படியானால் அவன் உண்டாக்கிய அந்த உடைமையை அனுபவிப்பதற்கும்; அதை உபயோகிப்பதற்கும் அவனுக்குப் பூரண உரிமையிருக்க வேண்டுமல்லவா? ஒவ்வொரு மனிதனும் தானே உழைத்து, அந்த உழைப்பால் உண்டாகும் உடைமையை அனுபவித்துக் கொண்டிருப்பானாகில் மனித சமூகத்திலே யாதொரு சண்டையோ, சச்சரவோ உண்டாவதற்குக் காரணமேயில்லை. ஆனால் அப்படியிருக்கிறதா? அதற்குப் பதிலாக சமூகத்தில் எங்கு பார்த்தாலும் சண்டையும் சச்சரவுமே நமக்குக் காட்சியளிக்கின்றன. அமைதியென்பது குதிரைக் கொம்பாகி விட்டது! அப்படியானால் அதற்குரிய காரணங்களை நாம் ஆராய வேண்டாமா?

உடமை—அல்லது சொத்து

மனித சமூகத்திலே நடைபெறும் சண்டைகளையும் போராட்டங்களையும் பற்றி நாம் ஆராய வேண்டுமானால், முதலில், நாம் இவைகளுக்குக் காரணமாயுள்ள, உடைமை, அதாவது

சொத்து, அதனுடைய வளர்ச்சி இவைகளைப் பற்றி ஆராய வேண்டும். ஆதிகால மனிதன், தன்னுடைய அன்றாட வாழ்க்கைக்கு எதை உபயோகித்தானோ அதுவே அவனுடைய சொத்தாயிருந்தது. உதாரணமாக, அவன் பழங்களைத் தின்று ஜீவித்தான் என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் பழங்கள்தான் அவனுடைய உடைமையாயிருந்தன. பின்னே அவன் கொஞ்சம் நாகரிக பாதையில் பிரவேசம் செய்த காலையில், அந்தப் பழங்களை மரத்திலிருந்து பறிப்பதற்கு ஒரு தடியை உபயோகிக்க ஆரம்பிக்கிறான். இப்பொழுது அந்தப் பழங்களைப் பார்க்கிலும் இந்தத் தடிக்கு அதிக முக்கியத்துவம் ஏற்படுகிறது. ஏனெனில் தடியினால் அதிக் சகாயமிருக்கிறதல்லவா? இப்பொழுது இந்தத் தடியும் சேர்ந்து அவனுடைய சொத்தாகி விட்டது. அப்படியானால் இங்கு 'சொத்துக்கள் அதாவது உடைமைகள் இரண்டு விதம் ஆவதை நாம் காண்கிறோம். ஒன்று, மனிதனுடைய உபயோகமாயிருப்பது. அதாவது மேற் கூறிய பழங்கள். இரண்டாவது, அந்த உபயோகப் பொருளை பெறுவதற்குச் சகாயமாயிருப்பது. அதாவது தடி. இவற்றில் முந்தியதை உற்பத்திப் பொருள் என்றும், பிந்தியதை உற்பத்திச் சாதனம் என்றும் கூறுவார்கள். இவற்றில் உற்பத்திப் பொருளைப் பார்க்கிலும், உற்பத்திச் சாதனங்களுக்குத் தான் அதிக மகத்துவம் உண்டென்பதை இங்கு வாசகர்கள் ஞாபகத்திலிருத்திக் கொள்ள வேண்டும். உதாரணமாக, வயல், பழம் கொடுக்கிற மரங்கள், தோட்டங்கள், பசு, உழவு மாடுகள் முதலியன. தான்யம் வயலிலிருந்து கிடைக்கிறது. இங்கு தான்யம் உற்பத்திப் பொருள்; வயல் உற்பத்திச் சாதனம். அதே போல், பழங்கள் உற்பத்திப் பொருள்; தோட்டமும் அதிலுள்ள மரங்களும் உற்பத்திச் சாதனம். பால் உற்பத்திப் பொருள்; பசு உற்பத்திச் சாதனம். பாலைப் பார்க்கிலும் பசுவுக்குத்தான் அதிக மகத்துவம் உண்டென்பதை சாதாரணமாக யாவரும் அறிந்திருக்கலாம். மேலே கூறியபடி, உற்பத்திப் பொருள்களைப் பார்க்கிலும், உற்பத்திச் சாதனங்களுக்குத்தான், அதாவது வயல், தோட்டம், மரங்கள், பசு இவைகளுக்குத்தான் அதிகமான முக்கியத்துவம் உண்டு. எந்த ஒரு சட்டத்தையும் நீங்கள் கூர்ந்து கவனிப்பீர்களானால், அந்தச் சட்டம், சமூகத்திலே மேலே கூறப்பட்ட உற்பத்திச் சாதனங்களுக்காக ஒருவருக்கொருவர் கலகம் செய்து கொள்ளாமல் தடுப்பதற்காகவே செய்யப் பட்டிருப்பதைக் காணலாம். இது மட்டுமில்லை; ஒரு சர்க்கார் ஏன் ஸ்தாபிக்கப்படுகிறது? அது ஏன் நிலை நாட்டப்படுகிறது என்று பார்த்தோமானால் அதுவும், இந்தச் சொத்துக்களை, அதாவது, உற்பத்திப் பொருள்களையும்—உடைமைகளையும்—உற்பத்திச் சாதனங்களையும் காப்பாற்றுவதற்காகத்தான் என்பதை நாம் லேசாக அறியலாம். சுருக்கமாகக் கூறப்போனால், இதனுடைய அர்த்தம், யாரிடத்திலே சொத்து இருக்கிறதோ, அதை மற்றவர்கள் பறிக்க விடக்கூடாது என்பதே யாகும். வாசகர்களே, நீங்கள் இங்கு ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். மேற்கூறிய உற்பத்திப் பொருள்கள், அதாவது, சொத்து, உற்பத்திச் சாதனங்

கள இவைகள், மனித சமூகத்திலே, எந்த ஒரு தனி மனிதனிடத்திலோ, அல்லது ஒரு கூட்டத்திலோ இருக்கிறதோ அவர்களுடைய எண்ணப்படி அவர்களுடைய நன்மைக்குத் தகுந்த வாறேதான் சட்டங்கள் செய்யப்படும் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. இவ்விதம் செய்யப்படும் சட்டங்களை நிலை நாட்டுவதும், சமூகத்தினுடைய முறைகள், நடவடிக்கைகள் இவை மாறாமல் காப்பாற்றுவதுமே சர்க்காருடைய வேலை. இதிலிருந்து நாம் என்ன அறிகிறோம்? சர்க்காருக்கும், சொத்துக்களுக்கும் அதிகமான சம்பந்தம் இருப்பதாய்த் தெரிகிறோமல்லவா? அப்படியானால் நமக்கு, சர்க்கார் என்றால் என்ன, அது எவ்விதம் உதயமாகிறது என்ற கேள்வி எழும்புவது சகஜந்தானே? அடுத்தது அதைப்பற்றி ஆராய்வோம் வாருங்கள்.

சர்க்கார்

பகவான், ஆம், அந்தக் கருணை மூர்த்தியாகிய கடவுள், மக்களின் மீது திருவருள் சுரந்து அவர்களைக் காப்பாற்றுவதற்காகவே ராஜாவைப் படைக்கிறார்; அந்தக் கடவுளினுடைய ஆணைப்படியும் எண்ணப்படியுமே ராஜா அரசு செலுத்துகிறார் என்பது பழைய கால நம்பிக்கை. ஆனால், எத்தனையோ சிம்மாசனங்கள் கலகலத்துப் போய் மாறி வருவதைத் தன் கண் முன்னாலே பார்த்த மனிதன், அந்தக் கடவுளுக்கும் இந்த ராஜாவுக்கும் ஒரு சம்பந்தமுமில்லை; இது மனித சமூகத்திலே ஏற்படும் நிலைமை, அதனுடைய சக்தி இவைகளைப் பொறுத்ததாயிக்கிறது ராஜாக்கள் உற்பத்தியாவதும் மாறுவதும், என்ற முடிவுக்கு வருகிறான். ஏனெனில் இன்று எத்தனையோ தேசங்களிலே ராஜாவே இல்லாமல், மனித சமூகம் தன்னுடைய பிரதிநிதிகள் மூலமாக ஆட்சி நடத்தி வருகிறதல்லவா?

இன்னொரு விஷயம். அதாவது, ராஜாவோ, அல்லது ஒரு சர்க்காரோ, சமூகத்திலே ஒரு ஒப்பந்தத்தின் மூலமாய் நிலை நாட்டப் பெறுவதாய்ச் சொல்லப்படுகிறது. 'சமூகத்திலே மனிதர்கள் ஒருவருக்கொருவர் கலகம் விளைவித்துக் கொண்டு, சிறிய மீனைப் பெரிய மீன் விழுங்குவதைப் போன்று, பலமுள்ளவன் பலமற்றவனை அடித்துக் கலகம் ஏற்படும் நிலைமையில் அவர்கள் தங்களுக்குள் ஒரு ஒப்பந்தம் செய்து ஒரு ராஜாவை ஏற்படுத்தி சகல பொறுப்புகளையும் அவர் மீது சுமத்திவிடுங் காலையில் ஒரு சர்க்கார் ஸ்தாபிக்கப்படும்' என்று மனுஸ்மிருதியில் மனு கூறியிப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்த விஷயம் நல்லதாகவும் யுக்திக்குப் பொருத்தமாகவுமே தோன்றுகிறது. மனித சமூகத்திலே இவ்விதம் சண்டை சச்சரவுகள் உண்டாவதும் எளியாரை வலியார் வாட்டுவதும் சகஜந்தான் என்று அறிகிறோம். ஆனால் இங்கு இன்னொரு விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். கலகம் விளைவித்துக் கொண்டு ஒருவருக்கொருவர் பறிப்பதாகச் சொல்லப்படுகிறதே, இங்கு யார் பறிக்கிறார்கள், யாரிடத்திலிருப்பதைப் பறிக்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டுமல்லவா? இல்லாதவன் உடையவனிடம் இருப்பதைப்பறிக்க முயலுகிறான். இன்னும் கொஞ்சம் வெள்ளையாகச் சொன்னால், மேற் கூறப்படும் சண்டை பலவானுக்கும் பலமற்ற

வனுக்கும் நடப்பதாயில்லை; இல்லாதவனுக்கும் உடையவனுக்கும் அதாவது ஏழைகளுக்கும் தனவந்தர்களுக்கும் இடையிலே தான் போராட்டம் நடக்க முடியும். இங்கு உடைமை -அதாவது-சொத்து என்பதை, உற்பத்திச் சாதனங்கள் என்ற அர்த்தத்திலேயே நாம் கொள்ள வேண்டும். இதைப் பற்றி நாம் மேலே விஸ்தாரமாக ஆராய்ந்திருக்கிறோம் அல்லவா? யாரிடத்திலே அந்த உற்பத்திச் சாதனங்கள் நிறைந்து கிடக்கின்றனவோ அவர்களுக்குத்தான் சமூகத்திலே நிரம்பச் செல்வாக்கிருக்கிறது. அவர்கள் தான் அந்தச் சமூகத்தின் மீது அதிகாரம் செலுத்துவார்கள். யாரிடத்திலே இந்த உற்பத்திச் சாதனங்கள் இல்லையோ, அதிகார மற்றவர்களாயிருக்கிறார்களோ அவர்கள், தாங்கள் இந்த உலகத்திலே வாழ வேண்டுமானால் அந்த உற்பத்திச் சாதனங்களையும், அதிகாரத்தையும் கைப்பற்ற வேண்டும் என்று எண்ணி அதற்காக முயற்சிக்கின்றார்கள். அப்பொழுது, இந்த இல்லாதவர்கள் சண்டை செய்கிறார்கள். இதனால் அமைதியே கெட்டுவிட்டது; ஹிம்சையில் இறங்கிவிட்டார்கள் என்று உடையவர்கள் கருதுகிறார்கள். இப்பால் இவ்விதம் சமூகத்திலே ஏற்படும் சண்டை, அமைதியின்மை, ஹிம்சை இவற்றைத் தடுப்பதற்கான ஒரு முறை ஏற்பட வேண்டுமல்லவா? இவ்விதம் ஏற்படுத்தும் முறைகள் தான் அரசியல், அல்லது சர்க்கார் என்ற உருவம் பெறுகிறது. இதிலிருந்து நாம் அறிவது என்ன? இல்லாதவர்களின் நன்மைக்காகவல்ல, உடையவர்களைக் காப்பாற்றுவதற்காகவே சர்க்கார் ஸ்தாபிக்கப்படுவதாய், நாம் அறிகிறோமல்லவா? உற்பத்திச் சாதனங்களைத் தங்களுடைய ஆதீனத்திலே வைத்திருப்பவர்களைக் காப்பாற்றும் பொருட்டு ஒரு சர்க்கார் ஸ்தாபிக்கப் பட்ட பின் அதைத் தொடர்ந்தே மத கிரந்தங்களும் உபதேசங்களும் கிளம்புகின்றன. "சொத்தைக் காப்பாற்றுவது மனிதனின் கடமை, அதைப் பறிப்பது பாவம்" என்ற உபதேசம் போதிக்கப்படுகிறது.

மனித சமூகத்திலே, சொத்து என்பது, மனிதர்களின் உபயோகப் பொருளாயும், உற்பத்திச் சாதனங்கள், அதை உடையவர்களின் உழைப்பினால் அவர்களுடைய வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாயும் இருக்கிறவரை அவற்றைச் சமூகத்திலே யாவரும் தங்களது நன்மைக்காகக் காப்பாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகிறது. ஆனால் நிலைமைகள் ஒருபடித்தாயில்லையே. உற்பத்திச் சாதனங்களில்லாதவர்கள், தங்களுடைய வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மற்றவர்களிடம் அடிமையாக வேண்டிய தேற்படுகிறது. ஒரு உதாரணமாக இதைப் பார்ப்போம். இரண்டு குடும்பங்களுக்குள் சண்டை நடப்பதாக வைத்துக் கொள்வோம். இதில் ஒரு குடும்பம் தோற்று விடுகிறது. ஜெயித்த குடும்பம் தோற்ற குடும்பத்தினுடைய, சொத்துச் சுகம், ஆடு மாடு, பூமி புலன்களை பறித்துக் கொள்கிறது. அப்படியானால் இந்தத் தோற்ற குடும்பம் இந்த உலகத்திலே வாழ்வதெப்படி? அதற்கு ஒரே ஒரு வழியிருக்கிறது; அந்தத் தோற்ற குடும்பம் ஜெயித்த குடும்பத்தைத் தனது எஜமானனாக ஏற்று, அதனுடைய எண்ணப்படி உழைத்து அத

னுடைய தயவிலே தன்னுடைய வாழ்க்கையை நடத்த வேண்டும்! ஆனால் மேலெழுந்த வாரியாக தர்ம நியாயப்படி பார்ப்போமானால் இந்த விதமாக ஒருவருக்கொருவர் எஜமான னாவதும் மற்றவர்களை அடிமைப் படுத்துவதும் பாவ மென்றும் அதர்ம மென்றும் கூறுவார்கள். ஆனால் நியாயமும் தர்மமும், எஜமானனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது என்ற சமா தானம் கூறும் போதுதான். இந்த விதமான நிலைமைகள் ஏற்படுங்காலே சாதாரண காலத்திலே, தர்மத்திற்கும், நியாயத்திற்கும் என்ன அர்த்தம் கொள்ளப்படுகிறதோ, அது இப் போது கொள்ளப் பெறுவதில்லை. இந்தக் காலத்திலே அந்தத் தர்மமும் நியாயமும் என்ன போதிக்கின்றன? 'ஓ அடிமையே! நீ உன்னுடைய எஜமானனின் ஆணையைச் சிரமேற் கொண்டு, அவனுடைய நன்மைக்காக உன்னை நீயே அழித்துக் கொள்' என்று போதிக்கின்றன. அடிமைக்கு அவன் வாழும் சமூகத்திலே யா தொரு செல்வாக்குமில்லை. எஜமான னின் சொத்தாகி விடுகிறான். இந்தச் சொத்திலிருந்து லாபம் பெறுவது எஜ மானனுடைய அதிகாரமாகவும் கட மையாகவும் ஆகிவிடுகின்றன. இதிலே யாருக்கும் ஹிம்சை புலப்படுவதில்லை. ஆனால் இந்த அடிமைகள், அதாவது உற்பத்திச் சாதனங்கள் இல்லாத, தொழிலாளிகளும் ஏழைகளுமாகிய இந்த அடிமைகள், தங்களது எஜமா னனிடம், எங்களுடைய உழைப்புக் குத் தகுந்த கூலி வேண்டும். ஏன்? இந்த உலகத்திலே நாங்கள் வாழ வேண்டு மென்று கொஞ்சம் உரக்கச் சத்தம் போட்டுக் கேட்க ஆரம்பித் தார்களானால், அவர்களை துரோகிகள், வைத்தியக்காரர்கள், அநியாயக்காரர் கள், ஹிம்சையிலிறங்கி விட்டார்கள் என்று கூறப்படுகிறது.

மனித சமூகம் வளர்ந்து வர வர அதனுடைய முன்னேற்றமும் தொடர்ந்தே வருகிறது. புதிய புதிய விஷயங்கள் கண்டு பிடித்து அமுலுக்குக் கொண்டு வரப்படுகின்றன. இத னால் உற்பத்திப் பொருள்கள் ஜாஸ்தி யான அளவில் குவிக்கப்படுகிறது. ஆனால் இவ்வளவு முன்னேறிப் பொருள்களைக் குவித்துங்கூட, பொருள்களை உண்டு பண்ணுகிற வழிகள் தான் மாறியிருக்கின்றனவே தவிர அந்தப் பொருள்களை உற்பத்தி செய்கிறவர்களாகிய எஜமானனுக்கும் தொழிலாளிக்கும் உள்ள சம்பந்தத்தில் எந்தவித மாற்றத்தையுமே காணோம். அது மாறாமல் அப்படியே தானிருக்கிறது. தொழிலாளி எஜமான னுடையவும், விவசாயினுடையவும் உழைப்பை, அந்த எஜமானன் தன தாக்கிக் கொள்ளுகிறான். நியாயமும், தர்மமும் அவன் பக்கந்தான் ஒலிக்கின்றன. காப்பாற்றவோ சர்க்கா ரிருக்கிறது.

சமூகத்திலே சொத்தை எவ்விதம் நோக்க வேண்டும்?

வட்டிலிலே கொட்டி யிருக்கும் சாதம், செம்பிலே வைத்திருக்கும் தண்ணீர், இடையிலே உடுத்தியிருக்கும் வேஷ்டி, மேலே போட்டிருக்கும் சட்டை இவைகளெல்லாம் சொத்துக்களாகுமா? இவைகள் உப யோகமாகி அழிந்து போகும் பொருள்கள். அவசியத்துக்கும், நடை முறைக்கும் உகந்த பொருள்களாக இவற்றைக் கொள்ள வேண்டும். வயல், பூமி, தோட்டம், துறவு, வீடு, பாங்கியில் போட்டிருக்கும் பணம்,

கம்பெனிகளிலே எடுத்திருக்கும் பங்குகள், தொழிற்சாலைகள், மில்கள் இவைகளைத்தான் சொத்துக்களாகக் கொள்ள வேண்டும். எது பொருளை உற்பத்தி செய்கிறதோ அதைத்தான் சொத்து என்று கொள்ள வேண்டும்.

சொத்து என்பதுதான் என்ன? அது எங்கிருந்து உண்டாகிறது? என்பதை நாம் ஆராயும் போது, இந்தச் சொத்து மனிதனுடைய உழைப்பிலிருந்து உண்டாகிறது என்பதைக் காண்கிறோம். மனிதனுடைய உழைப்பே சொத்தாகப் பரிணமிக்கிறது. அந்த உழைப்பு எத்தனையோ பொருள்களை உற்பத்தி செய்கிறது. மற்றவர்களுடைய சொத்துக்களைப் பறிப்பது அநீதி; ஹிம்சை. அப்படியானால் இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து நோக்குவோம். சொத்து என்றால் என்ன? பெரிய அளவிலே, எத்தனையோ பேருடைய உழைப்பின் பலனை ஒரு இடத்திலே திரட்டி வைத்திருக்கும் குவியல். இன்னொரு விதமாகச் சொன்னால், தான் யாதொரு வகையிலும் சிரமப் படாமல், மற்றவர்களுடைய உழைப்பைச் சேர்த்துக் குவித்திருக்கும் ஒரு மேடு. உழைப்புத்தான் சொத்து என்று நாம் ஏற்கனவே அறிந்திருக்கிறோம். அப்படியானால் இங்கு பல பேருடைய உழைப்பை, அதாவது அவர்களுடைய சொத்தைப் பறித்துச் சேர்க்கப் படுகிறதே அது ஹிம்சை யில்லையா? அவர்களுடைய உழைப்புக்குத் தகுந்த கூலி கொடாது, அதிலிருந்து சில பாகத்தை எடுத்துச் சேர்த்துக் குவிக்கப் படுகிறதே அது ஹிம்சை யில்லையா? அது இப்போது மட்டுக்குமில்லையே? எதிர் காலத்துக்கு மன்றோ ஹிம்சைக்கு அஸ்திவாரமாயமைகிறது!

சொத்தும் ஹிம்சையும் ஒன்றுதானோ?

உபயோகத்திற்காக, பழக்கத்திற்காக சொத்து வைத்துக் கொள்வதை ஹிம்சை யென்று கூற முடியாது. ஆனால் உற்பத்திச் சாதனங்களின் மீது ஒருவருடைய ஆதிக்கம் அமைவது ஹிம்சைக்கு மார்க்கமாகிறது. இந்த விதமான ஹிம்சையை நாம் சமூகத்திலே தினந்தோறும் பார்க்கிறோம். ஆனால் சமூக அமைப்பு, நடைமுறை இவைகள் ஒரு போர்வையாயிருப்பதால் இந்த ஹிம்சை ஸ்பஷ்டமாகப் புலப்படுவதில்லை. ஒரு பலவான் ஒரு பலமற்றவனிடத்திலேயிருந்து ஏதாவது ஒரு சாமானைப் பறிக்கும் போது நம்முடைய ரத்தம் கொதிக்கிறது. ஆனால் உற்பத்திச் சாதனங்களை ஆதிக்கத்தில் வைத்திருக்கும் ஒருவர் ஆயிரக் கணக்கானவர்களைத் தன்கீழ்வைத்து அவர்களிடத்திலே அதிகப் படியான உழைப்பைப் பெற்று அவர்களுக்குக் குறைந்த கூலி கொடுப்பது நமக்கு அநியாயமாகவோ, ஹிம்சையாகவோ தோன்றுவதில்லை. ஏனெனில் இந்தச் சொத்து என்பது நல்லதொரு வேஷத்தைத் தரித்துக் கொண்டிருப்பதால் சமூகத்திலே அது நியாயமாகக் கருதப் படுகிறது.

ஹிம்சை யிருக்கிறதே அது சமூகத்திலே அமைதியைக் கெடுத்து விடுகிறது; துக்கத்திற்கு ஏதுவாயிருக்கிறது. இதனாலே சமூகம் அதை வெறுப்பது சகஜம். புத்தர் பெருமான், ஏசுநாதர் ஆகிய இந்த மஹான்களெல்லாரும் ஹிம்சையை வெறுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு, இந்தச்

சொத்தை உதறித் தள்ளி விட்டு வைராக்கிய புருஷர்களாய் வெளி வரும்படி மனிதர்களைப் பார்த்து உபதேசம் செய்தனர். ஆனால் அது நடைபெறவில்லை. சொத்தில்லாமல் மனிதன் தன்னுடைய நிர்வாகத்தை நடத்த முடியாது. இதனால் மனித சமூகத்திலே சொத்தும் இருக்கிறது. தொடர்ந்தே ஹிம்சையுமிருக்கிறது. மஹாத்மா காந்தி இந்த ஹிம்சையை ஒழிப்பதற்காகத் தன்னுடைய உயிரையுங்கூட அர்ப்பணம் செய்யத் தயாராயிருக்கிறார். அவருங் கூட தியாகத்தைப் பற்றியும், வைராக்கியத்தைப் பற்றியும் உபதேசம் செய்கிறார். அவருடைய உபதேசத்தைச் சிரமேற் கொண்ட சிலர் தக்ளியும் கையுமாய் நூல் நூற்கவும் செய்கிறார்கள். ஆனால் எங்கு பார்த்தாலும் இந்த ஹிம்சையானது காட்சியளிப்பதிலிருந்து குறைந்ததாகக் காணோம்.

அப்படியானால், இதற்கு விடிவு காலமே கிடையாதா? இந்த ஹிம்சை நடைபெற்றுக் கொண்டேதானிருக்குமா—இருக்க வேண்டுமா? என்ற கேள்வி எழுவது சகஜம். ஆனால் ஒரே ஒருவர்தான் — அவர் தான் கார்ல் மார்க்ஸ்—இதற்குத் தகுந்த காரணத்தைத் தைரியமாகச் சொன்னவர். அது மட்டுமில்லை; அவர் வழியும் காண்பித்திருக்கிறார். அவர் தியாகம், வைராக்கியம் என்ற உபதேசம் செய்யவில்லை. உழைக்க ஆரம்பித்தால் சொத்துதானே உண்டாகிறது. இதை அநுபவிப்பதில் ஹிம்சைக்கும் பாபத்துக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? ஆனால் பாபமும் ஹிம்சையும் எங்கேயிருக்கிறது? மற்றவர்களுடைய உழைப்பைப் பறிப்பதில். சொத்தும், உற்பத்திச் சாதனங்களும் தனித்த மனிதனுடைய உடைமையாயிருக்கக் கூடாது. சமூகத்தின் ஆயிரக்கணக்கான மனிதர்கள் சேர்ந்து சொத்துக்களை உற்பத்தி செய்கின்றார்கள். இதனால் இந்த உற்பத்திச் சாதனங்கள் அந்தச் சமூகத்தின் பொதுச் சொத்தாகட்டும். இவர்கள் சேர்ந்து உழைக்கும் உழைப்பினால் கிடைக்கும் பலனை யாவரும் சேர்ந்து அநுபவிக்கட்டும். இதுதான் ஹிம்சையை, சமூகத்திலிருந்து, ஏன், இந்த உலகத்திலிருந்தே தொலைப்பதற்கு ஒரே வழி.

இதை விட்டு விட்டு, ஹிம்சை ஹிம்சை யென்று வெறும் கூச்சல் போடுவதனாலோ, அல்லது, பத்திரிகைகளில் அதைப் பற்றிப் பக்கம் பக்கமாய் எழுதுவதினாலோ, சப்தம் ஹிம்சையாகத் தொனிக்கிறது, அந்தக் காரியம் ஹிம்சையாகத் தென்படுகிறது என்று கூறுவதினாலோ, இடது கன்னத்தி லடிப்பவனுக்கு வலது கன்னத்தைக் காட்டுவதினாலோ இதுவரை ஹிம்சை இந்த உலகத்தை விட்டு அழிந்ததுமில்லை, அழியப்போவதுமில்லை. ஹிம்சையை நிந்திக்கும் நாம் அதை ஒழிக்க வேண்டுமானால் தனி உடைமை வழக்கமிருக்கிறதே அதை அகற்ற முற்பட வேண்டும். ஏனெனில், இதனாலேயே ஹிம்சைக்கு ஏதுவாயிருக்கும் உற்பத்திச் சாதனங்கள் ஒருவருடைய ஆதீனத்திலிருக்க முடியாமற் போகும்.

(மொழி பெயர்ப்பு)

கட்டுரை எழுதுவது இலேசா?

—ஸ்ரீ ராமச்சந்திரன்

மாடியில் ஈஸிசேரில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு சப்தம் கேட்க நான் பின் திரும்பி பார்த்த போது என் நண்பன் நரசிம்மன் நாற்காலியை என் பக்கம் தள்ளி அதில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

நான் அப்பொழுது தீவிரயோசனையில் ஆழ்ந்திருந்தேன். என் நண்பன் தான் அங்கு 15 நிமிஷத்திற்கு முன்னமேயே வந்திருந்ததாகவும் நான் அவனை அவ்வளவு நேரமும் கவனிக்காததால் நாற்காலியை அப்படி தட்டி என்னை விழிப்படையச் செய்தானென்றும் சொன்னான்.

அவ்வளவு தீவிர யோசனை செய்ய பத்திரிகை சமாச்சாரம்தான் காரணம் என்பதைக் கேட்கவும் வேண்டுமோ? என்னை இப்படி யோசனையில் ஆழ வைத்தது யுத்த சமாசாரமல்ல. ஹிட்லரின் 'துராக்ரமிப்பினால்' நான் வியப்படையவில்லை. அல்லது பிரிட்டிஷ் மந்திரி சபையைப் பற்றியும் நான் கவலைப்படவில்லை. இது மூளையை வேலை செய்யும்படி செய்த ஒரு சமாச்சாரம்.

ஒரு பெண்மணி. ஆந்திர தேசத்தினள். ஆங்கிலத்தில் அபார சாமர்த்தியமுடையவள். தமிழிலும் வல்லவள். ஒரு கூட்டத்தில் பின் வருமாறு பேசியிருந்தாள் :—'கட்டுரை எழுதுவதா, பூ! அதைப் போல் இலேசானது வேறொன்றும் இல்லை' என்று பேசியிருந்ததைக்கண்டவுடன் திடுக்கிட்டேன். பத்திரிகைக்குக் கட்டுரை எழுதுவது அவ்வளவு சுலபமானதென்று நான் எண்ணியதே கிடையாது. பத்திரிகைக்குக் கட்டுரை எழுதி எழுதி கை தேர்ந்தவன் என் நண்பர் நரசிம்மன். ஆனால் அவற்றில் ஒரு கட்டுரையாவது ஒரு பத்திரிகையிலும் வெளி வந்ததில்லை. மற்று ஒரு சிலர் தங்கள் கட்டுரையிலேயே தாங்கள் கட்டுரை பிரசுரிக்கப்படுவதைப் பற்றிச் சந்தேகம் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

ஆனால் மறு நிமிஷம் என் கண்கள் அடுத்த வரியைப் பார்த்தன. பத்திரிகைக்குக் கட்டுரை எழுதுவது வெகு சுலபம் என்று அப் பெண்மணி பேசினதைத் தம் பத்திரிகையில் போட்ட பத்திராசிரியர் 'அப்படியா?' என்று ஒரு ஆச்சரியக் கேள்வியை போட்டிருந்தார். அதைப் படித்த பிறகுதான் என் மனம் சமாதானமடைந்தது.

கட்டுரை எழுதுவதைப் பற்றி கட்டுரையாளன் என்ற முறையில் என் அபிப்பிராயம் என்ன வென்று கேட்

பதற்காகவே தான் வந்ததாக நரசிம்மன் கூறினதைக் கேட்டதும் நான் ஆச்சரியம் அடைந்தேன். பிறகு அவருக்கு நான் எப்படி கட்டுரையாளராக ஆனேன் என்பதைப் பற்றியும், கட்டுரை எழுதுவதைப் பற்றி அந்த ஆந்திரப் பெண்மணி பேசியிருந்ததைப் பற்றியும் அதற்கு ஒரு பத்திராசிரியர் கேட்ட கேள்வியைப் பற்றியும் என் அபிப்பிராயத்தை தெரிவிக்க ஆரம்பித்தேன். அதையே வாசகர்களுக்கும் சமர்ப்பிக்கிறேன்.

எனக்கு பத்திரிகை படிப்பதில் மிக்க இளம்பிராயத்திலிருந்தே பிரியம். என் தகப்பனார் ஒரு நாவலாசிரியர். பத்திரிகைகளுக்கு எழுத வேண்டும் என்ற எண்ணமும் எனக்குத் தோன்றலாயிற்று. ஆனால் என்ன எழுதுவது, எதைப்பற்றி எழுதுவது என்பதைப்பற்றியெல்லாம் நான் யோசித்ததே கிடையாது. ஒரு நாள் என் நண்பன் கையில் ஒரு பத்திரிகையுடன் என்னிடம் வந்து தன் கட்டுரை அதில் பிரசுரமாயிருப்பதாகத் தெரிவித்தான். நான் அதிசயத்துடன் வாங்கிப்பார்த்ததில் அவன் சொல்லுவது உண்மையாக இருந்தது. என்னுடைய கட்டுரை எழுத வேண்டுமென்கிற எண்ணமும், ஆசையும் பொங்கி யெழுந்தன. ஆனால் என்ன? கட்டுரை எழுத வேண்டும்; எழுத வேண்டும் என்று எண்ணிக் கொண்டேயிருந்தேனே தவிர எழுதத் தீவிரமாக முயற்சிக்க வில்லை. ஒரு சமயம் எழுத வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு எழுத உட்காருவேன். விஷயமே அகப்படாது. அப்படி விஷயம் அகப்பட்டால் அதைப்பற்றி என்ன எழுதுவதென்று யோசித்துக் கொண்டேயிருப்பேன். எவ்வளவோ காகிதங்களை எழுதிக் கிழித்துப் போட்டிருக்கிறேன்.

கடைசியாக ஒரு நாள் 'பார்க்'கில் உட்கார்ந்து கொண்டே யிருக்கும் போது திடீரென்று ஒரு விஷயம்பற்றி எழுத வேண்டுமென்று யோசனை தோன்றிற்று. அதைப் பற்றி யோசித்துக் கொண்டே வீடு சேர்ந்தேன். ஒரு கட்டுரையும் உடனே எழுதினேன். நல்ல விஷயம். சிறு கட்டுரை. ஆரம்பமே அழகாயிருந்தது. கட்டுரையில் நம் நாட்டின் உயர்வை உயர் மொழிகளில் சித்திரித்திருந்தேன். அழகான உவமைகள், தேசியத்தையும் கொண்டு வந்து கட்டுரையில் கடைசியாய் புகுத்தியிருந்தேன். மொத்தத்தில் கட்டுரை எனக்கு மிக நன்றாகத் தென்பட்டது. பின் அதை வேறு ஒரு காகிதத்தில் அழகாக எழுதி கடவுளை நினைத்துக் கொண்டே பத்திரிகாலயத்திற்கனுப்பினேன்.

எனக்கு வேறு வேலைகள் இருந்ததால் சில தினங்களில் நான் கட்டுரை எழுதி அனுப்பியதைப் பற்றிய ஞாபகமேயில்லாது இருந்து விட்டேன். திடீரென்று ஒரு நாள் நான் (தபால்களைப் பார்க்கும் போது) என் தபால்களில் ஒரு பத்திரிகை யிருப்பதைக் கண்டவுடன் ஆச்சரியத்துடன் எடுத்துப் பார்க்க அது நான் கட்டுரை அனுப்பிய பத்திரிகாலயத்திலிருந்து வந்ததாயிருந்தது. ஆகவே என் கட்டுரை அதில் கட்டாயம் பிரசுரமாயிருக்கும் என்று துணிந்தேன். இருந்தும் பத்திரிகையைப் புரட்டி அதில் ஒரு பக்கத்தில் என் பெயரும் நான் எழுதியனுப்பிய கட்டுரையும் பிரசுரமாயிருந்ததைப் பார்க்கும்

இந்தியாவும் இங்கிலாந்தும்

"தேவ குமாரன்"

அநேக ஆயிர வருஷங்களாய் நாகரிகத்தில் வரவர முதிர்ந்து கடைசியில் ஒரு தேசம் முன்னுக்கு வருகின்றது. இதற்கு உதாரணமாக இந்தியா, ஆஸ்டிரியா, பர்ஷியா, ஈஜிப்டு முதலானவைகளைக் கூறலாம். ஆனால் இந்தியா மற்றத் தேசங்களை விட ஒரு விதத்தில் மாறுபடுகின்றது. அந்தத் தேசங்கள் இறந்தன; இந்தியா இன்னும் உயிரோடிருக்கின்றது. உலக சரித்திரங்களில் முதன்மையாய் நிற்க வேண்டி, இந்தியா தற்காலத்தில் பல அறிகுறிகளைக் காட்டிக்கொண்டு வருகின்றது. இந்தியா பண்டைக் காலம் முதற்கொண்டு மிகவும் நாகரிகமுள்ளதாய் இருந்தது என்பதை நிச்சயப்படுத்த அநேக நாணயங்களும் சிறந்த கட்டி

வரையிலும் என் மனம் ஒரு வழியில் இல்லை.

என் கட்டுரையை, ஒரு தரம், இரண்டு தரம், பல தரங்கள் படித்தேன். நண்பர்களிடமெல்லாம் காண்பித்தேன். அன்று முழுவதும் ஒரு மாதிரி கர்வங் கொண்டேயிருந்தேன்.

பிறகு கொஞ்ச நாட்கள் கழித்து மறுபடியும் கட்டுரை ஒன்று எழுதினேன். அதுவும் பிரசுரமாயிற்று. பின் வேறொரு பத்திரிகைக்கு ஒரு கதை எழுதினேன். அதுவும் பிரசுரிக்கப்பட்டது.

ஆனால் ஒவ்வொரு கட்டுரையாளரும் என்னைப் போல முதன் முதலிலேயே வெற்றியடைய முடியுமென்பது மிகச்சிரமம். என்னுடைய ஒவ்வொரு கட்டுரை எழுதி முடிப்பதற்கு முன் பல நாட்கள் கழிவதுண்டு. விஷயங்கள் அகப்படுவதில்லை. விஷயமகப்பட்டாலும் அதைப் பற்றிப் பல தினங்கள் யோசிப்பதுண்டு. ஆனால் என்னைப் பொறுத்த மட்டில் நான் கட்டுரை எழுத உட்கார்ந்து விட்டால் அதை முடிக்காமல் எழுந்திருப்பது கிடையாது. பல தினங்கள் விஷயங்களைப் பற்றி யோசித்துக்கொண்டிருப்பேன். ஆனால் எழுத உட்கார்ந்தால் ஒரு மணி நேரத்தில் முடித்து விடுவேன்.

ஆகையால் யோசிக்குமிடத்து கட்டுரை எழுதுவது சிலர் சொல்லுவதுபோல அவ்வளவு எளிதல்ல. மிக்க அறிவும் சாமர்த்தியமும் உள்ளவர்களே சிறந்த கட்டுரைகள் எழுத முடியும்.

"கலியாணத்தைச் செய்து பார்; வீட்டைக் கட்டிப் பார்" என்பார்கள். இதனுடன் "கட்டுரை எழுதிப் பார்" என்பதையும் சேர்க்கலாம் என்று ஒரு சகோதர கட்டுரையாளர் சொன்னதை நானும் ஆமோதிக்கிறேன்.

டங்களும் இன்னும் பிற சாமான்களும் பூமியினின்றும் இப்பொழுதும் எடுக்கப்படுகின்றன. இந்தியாவினுடைய சரித்திரம் நெடுங்கால முதற்கொண்டு தொடர்ந்து வருகின்றது. எது முதற்கொண்டு என்று யார் கணக்கிட்டறிவார்? இந்திய நூல்களோ மிகவும் புராதனமானவை. மேனாட்டுப் புலவர்களாலேயே இந்திய நூல்கள் இந்தக் காலம் முதற்கொண்டு புறப்பட்டன என்று தெளிவாய்ச் சொல்ல முடியவில்லை. வேதங்களென்ன, புராணங்களென்ன இதிஹாஸங்களென்ன எல்லாம் அந்தந்தக் காலத்தில் ஆண்ட அரசாது சரித்திரங்களையும் மற்ற இதர விசேஷ விஷயங்களையும், விரிவாய் விளக்கிக் காட்டுகின்றன. மேனாட்டுச் சரித்திர ஆசிரியரான வி. ஏ. ஸ்மித் "தற்காலத்து ஆசிரியர்கள் புராணங்களில் உள்ள வம்சாவளிகளை நம்பாமலிருக்கிறார்கள். ஆனால் அப்புராணங்களைச் சற்று ஊன்றி வாசிக்குமிடத்து, மிகவும் உண்மையானதும் சிறந்ததுமான சரித்திர வம்சாவளிகள் தெரியவரும். உதாரணமாக விஷ்ணு புராணத்தில் மௌரிய அரச பரம்பரைகள் நன்றாய்க் கூறப்பட்டிருக்கின்றன. மத்ஸ்ய புராணத்தில் ஆந்திர வம்சாவளி சரித்திர ஆதாரத்துடன் கூறப்பட்டிருக்கிறது. மேற் சொன்ன மத்ஸ்ய புராணத்தில் கூறப்படும் ஆந்திர வம்சாவளியை உறுதிப் படுத்த இப்பொழுது அநேக நாணயங்களும் சாஸனங்களும் அகப்படுகின்றன" என்று எழுதுகின்றார்.

இன்னும் பூர்வ காலத்திய கிரந்தங்களை எடுக்கப் போனால், மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றன. கடவுளைக் கண்டறிந்த கன யோகிகள், யுத்த வீரர்கள், இராமாயண கதாநாயகனான ஸ்ரீ ராமசந்திரன், மஹாபாரத வீரர்களான பாண்டவர்கள், கௌரவர்கள் ஸ்ரீ கிருஷ்ணன் முதலிய பலர் இருந்த போதிலும் கதைகளிலும், பாட்டுகளிலும், ஸ்தோத்திரங்களிலும் மற்றும் சடங்குகளிலும் இன்னும் இருந்து கொண்டே தான் இருக்கிறார்கள்.

இத்தியாதி விஷயங்களினால் ஒரு விஷயம் நாம மொத்தமாய் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அஃதென்னவென்றால், "தற்காலத்து இந்திய ஜன சமூக வாழ்க்கையின் அஸ்திவாரம் இந்தப் பூர்வக் கிரந்தங்களின் மேல் தான் போடப் பட்டிருக்கிறது" என்பதே.

எவனுக்கு இந்த இந்தியாவின் சரித்திரத்திற்கு முற்பட்ட காலத்தின் சரித்திர உணர்ச்சியில்லையோ (Prehistoric period) அவன் இப்பொழுதுள்ள இந்தியர்களின் மனதையும் தன்மையையும் எப்படி அறியக் கூடும்? சர் வாலன்டைன் சிரால் என்றவர் "இந்திய சமாதானமின்மை" என்ற ஒரு புஸ்தகத்தில் "இப்பொழுதுள்ள இந்தியக் கிளர்ச்சியினால் தான் நாட்டு உணர்ச்சி யுண்டாயிற்று. இதைப் போன்றே மஹா ராஷ்டிர நாட்டு உணர்ச்சியும் முன்னர் உண்டாயிற்று" என்ற உண்மையைக் கூறியிருக்கிறார். கட்டுக்கதைகளென்று சொல்லப்பட்ட முற்காலத்திய சில பழக்க வழக்கங்களைச் சரித்திர காலத்திற்குட்பட்ட விஷயங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இவைகளெல்லாம் நெடுங்காலமாய்த் தொடர்ந்து கொண்டே வருகின்றன என்று சொல்லலாம். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில்

நடந்த புஷ்ய மித்ரனுடைய அசுவமேத யாகம் என்ன, கி. பி. ஏழாம் நூற்றாண்டில் நடந்த ஆதித்யசேனனுடைய அசுவமேத யாகம் என்ன இவைகளெல்லாம் சகாறுனும் ஏறக்குறைய கி. மு. 3000ம் வருஷத்தில் யுதிஷ்டிரனாலும் செய்யப்பட்ட அசுவமேத யாகங்களைத் தொடர்ந்துவந்தன என்பதையும் இந்த அசுவமேத யாகத்தினால் "ஜம்புத்வீபம்" "சார்வபௌம சக்கரவர்த்தி" என்ற ஒரே அரசன் கீழ் ஆளப்பட்டு வந்தது என்பதையும் யார் மறுப்பர்? இதே மாதிரியே பஞ்சாயத்து என்பதும் இந்தப் பஞ்சாயத்து என்பது கணக்கிட முடியாத அநேக காலங்களுக்கு முந்தியே இருந்தது. அதைப் பின்பற்றித்தான் கி. மு. நான்காம் நூற்றாண்டில் அரசாண்ட சந்திரகுப்தனுடைய காலத்திலும் இந்தப் பஞ்சாயத்து என்பது உண்டாயிற்று. / இந்தியா வழிவழியாய் வந்த ஒரு புராதனமான தேசம். அதனுடைய ஆரிய நாகரிகமோ ஒருவராலும் பிரிக்கமுடியாத ஒரு மொத்த பாகம். இந்திய மாதாவினுடைய பூர்வ சரித்திரத்தில் வெற்றிகளும் படையெழுச்சிகளும் எதிரிகளுக்குச் சளைக்காத காலங்களும் அவர்களுக்கு இளைத்த காலங்களும், ஒற்றுமையும் பிரிவினையும் எல்லாம் தான் இருந்தன. இஃது எல்லாத் தேசத்திற்கும் பொதுவான விஷயம். ஆனால் பாரத மாதா என்றைக்கும் பாரதமாதாவாகத் தான் இருப்பள்; என்றும் அவள் பூஜ்யதையுள்ளவள்; என்றும் அழியாத ஜகன் மாதா அவள்; தனது உதரத்திலிருந்து அநேக கோடி பிள்ளைகளைப் பெற்றவள். ஆனால் அவளுடைய பிறப்பு எப்பொழுது என்று ஒரு சரித்திரக்காரனும் சொல்ல முடியாது. அவளுடைய அழிவு எப்பொழுதென ஒரு சோதிடனும் சொல்லத் துணியான்.

இந்திய மாது, இங்கிலாந்து சம்பந்தமில்லாமல் அநேக காலம் ஆச்சரியப்படத் தக்கவிதமாய் வாழ்ந்து வந்தாள். இன்னும் அநேக காலம் இங்கிலாந்து சம்பந்தமில்லாமல் இருக்கக்கூடும். ஆனால் ஒருவருக்கொருவர் அடிக்கடி வேண்டியிருப்பது அவசியமாதலால் இரண்டும் சம்பந்தப்பட்டிருந்தால் நல்லது. இந்தியா இங்கிலாந்துடன் சம்பந்தப்பட்டிருக்க மிகவும் சந்தோஷிக்கிறது. ஆனால் சமமான அந்தஸ்துடன் இருக்கப் பிரியமேயன்றி வேறொன்றுக்கும் இஷ்டமில்லை.

அறிவிப்பு

திருவாளர் ராம முத்துராமன் செட்டியார் அவர்கள் நமது பிரதிநிதியாக புரோம் மார்க்கத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார். அன்பர்கள், அவர் மூலம் சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொண்டு ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

ஞானக்களஞ்சியம்
ஜோதி

வேதாந்த ரகசியங்கள்

——ஸ்ரீ ஸதானந்த சுவாமிகள்

நரர்களின் கடமை நற்காரியஞ் செய்தல் :—

தோணியேறிய கோவிந்தனும் வாயு பகவானது திருவிளையாடலும்

ஓரானொரு காலத்தில் கோவிந்தனென்பவன் ஒரு காயலின் தென் கரையில் வாழ்ந்து வந்தான். அவன் மனைவிக்கு வெகு ஆபத்துக்கிடமான ஒரு நோய் இடரென்று தோன்றியது. அதற்குச் சிகிச்சை செய்ய விரும்பி கோவிந்தன் வடகரையில் வசித்து வந்த ஒரு வைத்தியனிடம் மருந்து வாங்கி வருவதற்காக தோணியில் ஏறிப் பிரயாணமாயினான். அப்பொழுது காற்றானது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வெகு பலமாக அடித்துக் கொண்டிருந்தது. காற்று பாய் மரத்தில் தாக்கியவுடன் கோவிந்தனுக்கு உண்டான சந்தோஷத்தையும் ஊக்கத்தையும் என்னென்று எடுத்துரைப்பது? விரும்பிய வண்ணம் காற்று வெகு அநுகூலமாயிருந்ததனால் கோவிந்தன் மறுகரையை யடைவதற்குச் சிறிதும் தாமசிக்கவில்லை. உடனே கோவிந்தன் வைத்தியனிடஞ் சென்று ஔஷதத்தைப் பெற்றுக் கொண்டு விரைவாக வீட்டிற்கு வரவேண்டிப் புறப்பட்டான். ஆனால் இப்பொழுது அவனுடைய யாத்திரைக்கு எதிராய் அடித்துக் கொண்டிருக்கின்ற புயற்காற்றானது கோவிந்தனுடைய பிரயாணத்தை முன் செல்வதற்கு ஒரு அங்குலங்கூட சம்மதிக்கவில்லை. ஆதலால் கோவிந்தன் வடகரையிலேயே தோணியைக் கட்டிக் கொண்டு இருக்க வேண்டியவனானான். காற்று அடங்கியபின் அவன் மீண்டும் புறப்பட்டு வருவதற்குக் கால தாமதமாகி விட்டதனால் (இதற்கிடையில்) மருந்தினை யுட்கொள்ள இடமின்றி அவன் மனைவி இறக்க வேண்டியவளானாள். கோவிந்தன் மருந்து சம்பாதிக்க வேண்டிச் சென்ற யாத்திரைக்கு மிகவும் அநுகூலஞ் செய்த காற்றானது அம்மருந்தினை மனைவிக்கு (விரைவில்) பிரயோஜனப் படுத்த வேண்டுமென விரும்பிய கோவிந்தனுடைய பிரயாணத்தை அடியோடு தடுக்கவல்லவோ செய்தது? அது போல பூலோகத்தில் ஒவ்வொருவரும் சம்பாதிக்கின்ற சாதனங்கள் (பொருள்கள்)

முக்கியமாகத் தங்கள் தங்களுடைய சர்வ துக்க நிவர்த்திக்கும் சர்வானந்தப் பிராப்திக்குமாக உபயோகப் படவேண்டியவைகளாகும். ஆனால் ஒவ்வொருவருடையவும் சம்பாதிப்பதிலுள்ள அருமையான சாமர்த்தியமானது அங்ஙனம் தேடப் பட்ட பொருள்களை உசிதமாக (அதாவது ஆத்மார்த்தமாயும் பரோபகாரத்திற்காகவும்) உபயோகித்துக் கொள்வதற்கு சொற்பமும் இடம் பெறுவதில்லை. தேகம் நழுவுகின்றவரை ஒருவன் அளவற்ற செல்வங்களைச் சம்பாதிக்கின்றான். அவற்றில் ஒரு சிறிதாவது அவனுடைய வாழ் நாளைக்குள் அவனது ஜென்மம் கடைத்தேறுவதற்கான வழிகளில் செலவு செய்யும் வண்ணம் அவனுக்கு வாய்க்காமல் போகு மேல் அவனுடைய ஜென்மம் எவ்வளவு துச்சமாய் விடுகின்றது. பாருங்கள்! அறிவும், சக்தியும், செல்வமும், ஏராளமாகச் சம்பாதித்து அவைகளில் ஒரு சிறிதும் தனது உத்தேசம் நிறைவேறுதற்கு உபயோகிக்க முடியாத ஒரு வித்துவானுடையவோ, பலவானுடையவோ, கோடீசுவரனுடையவோ வாழ்வைக் காட்டிலும் அறிவும், சக்தியும், செல்வமும் சொற்ப மட்டுமே சம்பாதிக்கப் பட்டும் அவற்றை ஆத்மார்த்த மாகவும் (தனது மோக்ஷத்திற்காகவும்) பரோபகாரத்திற்காகவும் உபயோகிப்பதற்கு முறையே மனம், சம்மதம், அநுபவம், இம் மூன்றையும் அடையப் பெற்றிருக்கின்ற வனுடைய வாழ்நாளானது எவ்வளவோ மகிமையுள்ளதாகும். ஆதலால், ஒவ்வொருவருடையவும் சம்பாதிக்கின்ற சாமர்த்தியம் எவ்வளவு உண்டோ அவ்வளவினையும் உசிதமாக அப்பொருள்களைப் பிரயோஜனப் படுத்துவதிலும் காண்பித்தல் வேண்டும். அங்ஙனம் உபயோகப்படுத்தாதவர்களின் ஜென்மம் ஒன்றுக்கு முதவாத தாகுமென இருமுறை வற்புறுத்தித் தெரிவிக்கின்றது கோவிந்தனது தோணி.

மனத்தினால் மஹானாகுதல் :—

அக்கினிப் பிரவேசமும் ஆத்தும சாக்ஷாத்காரமும்.

ஒருவன் ஒரு ஹோம குண்டத்திலாவது அல்லது ஒரு பெருங் காட்டுத் தீயிலாவது குதித்து இறந்து விட்டதாக வைத்துக் கொள்வோம். அவ்விதமானால் அவனது ஸ்தூல சரீரத்திலுள்ள ரோமம், தோல், இரத்தம், சதை, நரம்பு, கொழுப்பு, என்பு, அதற்குள் வெளுத்தும் கரைத்து மிருக்கின்ற மஜ்ஜை என்பன வாதிகள் வெந்து வெண்ணீராகுமேயன்றி அவனது சூக்ஷ்ம சரீரத்திலுள்ள இராகத்வேஷ முதலிய துர்க்குணங்களும் காரண சரீரத்தைப் பொருந்தியுள்ள மூலாஞானமும் சிறிது கூட எரிக்கப்படமாட்டா. இவ்வெளி யுலகத்திலுள்ள ஐம்பூதங்களில் ஒன்றான அக்கினி ஸ்தூலப் பொருள்களை எரித்து நாசஞ் செய்யுமே யல்லாது உள்ளே யிருக்கின்ற சூக்ஷ்ம (நுண்ணிய) தோஷங்களை அழிப்பதற்கு அதனால் சாத்தியமாவதில்லை. அவ்விதமான குற்றங்களைச் சாம்பராக்குதற்கு உண்மையாகவே விரும்புகின்றவன், தன்னுடைய இருதய கமலமாகிய ஓமகுண்டத்தில், பக்திஞானமாகிய தீயை மூட்டி அவ்வக்கினி குண்டத்தின் நடுவில் 'தேகமே நாம்' என்று நினைத்

திருக்கின்ற அகங்கார சரீரத்தை பலாத்காரமாகப் பிடித்துத் தூக்கிப் போட்டு எரித்து விடவேண்டும்.

இதனால்,

ஸ்தூல சரீரத்தைத் துன்புறுத்தாமலும் நசிக்கச் செய்யாமலுமே மூற்கூறிய குற்றங்களை நீக்கிப் பரப்பிரம்ம சொரூபியாகி விடலாமென்று அறிந்து கொள்ளவும்.

தூங்காமல் தூங்குதல் :—

தவளைகளும் அவற்றின் யோக நித்திரையும்.

தவளைகள் வேனிற்காலத்தில் சாதாரண மண்ணுடன் ஒட்டிக்கொண்டு தாம் உண்மையாக உயிர் வாழ்ந்து வருவதை வெளியிடாது பூ பாகத்தின் அடியே காணப்படும். மழை காலம் ஆரம்பித்துப் புதிய மழை பொழிந்தவுடன் அவைகட்கு ஜீவ சேஷ்டைகளும் உடற்பருமனும் உண்டாகும். அப்பால், அவை இரை தேடுதற்காக வெகு உற்சாகங் கொண்டு இங்கு மங்குமாகத் துள்ளிக்குதிப்பதும் தங்களுக்கு தேவேந்திரனது அநுக்கிரக வுருவமாய்க் கிடைத்த புதிய மழைக்காகக் 'தங்களுடைய செய்ந் நன்றிகளை யறிவிக்குஞ் செயல்களோ' வெனத் தோன்றும்படிக்குக் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்து கொண்டு பிரமாதமாகச் சத்தமிட்டு ஆரவாரிப்பதும் மீண்டும் வெயிற்காலம் வந்த பொழுது முன் போல இருந்து விடுவதும் மாமூலான சம்பவமாம். ஆனால் ஆறுமாத காலமாகத் தவளைகள் பூ பாகத்தின் கண்ணே யிருந்து கொண்டு தமது மன எண்ணங்களையும் மூச்சுக் காற்றுகளையும் அடக்கி யோக நித்திரை செய்து வருவதனால் அவைகட்கு அக்காலம் வரை பசிதாகங்கள் உண்டாவதில்லை. கேவலம் விசேஷ ஞானமில்லாத தவளைகளே ஆறுமாத காலம்வரை பசிதாகங்களை யடக்கி உலகவியாபாரங்களை முற்றிலும் மறந்து உள்வெளி மூச்சுக்களின்றி—கை கால்களின் அசைதலாகிய செயல்களைத் தவிர்த்து பூமியினுள் இருக்கத்தக்க சக்தியையும் சம்பாதித் திருக்கின்ற இந்நிலைமையை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு யோசிப் போமாயின், ஓரிரவு உணவளியாத குற்றத்திற்கு வேண்டி அன்னையைக் கொல்கின்றவர்களாகிய பொறுமையற்ற சில மனிதர்களின் பரிதாபகரமான சுபாவங்களை எதனோடு உவமித்துக் கூறலாம்? அற்பப் பிராணிகளாகிய தவளைகளுக்கு அவ்வாறு தவஞ் செய்ய முடியுமேல் எல்லாவற்றையும் பகுத்தறிந்து செய்யக் கூடிய சாமர்த்தியம் வாய்ந்த மனிதர்க்கு ஆகாரமின்றியும் நீண்ட காலம் உயிருடன் வாழ்வதற்கும் இயலாது போகுமா? பூலோகத்திலுள்ள பற்பல குகைகளுக்குள்ளும் வேனிற் காலத்தைய தவளைகளே போல் விரதமனுஷ்டிப்பவர்களாகிய மகா சித்த யோகிகள் எவ்வளவினரோ இன்றைக்கும் உயிர்வாழ்ந்து வருகின்றனர். ஆனால், இங்குக் கூறிய தவளைகள் யாவும் தமோ குணத்தில் ஆழ்ந்து கிடப்பவையாம். மகா தவசிகளாகிய யோகீந்திரர்களோ வெனின், சர்வ பரிபூரணமான மகா சைதன்ய சொரூபத்தின் கண்ணே ஆனந்த முற்று அமைதியுடன் வாழ்ந்து வருகின்றவர்களாம்.

காரியத்திற் கண்ணுயிரு :—

பலாச்சுளையும் பசியுள்ள மனிதனும்.

பலாக்காயின் இனிய சுளைகளைத்

தின்று பசியை அடக்கிக் கொள்ள விரும்புகின்றவன் அப்பலாக்காயின் கண்ணை எத்தனைச் சக்கைகளிருக்கின்றன வென்று எண்ணுவதற்கேனும் முயற்சிக்க வேனும் உற்சாக முள்ளவனாகான். சக்கைகளை எண்ணிக் கொண்டிருக்கின்றவன் சுளைகளைத் தின்பதற்குச் சாத்தியமின்று. சுளைகளைத்தின்று திருப்தி அடைந்தவனோ வென்றால் சக்கைகளைச் சற்றும் இலக்ஷியஞ் செய்யான்.

அது போல ஒருமனிதனுடைய சம்சார நிவர்த்திக்கு அத்தியாவசியகமாய் வேண்டி யிருக்கின்ற பொருள்களை மட்டும், அவன் சிரத்தையுடன் தேடவேண்டுமே யன்றிச் சக்கைகளை எண்ணுகின்றவனைப் போல உலகத்திலுள்ள அனாவசியகமான காரியங்களிலுங் கூடத் தலையிட்டு விலையேறப் பெற்ற அவனது வாழ்நாளை வீணாக நஷ்டப்படுத்தத்தான் வேண்டுமென்பது பயனற்ற காரியமல்லவா?

அற்ப அறிவினரே ஆபத்தை யடைவர் :—

நாழியுப்பும் வஞ்சவன நெஞ்சமும்.

ஒரு நாழியுப்பினை, இருநாழி அல்லது மூன்னாழி நீரினில் கரைத்தால் அந்நீர் முழுதும் உப்பு நீராகிவிடும். அது குடிப்பதற்கும் அல்லது குடித்தால் தாகத்தை யடக்குவதற்கும் உபயோகப்படுவதல்ல. ஆனால் அந்த உப்பையே ஒரு பெரிய குளத்தில் கரைத்தால் அக்குளத்து நீர் முழுதினையும் உப்பு நீராக்கிவிடுவதற்கு அதனால் முடியாது. அன்றியும் அக்குளத்து நீரானது குடிப்பதற்குபயோகமாகாமற் போவதுமில்லை.

அதுபோல ஒருவன் உபதேசஞ் செய்கின்ற வஞ்சனையான புத்திமதிகள் யாவும் அற்ப அறிவினர்களை மட்டுமே தாறுமாறாகக் கெடச்செய்யுமல்லாது பேரறிவினையுடைய மேதாவிகளை எவ்விதத்தாலும் அவை துன்புறுத்தாதனவாம்.

இரண்டும் ஒன்றே :—

குளத்து மீனும் குக்கிராமவாஸிகளும்.

ஒரு கிராமாந்தரத்தில் எல்லோருக்கும் ஸ்நாநபானஞ் செய்வதற்கு மிக்க உபகாரமா யிருந்து வருமோர் குளத்தில் அதிலுள்ள சிறு புழுக்களையும் அழுக்குகளையும் கொன்று தின்பதற்காக மீன்களை வளர்த்து வருவது வழக்கம் ஆயினும் சில செம்படவர்கள் இரவு நேரங்களில் சென்று அக்குளத்தை கலக்கிச் சேறாக்கியும் அதில் வாழ்ந்து வந்த மீன்களை யெல்லாம் பிடித்துக் கொண்டும் வீட்டிற்குச் சென்று தின்பார்கள். இவ்விதஞ் செய்வதனால் காலவளவில் அக்குளமானது உபயோகமற்றதாய்ப் போகவும அந்த கிராமவாசிகள் யாவரும் மஹா துக்கத்தை யடையவும் காரணமாகின்றது. சொற்ப ஜனங்களுடைய சுயப் பிரயோஜனத்தை யடைய வேண்டிச் செய்யப்பட்ட இம் முயற்சியானது எவ்வளவு அந்நியர்களுடைய நன்மையைக் கெடுத்துவிட்டது? ஆகையால் ஒரு மனிதனுக்கோ ஒரு ஸ்தாபனத்திற்கோ ஒரு கிராமத்திற்கோ ஒரு ராஜ்யத்திற்கோ ஒரு உலகத்திற்கோ நாசத்தையுண்டு பண்ணுவதாயும் தனக்கும் தன்னையடுத்துள்ள சிலர்க்கும் மட்டும் சுகத்தை கொடுக்குமென்று தனது சுயநயத்தை நாடுங் குண மிகுதியால் தோற்றப் படுகின்றதாயு முள்ள

யாதொரு காரியத்தையும் மனிதர்கள் கையாளுதல் கூடாது. தன்னுடைய ஆத்துமாவும் மற்றவர்களின் ஆத்துமாவும் உண்மையில் ஒன்றேயாதலால் தன்னால் பிறர்க்கு விளைகின்ற துன்பங்களனைத்தையும் தானே யனுபவிக்கும் வண்ணம் நேருமென்பது திண்ணம். பிறர் நன்மையை விரும்பாது தன்னுடைய லாபத்தையாவது சுகத்தையாவது இச்சித்து முயற்சி செய்கின்றவர்கள் தன்னைத் தானே கொல்லுகின்றவராவர்.

பிறரை இம்சித்துப் பணம் சேர்த்தல் :—

எலிப் பொறியும் தேங்காய்ப் பலகாரமும்.

எலிகள் அதிகமாய்ச் சஞ்சரிக்கின்ற வீடுகளில் அவைகளை பிடிப்பதற்காக எலிப் பொறிகள் தேங்காய் —நெய்— பலகாரம் முதலியவைகளை வைத்துக் கிட்டி அவ்வியந்திரங்களைத் திறந்து வைப்பதுண்டு. வில்லினது நடுவில் வைத்திருக்கின்ற தின்பண்டத்தை எலி கடித்தவுடன் வில்லினுடைய இருபக்கங்களிலு மிரா நின்ற கூரிய ஆயுதங்கள் எலியினது உடலை வெகு கடினமாகப்பிடித்து இறுக்கி எலியினை நமனுலகுக்கனுப்பி விடும். தீனியிலுள்ள பேராவலால் அந்த உணவுப் பொருளானது தன் உயிருக்கே மோசஞ் செய்யத்தக்க வண்ணம் தந்திரமான நிலைமையில் வைக்கப் பட்டிருக்கின்றதென்பதைச் சிறிதும் தெரிந்து கொள்ளுவதற்கு அவ்வெலியினால் முடிவதில்லை. அது போல பூலோகத்திலுள்ள ஒவ்வொருவரும் மிகவும் சௌக்கியமாக இருக்கலாமென்ற பேராசையுடன் பிறர் மனைவி பிறர் பொருள் என்பனவாதிகளை எந்த எந்த உபாயங்களையோ செய்து கைப்பற்றுவதில் வெகு உற்சாகமாய்ப் பிரயத்தினஞ் செய்வார்கள். சிலர் அந்நியர்களின் உயிரைமாய்த்தும் பணம் சம்பாதிப்பார்கள். இவர்கள் யாவரும் மேற்படி எலியின் அனுபோகங்களைக் கண்டும் கேட்டு மிருக்கின்றனராயினும் மறு கணத்தில் அவ் வெலியினைப் போல் தாமும் எமகிங்கரர்களிடம் அகப்பட்டுக் கொள்ள நேருமே என்பதைச் சிறிதும் நினைக்கின்றவர்களல்லர் போலும்!

பேத புத்தியில் அபேதஞானந் தோன்றாது :

உயர்ந்த தாமரையும் அமர்ந்த ஆத்தும ஞானியும்.

தாமரையானது மெதுவாயும் குளிர்ச்சியாயுமுள்ள நல்ல சேற்றிலிருந்தல்லாது மணற் புற்களினின்றும் உற்பத்தியாகாது.

அதுபோல, அமர்ந்தகுணமும் சகல சரா சரங்களையும் தன்னுடைய ஆத்மாவைப் போல் கருதுகின்ற இயற்கையும் உள்ள ஒரு மஹானிடத்தில் பரமாத்ம ஞானம் உதயமாகுமேயன்றி பேதபுத்தியுடனும் வெகு கடினமான இருதயம் வாய்ந்தும் இருக்கின்ற மனிதன் எவ்வளவுதான் முயன்ற பொழுதிலும் (கற்ப கோடி காலம் தவஞ் செய்தாலும்) அவனிடத்து ஆத்ம ஞானம் உண்டாக மாட்டாதென்பது திண்ணமாம்.

தவறுதலும் தண்டனையும்

—“நாராயண சிவன்”

தேசத்தின் நியதிக்கு விரோதமாய் நடந்து தவறிழைப்போரை தண்டிப்பதே சர்க்கார் கடமைகளிலொன்றாகும். ஆனால் ஆதிகாலம் முதல் இது இவ்விதமிருந்து வர்வில்லை. முற்காலங்களில் ஒருவன் தவறிழைத்தால் அவனுக்குத் தனிப்பட்ட முறையில் தண்டனை யளிக்கப்பட்டு வந்தது. இவ்விதமிருந்து வந்தது திருப்திகரமற்றதா யிருந்தால் சர்க்காரே தண்டனை யளிக்க வேண்டியவர்களென உணரும்படி யாயிற்று. சர்க்காரே தீங்கிழைக்கப் பட்டவராகக் கருதி தீங்கிழைத் தவருக்குப் பொருத்தமான தண்டனை அளிக்க ஆரம்பித்தது. சர்க்கார் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்துடனும், இதரர்களும் இவ்விதத் தவறுதல்கள் செய்வதினின்றும் தடுக்கும் நோக்கத்துடனும் கடுமையான தண்டனைகள் விதிக்க ஆரம்பித்தனர். காலக்கிரமத்தில் அபிப்பிராயங்கள் மாறுபட ஆரம்பித்துள்ளன. குற்றவாளி ஒரு மனிதனென்றும், அவனது மனச் சாட்சியையும், மனிதத்தன்மையையும் காப்பாற்ற வேண்டியவனென்பதையும் சர்க்கார் உணர ஆரம்பித்துள்ளது.

குற்றவாளிக்குத் தண்டனை விதித்து அத்தண்டனை காலத்தில் அவனை நடத்துவதில் அவன் தண்டனை முடிந்து வெளிவரும் காலத்தில் யோக்யனாகத் திரும்ப வேணுமென்ற விஷயத்தை மறந்து விடுகிறார்கள். தற்காலத்தில் சிறைச்சாலை, சிறைபுகுந்தோரின் முடிவையே உண்டு பண்ணி விடுகிறது. சிறைச்சாலையிலேயே அவனது ஊக்கம் குன்றி விடுகின்றது. அவனது மதிப்பு மறைந்து விடுகிறது. அவனது சுயமரியாதை சுருங்கி விடுகிறது. வெளியில் அவன் ஒரு பிருஷ்டனாகக் கருதப்படுகிறான்; வெறுப்புக்குக் காரணமாகிறான். ஆனால் இவைகள் அரசியல் கைதிகளுக்குப் பொருந்தா. அவர்கள் விஷயத்தில் இவைகள் நேரே மாறுபட்டவையாகும். அவர்கள் சிறையினின்று வெளி வந்ததும் வெறுப்புக்கும் புறக்கணிப்புக்கும் பாத்திரர்களாவதில்லையென்பதோடு மந்திரிகளாய்க் கூட ஆய் விடுவதால் தங்கள் சிறைச்சாலை அனுபவத்தைக் கொண்டு மற்ற சிறைவாசிகளுக்கும் விசாரணைக் கைதிகளுக்கும் கூடுமானவரை உதவியா யிருந்து வருகின்றனர்.

சீர் திருத்தம் தேவை.

தண்டனையின் நோக்கம்நிறைவேறி அதனால் பலன் பெற விரும்பினால் சிறைச்சாலை நிர்வாகத்தில் துரிதமான சீர் திருத்தங்கள் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது, குற்றவாளியைத் தண்டிப்பதின் நோக்கம் தண்

டனைக்கு மட்டுமல்லாது அவனது அபிவிருத்திக்காகவும் மேலும் அவன் குற்றம் செய்வதைத் தடுப்பதற்காகவும் இருக்க வேண்டும்.

குற்றவாளிக்கு வேலை செய்யும் தண்டனை விதிக்கப் பெற்றிருந்தால் எவ்விதமான வேலை கொடுக்கப்பட வேண்டு மென்று முதலில் கவனிக்க வேண்டும். தற்பொழுது பலதிறப் பட்ட குற்றவாளிகளா யிருந்தாலும் எல்லோருக்கும் ஒரேவிதமான வேலை யளிக்கப் பட்டு வருகிறது. அவனவன் படிப்பிற்குப் பொருத்தமாகவும் புத்தி சாதுர்யத்துக் கேற்றதானதும், பழக்க வழக்கத்திற்கனு கூலமானதுமான வேலைகளைக் கொடுத்து, வெளியில் வரும் காலத்தில் லாபகரமான தொழிலைச் செய்து லாபம் சம்பாதிக்கக் கூடிய விதத்தில் வேலைகள் கொடுத்து உதவலாமல்லவா? வேலை செய்வதற்காக அவனுக்கு ஒரு சொல்ப ஊதியம் கொடுக்க வேண்டியது இதைவிட ஒரு முக்கியமான ஒன்றாகும்.

இன்றைய நிலை.

சிறையினின்று வெளிவரும் ஒருவனுக்கு ஆதரவளிப் போரை எதிர்பார்க்க இடமில்லை. அவன் சிறைவாயினின்று இரக்கமற்ற உலகத்தைப் பார்க்கிறான். உலகத்தையே வெறுக்கிறான். அவன் ஒரு 'ஜெயில் புள்ளி' என்று சொல்லி அவனுக்கு வேலை கொடுப்பாரில்லை. தவிரவும் உபஜீவனத்திற்கே வழியில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் அவனுக்கு மரியாதையுடன் காலக்ஷேபம் செய்யக் கூடிய மார்க்கத்தை சிந்திப்பதற்குப் போதிய சந்தர்ப்பம் கிடையாது. இதன் பலனென்ன? அவன் விரும்பத்தகாதவர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு மறுபடியும் கெட்ட வழியிலேயே திரும்புகிறான். ஒருமனிதன் ஜெயிலுக்குப்போவதற்கு பொருளாதார நிலையே காரணமாயிருந்தால் தண்டனை தீர்ந்து வெளிவரும் காலத்தில் அப்பொருளாதார நிலை இன்னும் சீர் குலைந்து அவனை மறுபடியும் ஜெயிலுக்கனுப்பி வருவதுடன் அவனை ஒரு நிரந்தரமான குற்றவாளியாகச் செய்து விடுகிறது. அவனுக்காக முன் சொல்லியபடி, ஒரு சொல்ப ஊதியம் ஒதுக்கப்பட்டு தண்டனை முடிவடையும் காலத்தில் அவனுக்குக் கொடுக்கப்பட்டால் அவன் வெளியுலகத்தில் ஒரு நம்பிக்கையுடன் நுழைய மார்க்க முண்டு. பணம்தான் உலகம் என்று சொல்லுவதற்கில்லை யென்றாலும் அது ஒரு மனிதனின் சுயமதிப்புக்கும், பெருமைக்கும் அத்யாவசியமான தென்பதை மறுக்க முடியாது.

ஒழிவு நேரங்களை உபயோகப் படுத்துதல்

மற்றுமோர் முக்கியமான பிரச்னை குற்றவாளியின் ஒழிவு நேரத்தை உபயோகப் படுத்துதலாகும். சிறைச்சாலை விதிப்படி அவன் ஒரு குறிப்பிட்ட காலம் வேலைசெய்ய வேண்டியிருக்கிறது. விதியில் சொல்லப் படாத காலத்தில் அவன் என்ன செய்வது? அக்காலங்களை அவனுக்கோ அவனது சமூகத்திற்கோ பிரயோசனகரமானதாகக் முயற்சிக்க வேண்டும். பம்பாயிலும் இதர முக்கிய நகரங்களிலுமுள்ள சிறைச் சாலைகளில் நடந்து வரும் கீழ்க் கண்ட முறையை குற்றவாளிகளுக் கிழைத்து வரும் தீங்கெனச் சந்தேக மறச் சொல்லலாம். ஒரு குற்றவாளி மாலை ஐந்து மணிக் கெல்லாம் தன்னுடைய அறையிலடைக்கப் பெறுகிறான். அதி

லிருந்து அவன் ஏகாங்கியான சிறைவாசியாகிறான். அவன் செய்யக் கூடியது யாதொன்றும் கிடையாது. அவனுக்கு, ஒரு புஸ்தகமோ பத்திரிகையோ அளிக்கப் பெறுகிறதில்லை. விளக்குக் கூட கிடையாது. அவனுடைய எண்ணங்கள்தான் அவனுக்குத் துணையாக விருக்கின்றன. அவைகளும் சந்தோஷகரமானவைகளாயிருக்கமாட்டா.

யாருடைய நன்மைக்காக இவைகளெல்லாம் செய்யப் பெறுகின்றன? இவைகளால் குற்றவாளியோ, சர்க்காரோ நலம் பெறுகிறார்களில்லையென்பது நிச்சயம். சிறைச்சாலை ஜீவிதம் கூடுமான வரையில் கஷ்ட ஜீவியமாயிருக்க வேணுமென்ற நாகரீக மற்ற பழைய அபிப்பிராயத்திற்கிணங்கவே இவைகள் செய்யப் பெறுகின்றன. குற்றவாளிகளுக்குப் பத்திரிகையும் புஸ்தகமும் அளிப்பது எவ்விதம் சட்ட திட்டங்களுக்கு விரோதமானதாகுமென்று சொல்லக் கூடியதாயில்லை. பலமணி நேரங்களுக்கு இவ்விதம் தனியாக வைப்பதின் பயனாய் ஜெயிலி விருந்து வெளி வருவோரில் பெரும்பாலோரும் மிகவும் பலவீனராயிருப்பதைக் காண்கிறோம்.

சிறைகளில் பிரசங்கங்கள் ஏற்பாடு செய்வதுடன் அறிவு புகட்டும் படங்களும் காண்பிக்க ஏற்பாடு செய்யலாம். ஏன் செய்யக்கூடாது? குற்றவாளியை தண்டிப்பதின் நோக்கம் அவர்களைத் திருத்துவதற்காகத் தானென்பதானால் மேலே சொன்னவைகளொன்றும் செய்யக் கூடாதவையல்ல. ஜெயிலுக்கும் கிளப்புக்கும் வித்தியாசமில்லாமல் செய்து விடக் கூடாதுதான். சுதந்திரமில்லாது கடினமான கட்டுப்பாட்டுக்குள்ளாக்குவதே ஒரு தகுந்த தண்டனையாகும். தற்கால சிறை வாழ்க்கையினால் ஒரு குற்றவாளி நான் ஒரு மனிதனல்லவென்றும் ஜெயிலுக்கு வெளியிலுள்ள உலகில், தான் இடம் பெற முடியாதென்றும் நினைத்து விடுகிறான். இதன் முக்கிய காரணம், கண்டு பேச சந்தர்ப்பமளிக்காததும் கடிதப் போக்கு வரத்தில் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளுமேயாகும். சிறை, மனிதனின் பெருமையைக் கெடுப்பதாயிருக்கிறதேயொழிய நன்மையளிப்பதாயில்லை. குற்றவாளிகளைத் திருத்தி பிரயோசனகரமான பிரஜைகளாக்குவதற்கான முறையில் நடத்தினாலொழிய சிறைகளே அவசியமில்லையெனச் சொல்லாம்.

ஒரு தனிப்பட்ட மனிதனோ, சமூகமோ முன்னேறுகிற போது, பொருளைச் சேர்ப்பது அவசியமுமாகும்; அஃதோர் ஒழுக்கமுமாகும். இங்ஙனம் செல்லுகிற முன்னேற்றத்தின் மற்றொரு படியில், சேகரித்த பொருளை விநியோகிப்பது அவசியமும் ஒழுங்குமாகும். பொருளைச் சேர்ப்பது தவறல்ல; ஆனால் அதனை விடாது சேகரிப்பதும் வரம்புமீறிச் சேகரிப்பதும்தான் குற்றம்.

—பிரபுத்த பாரதம்

சுதந்திரத்தின் தேவைகள் யாவை?

ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்

—வெ. சா.

பிரசங்கம்—9

சமத்துவமென்றால் என்ன?

இன்று சமத்துவத்தைப் பற்றிப் பேசுவோம். சமத்துவம் என்ற மொழிக்குப் பிரெஞ்சுப் பாஷையில் என்ன வார்த்தை உபயோகிக்கப் படுகிறதோ அந்த வார்த்தைக்கு சீன பாஷையில் 'பீன்சுவாங்' என்று சொல்லப்படுகிறது. இதற்கு ஜனநிக்கம் என்று அர்த்தம். மேனாடுகளில் நடைபெற்ற எல்லாப் புரட்சிகளுக்கும் அடிப்படையாயிருந்தது சுதந்திரம்பெற வேண்டுமென்ற எண்ணந்தான். இந்தச் சுதந்திரத்திற்குச் சமமான அந்தஸ்திலேயே சமத்துவத்தையும் வைத்துப் பேசியிருக்கிறார்கள் அந்தப் புரட்சிக்காரர்கள். ஏனென்றால் இந்தச் சமத்துவத்திற்காக அவர்கள் ஏராளமான தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். மற்றும் தாங்கள் சமத்துவம் பெற்றாலொழிய ஏற்கனவே அடைந்துள்ள சுதந்திரத்திற்கு அர்த்தமேயில்லையென்பது, பல மேனாட்டு அறிஞர்களின் கருத்தாயிருந்து வந்திருக்கிறது. இதனால் இவர்கள் சுதந்திரத்தை விட சமத்துவத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பேசியிருக்கிறார்கள்.

சமத்துவம் என்றால் என்ன? அது எங்கிருந்து பிறக்கிறது? அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் தோன்றிய புரட்சித் தத்துவத்தின் படி மனிதனுக்குச் சுதந்திர மென்பது இயற்கையினால் அளிக்கப்பட்டது. உதாரணமாக அமெரிக்கச் சுதந்திர உறுதிமொழிப் பத்திரத்திலும் பிரெஞ்சுப் புரட்சி உறுதி மொழிப்பத்திரத்திலும் சுதந்திரமும் சமத்துவமும் மனிதனோடு இயற்கையாகப் பிறந்தவையென்றும், இந்த உரிமைகளை மனிதனிடத்திலிருந்து பிரிக்க முடியாதென்றும் வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கின்றன.

அப்படியானால் மனிதர்கள் சமத்துவம் என்ற விசேஷ உரிமையோடு கூடவே பிறந்தார்களா? இதைச் சற்று ஆராய்வோம். இயற்கை உலகம் எங்கணும் சமமாகக் காணப்படுவதில்லை. அதாவது தரை மட்டத்தில் மேடு பள்ளங்களையோ ஏற்றத் தாழ்வுகளையோ நாம் காண்கிறோம். தண்ணீரின் மேல் பரப்பின் மீதுதான் சம மட்டத்தைப் பார்க்கிறோம். ரெயில்வே பிரயாணத்தின் போது நீங்கள் பார்ப்பீர்களானால் சுற்றுமுற்றிலும் உள்ள மேடு பள்ளங்களைச் சமன்படுத்த மனித உழைப்புத் தேவையா

யிருந்திருக்கிற தென்பதை நன்கு உணர்வீர்கள். சமபூமி என்று நாம் சொல்வதெல்லாங் கூட சமதரையாயிருப்பதில்லையல்லவா? அதைச் சமன் படுத்த மனித உழைப்புத் தேவையாகத் தானிருக்கிறது. இதோ, இந்த மேஜை மீதிருக்கும் புஷ்பக் கொத்தைப் பாருங்கள். இது மேற் பார்வைக்கு ஒரே மாதிரியான புஷ்பங்களைக் கொண்டதாகவும் ஒவ்வொரு புஷ்பத்திலும் ஒரே மாதிரியான இதழ்கள் நிரம்பியிருப்பதாகவும் உங்களுக்குத் தோன்றும். ஆனால் தூரதிருஷ்டிக் கண்ணாடியின் மூலமாக இதனைச் சிறிது நுணுகி ஆராய்ந்து பார்த்தீர்களானால் ஒரே மாதிரியாயுள்ள இரண்டு புஷ்பங்களையோ அல்லது இரண்டு இதழ்களையோ காணமாட்டீர்கள். ஒரு மரத்தில் லட்சக் கணக்கான இலைகள் இருக்கின்றன. ஆனால் அந்த இலைகள் பார்வைக்கு ஒரே மாதிரியாகத் தோன்றிய போதிலும் உண்மையில் ஒன்றுக்கொன்று வித்தியாச முள்ளவைகளாகவே இருக்கின்றன. இந்த வித்தியாசத்தை நீங்கள் இடத்திற்கும் காலத்திற்கும் பொருத்தி வைத்துப் பாரக்க வேண்டும். இங்கேயுள்ள இலையைப் போல் வேறிடத்திலுள்ள இலை இருப்பதில்லை. சென்ற வருஷத்தில் உண்டாகி உதிர்ந்து போன இலையைப் போல் இந்த வருஷம் உற்பத்தியாகி உதிரப் போகும் இலை இருப்பதில்லை. இதனால் என்ன தெரிகிற தென்றால் இந்த உலகத்தில் உண்டாகிற எந்தப் பொருளும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்பது தான். இப்படி ஒவ்வொரு பொருளும் வித்தியாசப் பட்டிருப்பதால் இவை ஒரேமாதிரியாக இருக்கின்றன என்று எப்படிச் சொல்ல முடியும்? இயற்கை உலகத்திலேயே இந்த வேற்றுமைகள் காணப்படுகிற போது மானிட சமத்துவம் எப்படி ஏற்பட முடியும்?

இயற்கையில் எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியாகப் பிறக்கவில்லை. ஆனால் மானிட சமுதாயத்தின் சரித்திரத்தில் சுயேச்சாதிகாரம் தோன்றி நிலைத்தகாலத்தில் சுயேச்சாதிகாரமன்னர்கள், மனிதனுக்கும் மனிதனுக்குமுள்ள வேற்றுமைகளை அதிதீவிரத்திற்குக்கொண்டு போனார்கள். இயற்கையினால் ஏற்படுத்தப்பட்ட வித்தியாசத்தைக் காட்டிலும் இவர்கள் ஏற்படுத்தின வித்தியாசங்கள் அதிகமாகி விட்டன. இங்ஙனம் சுயேச்சாதிகாரிகளால் வகுக்கப் பட்ட இந்த வேற்றுமைகள் செயற்கையானவை. இயற்கைக்கு முரணானவை; இந்தச் செயற்கையான வித்தியாசத்தின் விளைவாக சமுதாயத்தின் மேல் படியிலிருந்தவர்கள் கொடுமையாகவும் பாரபட்சமாகவும் நடந்து வரத் தலைப்பட்டார்கள். இவர்களால் ஒடுக்கப்பட்ட ஜனங்களோ, தங்களாலும் சமாளிக்க முடியாத நிலைமையில் கலகத்திற்குக் கிளம்பினார்கள். சமுதாய வித்தியாசங்களை எதிர்த்துப் போராடினார்கள். ஆதிகாலத்தில் புரட்சியின் நோக்கம் என்னவாயிருந் திருக்கிற தென்பது இதனால் தெரிகிறது. அதாவது மனிதனாலேற்படுத்தப்பட்ட வித்தியாசங்களை ஒழிப்பதுதான். இந்த வித்தியாசத்தை ஒழித்து விட்டோமானால் புரட்சியின் நோக்கம் முடிந்து விட்ட தென்று கருதப்பட்டது. ஆனால் சக்கிரவர்த்தி பீடத்திலும் **அரச பீடத்**திலும் அமர்ந்திருந்தவர்கள் தாங்கள் தெய்விக சக்தி நிரம்பியவர்கள் என்று சொல்லி அத

ளைத் தங்கள் உத்தியோகத்திற்குப் பாதுகாப்பாக ஏற்படுத்திக் கொண்டார்கள். கடவுளாலேயே தாங்கள் இந்த ஸ்தானத்திற்கு நியமிக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் தங்களை எதிர்க்கிறவர்கள் கடவுளை எதிர்க்கிறவர்களாவார்களென்றும் சொல்லிக் கொண்டு வந்தார்கள். பாமர ஜனங்களோ இந்த வாசகத்தில் எவ்வளவு உண்மையிருக்கிறதென்பதைச் சிறிது கூடக் கவனித்துப் பாராமல், தங்கள் அரசர்களுக்கு இன்னும் அதிகமான உரிமையை வாங்கிக் கொடுப்பதற்காகப் போராடினார்கள். இது மட்டுமின்றி சமத்துவத்தைப் பற்றியும், சுதந்திரத்தைப் பற்றியும் யாராவது அறிஞர்கள் பேசினால் அப்படிப்பட்ட அறிஞர்களையும் எதிர்த்தார்கள். இதனால் இந்த அறிஞர்கள் என்ன செய்ய வேண்டியதிருந்ததென்றால், சமத்துவமும் சுதந்திரமும் இயற்கையால் மனிதனுக்கு அளிக்கப்பட்ட உரிமைகளென்ற தத்துவத்தைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. இவர்களுடைய நோக்கம், மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட ஏற்றத் தாழ்வுகளை உடைக்க வேண்டுமென்பதுதான். ஆனால் எந்த விஷயத்திலும் 'வேலை செய்வது சுலபம். விஷயத்தைப் புரிந்து கொள்வது கடினம்' அல்லவா? அந்தக் காலத்தில் ஐரோப்பாவிலிருந்த பாமர ஜனங்கள், சக்கிரவர்த்திகளும், அரசர்களும் தேவலோகத்திலிருந்து வந்தவர்களென்றும், இவர்களுக்கு தெய்விக உரிமைகள் சில உண்டென்றும் நம்பி தங்கள் அரசர்களுக்காக அநேக தியாகங்களையும் செய்தார்கள். இதனால் அறிஞர்கள் எவ்வளவு முயன்றும் அரசர்களின் சுயேச்சாதிகாரத்தை அழிக்க முடியவில்லை.

பின்னர், மனிதன் சுதந்திரத்தோடும், சமத்துவத்தோடும் பிறந்தான் என்ற நம்பிக்கை ஜனங்களிடத்தில் வலுத்தது. சுதந்திரத்திற்காகவும் சமத்துவத்திற்காகவும் போராடுவது ஒவ்வொருவருடைய கடமையுமாகுமென்ற எண்ணம் பாமர ஜனங்களிடையே உதயமாயிற்று. உடனே சக்ரவர்த்திகளும் அரசர்களும் தங்கள் உயர் பதவிகளிலிருந்து விழுந்து விட்டார்கள். இவர்களுடைய வீழ்ச்சிக்குப் பிறகு, பொதுஜன சமத்துவத்திற்காகப் பலரும் போராடினார்கள். ஆனால் இந்த அசாத்தியம் என்பது பலருக்குத் தெரியவில்லை. சமீபத்தில் ஏற்பட்ட விஞ்ஞான அறிவு வளர்ச்சியின் பயனாகத்தான், மனித சமுதாயத்தில் இயற்கையான சமத்துவம் இல்லையென்பதை ஜனங்கள் கண்டு கொண்டார்கள். பிரதி மனிதனும் தனித் தனியான அறிவும் திறமையுமுடையவனாயிருக்கிறான். அவனவனுடைய அறிவுக்கும் திறமைக்கும் தகுந்தபடி அவன் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஒவ்வொருவனுடைய வேலையும் வித விதமாக இருப்பதால் எல்லோரும் சமத்துவமான நிலைமையில் வேலை செய்ய முடியாதல்லவா? ஒரு மனிதனுடைய அறிவையும் உழைப்புத் திறனையும் நாம் பொருட்படுத்தாமல், மேலானபடிக்கு ஏறிச்செல்ல விரும்பும் மக்களைக் கீழ்ப்படிக்கு இழுத்துத் தள்ளி எல்லோரையும் சமத்துவ நிலையிலே வைக்க வேண்டுமென்று சொன்னால் உலகம் பிற்போக்கான நிலைமைக்குத் தான் போய்க் கொண்டிருக்கும். நாம் ஜனநாயகத்தைப் பற்றியும் சமத்து

வத்தைப் பற்றியும் பேசிவிட்டு, அதே தொனியில் உலகமும் முன்னேற வேண்டுமென்று நாம் சொல்வதற்கு என்ன அர்த்தமென்றால், உலகத்தில் அரசியல் சமத்துவம் வேண்டுமென்பதுதான். சமத்துவமானது இயற்கையானதல்ல; செயற்கையானது. ஆதலின் அரசியல் விவகாரங்களிலேயே சமத்துவத்தை உண்டு பண்ண முடியும். நாம் தொடங்கியிருக்கும் புரட்சியானது முற்றுப் பெற்றவுடன் சமத்துவமான அரசியல் அந்தஸ்து தேவையென்பதுதான் நமது கோரிக்கை. அதுவே உண்மையான சமத்துவமுமாகும்.

ஐரோப்பாவில் ஏற்பட்ட புரட்சிகளின் போது, ஜனங்கள் சுதந்திரத்திற்காகவும் சமத்துவத்திற்காகவும் அதிகமான தியாகங்களைச் செய்தார்களென்று சொன்னோம். அப்படியானால், இந்தப் புரட்சிகளுக்கு முன்னர் நிலவியிருந்த 'சமத்துவ' தன்மையைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்வது நல்லதல்லவா?

ஐரோப்பாவில் பரம்பரை பாத்தியம் அதிகமாகக் கொண்டாடப் பட்டு வந்தது. அதாவது, சக்ரவர்த்திகள், அரசர்கள் முதலாயினோர், தங்கள் அந்தஸ்து, பதவி முதலியவைகளை பரம்பரை பாத்தியமாகக் கொண்டாடினார்கள். எவரும் தங்கள் தொழிலை மாற்றிக் கொண்டதேயில்லை. சாதாரண ஜனங்களுடைய தொழில்களும் இப்படியே பரம்பரை பாத்தியமுடையனவாயிருந்தன. ஒரு மனிதன் விவசாயியாயிருந்தால், அவனுடைய பிள்ளை, பேரப் பிள்ளை முதலிய எல்லாத் தலை முறையினரும் விவசாயத் தொழிலையே நடத்திக் கொண்டு வந்தார்கள். ஒரு தொழிலாளியின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டி வந்தது. பாட்டனார் செய்து வந்த தொழிலை மாற்றிக் கொண்டு, பேரன் வேறு தொழிலைச் செய்ய முடியாது. ஒருவனுடைய தொழிலை மாற்றிக் கொள்ள முடியாமலிருப்பதுதான் அந்தக்காலத்து ஐரோப்பாவில் ஏற்பட்டிருந்த சமத்துவமின்மை. சீனாவில் ஜமீன்தாரித்துவ முறை ஒழிந்ததுமே தொழில் சம்பந்தமாக ஏற்பட்டிருந்த ஏற்றத் தாழ்வுகள் இல்லாமற் போய் விட்டன. சக்ரவர்த்தியின் பரம்பரை பாத்திய மொன்றுதான் அமுலில் இருந்தது. சமுதாயத்தின் சாதாரண படியிலிருந்தவர்கள், மந்திரிமார்களாகவும் வேறு உயர்ந்த அந்தஸ்துக்கும் வந்திருக்கிறார்கள். ஐரோப்பாவிலும் இங்ஙனம் சாதாரண பிரஜைகளாயிருந்தவர்கள் மந்திரிகள் முதலிய உயர் பதவிகளை வகித்திருக்கிறார்களாயினும் அப்படிப்பட்டவர் ஒரு சிலர்தான். தங்கள் விருப்பப்படி தொழில்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ள முடியாமலிருந்ததால்தான், இவர்கள் சமத்துவத்தை இழந்து விட்டார்கள். இங்ஙனம் அரசியல் அந்தஸ்தில் ஏற்றத் தாழ்வுகள் இருந்ததோடல்லாமல், சாதாரண ஜனங்களின் சமுதாய அந்தஸ்திலும் ஏற்றத் தாழ்வுகள் இருந்தன. இந்த ஏற்றத் தாழ்வுகளே, புரட்சி ஏற்படுவதற்குரிய வித்துக்களாயிருந்தன. சீனாவில் இந்த மாதிரியான ஏற்றத் தாழ்வுகளே இருக்கவில்லை. சீனர்களிடத்தில் சமுதாய வேற்றுமைகளிருந்த போதிலும் அவர்கள், சுதந்திரம் வேண்டுமென்பதற்காகத் தங்கள் உயிரையோ, குடும்பத்தையோ தியாகம் செய்ய

வில்லை. இதற்குக் காரண மென்ன வென்றால், சீனாவில் அமுலில் இருந்த ஆட்சி முறையானது, ஐரோப்பாவிலிருந்ததைப் போல் அவ்வளவு கடுமையானதாக இருக்க வில்லை. இதனால் தான் ஜனங்களும் சமத்துவத்திற்காகப் போராட வில்லை.

ஐரோப்பிய நாகரிகம் கிழ்த் திசையில் பரவப் பரவ, ஐரோப்பிய அரசியல், பொருளாதார, விஞ்ஞான முறைகள் முதலிய யாவும் சீனாவில் பரவத் தொடங்கின. சீனர்கள், ஐரோப்பிய அரசியல் தத்துவங்களைப் பற்றிக் கேட்டவுடன், அவற்றை அப்படியே எவ்வித மாற்றமுமின்றி நகல் செய்து கொண்டுவிட வேண்டு மென்று பார்க்கிறார்கள். இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பாவிலேற்பட்ட புரட்சிகளெல்லாம், சுதந்திரப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டவையாதலால், நாமும் அதே சுதந்திரத்திற்காகப் போராட வேண்டு மென்று சீனர்கள் கருதுகிறார்கள். ஐரோப்பியர்கள் சமத்துவத்திற்காகப் போராடினால் நாமும் சமத்துவத்திற்காகப் போராட வேண்டு மென்பதுதான் இவர்கள் சாதனை.

சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர், ஐரோப்பாவிலுள்ள ஜனங்கள், சுதந்திர மின்மையாலும் சமத்துவ மின்மையாலும் அதிகக் கஷ்டப் பட்டார்கள். இதனால் அவர்கள், இவை யிரண்டிற்காகவும் கிளர்ச்சி செய்தார்கள். இந்தக் கிளர்ச்சியின் பயனாகச் சென்ற மூன்று நூற்றாண்டுகளில் மூன்று புரட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்று இங்கிலாந்தில்; மற்றொன்று அமெரிக்காவில்; இன்னொன்று பிரான்சில். இங்கிலாந்தில் ஏற்பட்ட புரட்சியானது தோல்வி யடைந்து விட்ட தென்று சொல்ல வேண்டும். இதனால் ஆங்கில அரசியல் முறை அதிகமான மாற்றத்தை யடைய வில்லை. ஆங்கிலேயர்கள், கிளர்ச்சி செய்து, தங்கள் மன்னரைச் சிங்காதனத்தினின்று இறக்கிக் கொன்று விட்டார்கள். ஆனால் சில வருஷங்களுக்குள் முடியாட்சி அங்கு நிலைத்து விட்டது. இங்கிலாந்தினின்றும் பிரிந்து சென்றவர்கள் சுதந்திரம் பெற்றவர்களாகி குடியரசு அரசாங்க முறையை ஏற்படுத்திக் கொண்டார்கள். பிரான்சும் இவர்களைப் பின்பற்றிக் குடியரசு முறையைத் தழுவிக் கொண்டது. ஆறு வருஷங்களுக்கு முன்னால் ருஷ்யாவிலும் புரட்சி ஏற்பட்டு, குடியரசு முறை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இப்பொழுது அமெரிக்கா, பிரான்சு, ருஷ்யா முதலிய நாடுகளெல்லாம் வல்லரசுகளா யிருக்கின்றன. இதற்குக் காரணம் இந்த தேசங்களில் ஏற்பட்ட புரட்சிகள்தான்.

அமெரிக்கர்கள் புரட்சி செய்த காலத்தில், அவர்களுக்கு அடிப்படையான நோக்கமாயிருந்தது சுதந்திரம் பெற வேண்டு மென்பது. ஏன் இந்த நோக்கம் அவர்களுக்கு ஏற்பட்டது? அவர்களுடைய பதின் மூன்று நாடுகளும் பிரிட்டிஷாருடைய நிருவாகத்தின் கீழ் இருந்தன. பிரிட்டிஷார், அமெரிக்கர்களை அடக்கி ஒடுக்கி வந்தனர். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் தாங்களும் பிரிட்டிஷாரும் ஒரே மாதிரியான பிரஜைகளாயிருந்தும், தாங்கள் மட்டும் வேறு

விதமாக நடத்தப்படுவதைப் பார்த்து அமெரிக்கர்கள் ஆத்திரம் கொண்டார்கள். இதனால் பிரிட்டனினின்றும் விலகிக் கொள்ளத் தீர்மானித்தார்கள்." எனவே பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் எட்டு வருஷ கால யுத்தம் நடைபெற்றது. அமெரிக்கா அரசாங்கத்தார், வெண்மை நிறமுடைய பிரஜைகளை ஒரு விதமாகவும் கறுப்பு நிறத்தவர்களை வேறு விதமாகவும் நடத்தத் தலைப்பட்டனர். உதாரணமாக நீக்ரோவர்களை இவர்கள், கேவலமாகவே நடத்தினர். நீக்ரோவர்களை எப்படி நடத்தினர் என்பதைச் சிறிது விஸ்தரித்துக் கூறுவோம். அவர்களை மாடுகள் போலவும் குதிரைகள் போலவும் வேலை வாங்கினார்கள். அவர்களுக்குக் கஷ்டமான வேலைகளை கொடுத்தார்கள். இப்படி இவர்கள் வேலை செய்தாலும், இவர்களுக்குக் கூலி கொடுக்கப் படவில்லை. சாப்பாடு மட்டுந்தான் போடப்பட்டது. இந்த நிலைமையைப் பார்த்த சில அறிஞர்கள், சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தங்கள் அரசியல் திட்டத்திற்கும் நீக்ரோவர்களை நடத்தும் இந்த நடவடிக்கைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்பதை இவர்கள் கண்டு கொண்டு இந்த வித்தியாச நடவடிக்கைகள் ஒழிய வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார்கள். இந்தக் கிளர்ச்சிக்குப் பலர் ஆதரவும் காட்டினார். இன்னும் சில அறிஞர்கள்' நீக்ரோவர்களுடைய வாழ்க்கையைப் பற்றி ஆராய்ச்சி செய்து பல அறிக்கைகள் வெளியிட்டார்கள். இவை, ஜனங்களுக்குப் புதியதொரு விழிப்பைக் கொடுத்தன. அமெரிக்காவின் வடபாகத்திலிருந்த மாகாணங்களெல்லாம், அடிமைகளை வேலைக் கமர்த்திக் கொள்ளும் வழக்கத்தை அநுஷ்டிக்கவில்லை. எனவே, இந்த மாகாணங்கள் ஒன்று சேர்ந்து, அடிமைகளாகிய நீக்ரோவர்களுக்கு விடுதலை யளிக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார்கள். தெற்கு மாகாணங்களிலுள்ளவர்கள், இந்தக் கிளர்ச்சிக்கு விரோதமாயிருந்தனர். ஏனென்றால் இவர்கள் அடிமை வியாபாரத்தை அதிகதாராளமாக நடத்தி வந்தார்கள். இதனால், அடிமை வியாபாரம் பரம்பரையாக நடைபெற்று வந்ததென்றும் அதனைத் திடீரென்று ரத்து செய்து அடிமைகளுக்குச் சுதந்திரம் கொடுக்கக் கூடாதென்றும் இவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். அடிமைகள், விலைமதிப்புள்ள பொருள்களென்றும், அவர்களுக்கு விடுதலை யளிப்பதனால், அதற்கு நஷ்ட ஈட்டுத்தொகை தங்களுக்குத் தரவேண்டுமென்றும் வாதித்தார்கள். அந்தக் காலத்தில் ஓர் அடிமையினுடைய மார்க்கெட் விலை ஐயாயிரம் அல்லது ஆறாயிரம் டாலரா யிருந்தது. இந்தக் காரணத்தினால் வட மாகாணத்தவருக்கும் தெற்கு மாகாணத்தவருக்கும் பலத்த சண்டை நடைபெற்றது. தெற்கு மாகாணத்தவர் தோல்வியடைந்தனர். உடனே வட மாகாணங்களைச் சேர்ந்த ஐக்கிய அரசாங்கத்தார் எல்லா அடிமைகளையும் விடுதலை செய்வதாக உத்திரவு பிறப்பித்தனர். தெற்கு மாகாணத்தவர் இந்த உத்திரவுக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களானார்கள். ஆனால், இவர்கள் இதுகாறும் தங்கள் பொறுப்பில் போஷித்து வந்த நீக்ரோவர்களை வெளியே துரத்தி விட்டார்கள். அவர்களுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும்

கொடுக்க மறுத்து விட்டார்கள். இதனால் விடுதலை கண்ட நீக்ரோவர்கள் வயிற்றுப்பசியினால் உழன்றார்கள். தங்கள் விடுதலைக்காக உழைத்த வடக்கு அமெரிக்கர்களை வெறுக்கலானார்கள். இவர்கள் விடுதலைக்காகப் பெரிதும் பாடுபட்ட அப்ரஹாம் லிங்கன் மீது இவர்களுக்கு அதிகமான துவேஷம் ஏற்பட்டது. அமெரிக்காவின் சரித்திரத்திலேயே குறிப்பிடத்தக்க சம்பவங்கள் இரண்டு. ஒன்று பிரிட்டிஷாருக்கு விரோதமாகக் கிளம்பிய சுதந்திர யுத்தம். இது எட்டு வருஷகாலம் நடைபெற்றது. இன்னொன்று வட மாகாணங்களுக்கும் தெற்கு மாகாணங்களுக்கும் நடைபெற்ற யுத்தம்.

அமெரிக்காவில் நடைபெற்ற சுதந்திர யுத்தத்திற்குப் பிறகு பிரான்சில் ஒரு புரட்சி ஏற்பட்டது. இந்தப் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகள் சுமார் எண்பது வருஷங்களுக்கு மேல் சமுதாயத்தின் மேல் படிந்து நின்றன. ஆனால், இயற்கையோடொத்த சமத்துவம் ஏற்படவில்லை.

சீனாவில் ஏற்பட்ட புரட்சி எண்ணங்கள் ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் தோன்றியவை. ஆனால் நம்முடைய புரட்சிக் கட்சியானது, சுதந்திரத்திற்காகவும் சமத்துவத்திற்காகவும் போராடவில்லை. ஜனங்களுக்குத் தேவையான மூன்று தத்துவங்களையே வற்புறுத்தியிருக்கின்றன. இந்த மூன்று தத்துவங்களையும் நாம் அமுலுக்குக் கொண்டு வருவோமானால் நமக்குச் சுதந்திரமும் சமத்துவமும் உண்டாகும். சீனா இதற்கு முன் எப்பொழுதுமே சுதந்திரத்திற்காகவும் சமத்துவத்திற்காகவும் போராடியதே கிடையாது. இந்த நாட்டிலே நடைபெற்றிருக்கிற போர்களெல்லாம் அரச பதவிக்குத்தான். இந்தப் போராட்டங்களிலே கலந்து கொண்ட ஒவ்வொருவரும் தான் அரசனாக வேண்டுமென்ற விருப்பமுடையவராகவே இருந்தனர். இந்த விருப்பம் இன்னும் நமது ஜனங்களிடத்தில் குடி கொண்டிருப்பதனால் தான் சீனாவில் புரட்சி வெற்றி பெறவில்லை.

உலகத்திலே இப்பொழுது ஒழுங்காக அமைக்கப்பட்ட ஸ்தாபனங்கள் எவை யென்றால் அவைதான் தொழிலாளர் சங்கங்கள். புரட்சி ஏற்பட்டு சுதந்திரம் உதயமான பிறகுதான் இந்தத் தொழிற் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்தத் தொழிற் சங்கங்கள் எவ்வாறு வளர்ந்தன வென்பதைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம். முதலில், தொழிலாளர்கள் ஒன்றுந் தெரியாதவர்களாயிருந்தார்கள். இவர்களிடத்தில் கட்டுப்பாடான உணர்ச்சி ஏற்படவில்லை. தாங்கள், சமுதாயத்தின் கீழ்ப்படியில் வைக்கப்பட்டிருக்கிறார்களென்பதையோ, அல்லது தாங்கள் முதலாளிகளால் கஷ்டப்படுத்தப் படுகிறார்களென்பதையோ இவர்கள் உணரவில்லை. தங்களுடைய நிலைமையே இவர்களுக்குத் தெரியவில்லை. உலகத்திலுள்ள எல்லாத் தொழிலாளர்களுடைய நிலைமையும் இப்படித்தானிருந்தது. தொழிலாளர் அல்லாதார் சிலர் இவர்களின் நன்மையை முன்னிட்டுக் கிளர்ச்சி செய்யத் தொடங்கிய பிறகுதான் தொழிலாளர்கள் தங்களை ஒரு கட்டுப்பாடான ஸ்தாபனமாக அமைத்துக் கொள்ள வேண்டு

மென்று எண்ணங் கொண்டார்கள். அநேக தொழிலாளர் சங்கங்கள் ஏற்பட்டன. முதலாளிகளை எதிர்த்துப் போராடும் நிலைமைக்கு வந்தார்கள். இங்ஙனம் இவர்கள் போராடியதற்கு எந்த விதமான ஆயுதத்தைத் துணையாகக் கொண்டார்கள்? அது தான் முதலாளிகளுடன் ஒத்துழையாமை செய்வது. அதாவது வேலை நிறுத்தம் செய்வது. இந்த வேலை நிறுத்தத்தினால் விளையும் பலா பலன்கள் ராணுவ பலத்தினால் விளையும் பலா பலன்களை விடக் கடுமையாகவே இருந்தன. இப்படி இவர்கள் வேலை நிறுத்தம் செய்வதானது தொழிலாளர்களை மட்டும் பாதிப்பதாயில்லை. தேசம் முழுவதையுமே பாதிப்பதாயிருந்தது.

சென்ற ஒரு தலை முறையாக சீனாவிலும் தொழிலாளர் ஸ்தாபனங்கள் அமைந்து வருகின்றன. புரட்சிக்குப் பிறகு ஒவ்வொரு தொழிலைச் சேர்ந்தவர்களும் தனியான சங்கங்களாக அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்குத் தலைவராயிருக்கும் பலர் தொழிலாளர் அல்லாதாராயும் இருக்கின்றனர். இவர்களிற் சிலர் சுய நன்மைக்காக இந்த ஸ்தாபனங்களிற் சேர்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். ஆயினும் ஒரு சிலர், தொழிலாளர் நலன் ஒன்றினை மட்டும் கருதி உழைத்து வந்திருக்கிறார்களென்பதையும் மறுக்க முடியாதல்லவா? ஆதலின் தொழிலாளர்கள், தங்கள் தலைவர்கள் விஷயத்தில் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும்.

சீனா அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதிகள் செய்வதன் மூலமாக ஏராளமான பொருளை வருஷந்தோறும் இழந்து வருகிறது. வருஷத்தில் சுமார் 5 கோடி டாலர் பெறுமான சரக்குகள் நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கின்றன என்று சொன்னால் நம்முடைய தேச மக்களின் அதிகமான உழைப்பு நம் நாட்டுக்குப் பயன் படாமற் போகிறது என்பதுதானே அர்த்தம். இதற்குக் காரணம் நமது தொழில்கள் சோர்வுற்றுக் கிடப்பதுதான். சீனத் தொழிலாளர்கள் குறைந்த கூலி பெற்று அதிகமாக உழைக்கக் கூடிய ஆற்றல் பெற்றவர்கள். இதனால் இவர்கள் எந்த விதமான அந்நிய நாட்டுப் போட்டிக்கும் ஈடு கொடுக்க முடியும். அப்படியிருந்தும் நமது நாட்டுத் தொழில்கள் விர்த்தி யடையவில்லை. இதற்குக் காரணம் சீன அரசாங்கத்தில் ஒழுக்க ஹீனம் நிலவியிருப்பதுதான். அதற்கு அதிகாரமில்லை. அதிகாரம் இருந்திருந்தால் அந்நிய நாட்டுச் சாமான்களுக்கு அதிகமான இறக்குமதித் தீர்வை போட்டு சீனச் சாமான்களுக்குக் கிராக்கியை உண்டு பண்ணியிருக்கும். அப்பொழுது சுதேசத் தொழிலாளர்கள் அந்நிய நாடுகளுக்குச் செல்லும் மேற் கண்ட 5 கோடி டாலரையும் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளும் நிலைமையிலிருப்பர். தொழிலாளர்கள், அரசியல் விவகாரங்களில் தலையிடக் கூடாதென்று சொல்லுவது தவறு. அரசியலும் பொருளாதாரமும் சங்கிலிபோல் பின்னிக் கொண்டிருக்கின்றன. தொழிலாளர்கள் அரசாங்க நிர்வாகத்தில் சம்பந்தப் பட்டுக் கொள்ளாவிட்டால் அவர்கள் தங்களுடைய உணவுப் பிரச்னையை எப்படித் தீர்த்துக் கொள்ள முடியும்?

மனிதர்கள் பிறக்கும் பொழுது அறிவிலும் திறமையிலும் வேறுபட்டவர்களாகவே பிறக்கிறார்கள். ஆயினும் மானிட இருதயம் நன்றாகவே இருக்கிறது. இந்த இருதயமானது எல்லா மனிதர்களும் சமத்துவ வாழ்க்கையே வாழவேண்டுமென்ற உயர்ந்த லட்சியத்தையே கொண்டிருக்கிறது. இந்த லட்சியத்தை நாடியே மானிட சமூகம் செல்ல வேண்டும். அப்படிச் செல்வதற்கு வாழ்க்கைத் தத்துவத்தை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். வாழ்க்கையின் தத்துவமோ இரண்டு கூறாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. ஒன்று தனக்காக வாழ்வது. மற்றொன்று பிறருக்காக வாழ்வது, தனக்காக மட்டும் வாழுகிறவர்கள் பிறரைத் துன்புறுத்துகிறவர்களாகிறார்கள், இந்தச் சுயநலத் தத்துவம் பரவியிருந்த காலத்தில் திறமைசாலிகள் அதிகாரப் பதவிகளைக் கைப்பற்றிக்கொண்டு அவற்றின் மூலமாக இல்லாத பொல்லாத வேற்றுமைகளையும் உரிமைகளையும் சமுதாயத்தில் புகுத்தி விட்டார்கள். ஜன நாயகத்தை உத்தேசித்து உலகத்தில் எத்தனையோ புரட்சிகள் நடை பெற்றன, இந்தப் புரட்சிகளுக்கு முந்திய காலத்தில் இந்தச் சுய நலத் தத்துவந்தான் எங்கணும் அமுலில் இருந்தது. பிறர் நலத்துக்காக வாழ வேண்டுமென்ற லட்சியத்தைக் கொண்டவர்கள் அந்த நலத்திற்காகத் தங்களைத் தியாகம் செய்து கொண்டார்கள். இந்தத் தத்துவம் பரவி நிற்கும் காலையில் தான் அறிஞர்கள் பலர் தோன்றி அன்பையும் விசால திருஷ்டியையும் ஜனங்களுக்கு ஊட்டினார்கள். ஆனால் மதத்தின் பெயரால் பிரசாரம் செய்யப் பட்ட அன்பும் தாராள மனப்பான்மையும் மட்டுமே மனித சமுதாயத்தின் தீமைகளை அகற்றி விடாது. ஆகலின் அடிப் படையானதொரு மாற்றத்தை நாம் ஏற்படுத்த வேண்டும். புரட்சியை உண்டு பண்ணி சுயேச்சாதிகாரத்தை வீழ்த்தி ஜன நாயகத்தைத் தலை நிமிரச் செய்து வேற்றுமைகளை அறவே ஒழித்து விட வேண்டும். ஒவ்வொருவரும் பிறருக்குத் தொண்டு செய்வதையே தங்களுடைய லட்சியமாகக் கொண்டிருக்க வேண்டுமேயல்லாது பிறரைச் சுரண்டுவதைத் தங்களுடைய லட்சியமாகக் கொண்டிருக்கக் கூடாது. அறிவும் திறமையும் நிரம்பியவர்கள் ஆயிரக் கணக்கான பேரை சந்தோஷிப்பிக்க முயலவேண்டும். குறைந்த அறிவும் திறமையும் உடையவர்கள் பத்துக் கணக்கான பேரையோ நூற்றுக் கணக்கான பேரையோ மகிழ்விக்கப் பிரயத்தனப் படவேண்டும். ஆகவே அறிவிலும் திறமையிலும் மனிதர்கள் வெவ்வேறு பட்டவர்களாயிருந்தாலும் உயர்ந்தலட்சிய பாவத்தில் ஒரே தன்மை உடையவர்களாகவே இருக்கிறார்கள். இந்த சமத்துவத்தையே நாம் நாடவேண்டும். இதுதான் உண்மையான சமத்துவமுங்கூட.

சித்தரஞ்சன் தாஸர்

ஜனனம் **1870**

மரணம் **1925**

—"ஒரு காங்கிரஸ்வாதி"

தேசபந்து சித்தரஞ்சன தாஸர், 1925ம் வருஷம் காலமான பிறகு, வங்காள அரசியல் வாழ்க்கையிலேயே ஒரு மங்கல் ஏற்பட்டு விட்டதென்று தான் சொல்ல வேண்டும். இப்படிக்கூறி விட்டதனுல் தேசபந்துவுக்குப் பிறகு, வங்க தேசிய இயக்கத்தின் தலைவர்களாகத் தோன்றிய யாரையும் குறை கூறியதாகாதல்லவா?

தேச பந்து தாஸர், தேச பக்தியையே ஆஸ்திக மதமாகவும், தேச சேவையையே தர்மமாகவும், பாரத மாதாவே தம்மால் பூஜிக்கப்படும் தெய்வமாகவும் போற்றி வந்தார். இவர் தாம் எழுதி வைத்துள்ள ஒரு குறிப்பில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்:—

நான் குழந்தைப் பருவ முதலே எனது ஜன்ம பூமியை ஆத்ம பூர்வமாக நேசித்து வந்தேன். யௌவன காலத்தில், எத்தனையோ குறை பாடுகள் என்னிடம் இருந்த போதிலும் என் தாய் நாட்டை மட்டும் நான் மறக்கவே யில்லை. என் தாய் நாட்டைப் பற்றிய எண்ணம் சதா சர்வ காலமும் என் இருதயத்தில் இருந்து கொண்டே இருக்கிறது. இப்பொழுது; நான் யமனுடைய வாயிலில் நின்று கொண்டிருக்கிற இந்தத் தருணத்தில்கூட, இந்த உண்மை எனக்கு அதிக நன்ருகப் புலனுகிறது.'

தேச பந்து தாஸர், 1870ம் வருஷம் நவம்பர் மாதம் 5ந் தேதி கல்கத்தாவில் புவன் மோகன தாஸ் என்ற ஓர் அட்டர்னியினுடைய புத்திரராக ஜனன மெடுத்தார். இவர்களுடைய குடும்பம் விஷ்ணு பக்தி நிறைந்த குடும்பம். தாஸர், பாலியத்தில், கல்கத்தாவுக் கருகாமையிலிருந்த பவானிபூரில் இருந்த 'லண்டன் மிஷனரி சொஸைட்டி இன்ஸ்டிடியூஷனில்' கல்வி பயின்ருர். 1886ம் வருஷம் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினுர். 1890ம் வருஷம் பீ. ஏ. பரீட்சையில் தேறினுர். பின்னர் ஐ. சி. எஸ். பரீட்சைக்குப் படிப்பதற்கு இங்கிலாந்து சென்ருர். அங்குச் சென்று

முயற்சியுடன் படித்தார். ஆனால் அதில் வெற்றி பெற முடியவில்லை. ஏனென்றால், இவர் மேற்படி பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த போதே, அரசியல் விவகாரங்களில் தலையிட்டுக் கொண்டதே காரணமென்று சொல்லப்படுகிறது. அப்பொழுது, காலஞ் சென்ற தாதா பாய் நவுரோஜியவர்கள் பார்லிமெண்ட் அபேட்சகராக நின்றார். அவருடைய தேர்தல் பிரசாரத்தில் இவரும் அதிகமாகக் கலந்து கொண்டு உழைத்தார். இது தவிர, பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதுவதன் மூலமாகவும் பிரசங்கங்கள் செய்வதன் மூலமாகவும், இந்தியாவைப் பற்றிப் பிரிட்டிஷ் பொது ஜனங்களுக்கு அறிவித்து வந்தார்.

தாஸர், ஐ. சி. எஸ். பரீட்சையில் தேற முடியாமல் போனதால், தமது தந்தையாரின் விருப்பப்படி, இங்கிலாந்திலேயே பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கலானார். 1893ம் வருஷம் மேற்படி பாரிஸ்டர் பரீட்சையில் தேறி விட்டு பாரத தேசம் வந்து சேர்ந்தார். கல்கத்தா ஹைகோர்ட்டில் தொழிலை நடத்த ஆரம்பித்தார். ஆனால் இவரைவிட வயதும் அநுபவமும் நிறைந்த பலர் முன்னிலையில், வக்கீல் தொழில் நிரம்பட நடத்தி அதில் அதிகமான பண வருவாயை எதிர் பார்க்க முடியாமற் போயிற்று. இதனால் கல்கத்தாவுக்குப் புறம்பான வெளியூர்களில் வக்கீல் தொழிலை நடத்திக் கொண்டு வந்தார். 1897ம் வருஷம் இவருக்கு விவாகம் நடைபெற்றது. அஸ்ஸாம் மாகாணத்திலுள்ள பிஜனி சமஸ்தானத்தின் திவானான ஸ்ரீ வரதா காந்த ஹல்தார் என்பவருடைய கன்னிகையான ஸ்ரீமதி வாசந்தி தேவி என்ற மாதையே இவர் விவாகம் செய்து கொண்டார்.

1906ம் வருஷம் தாஸருடைய குடும்பத்தினருக்குப் பொருளாதார சங்கடம் அதிகமாக ஏற்பட்டது. இதனால் இவருடைய தகப்பனாரான புவன மோகன தாஸர் 'இன்ஸால்வெண்ட்' ஆகி விட்டார். ஆனால் பின்னர், சித்தரஞ்சனர், தமது வக்கீல் தொழிலை திறமையாக நடத்தி அதன் மூலமாக அதிகமான வருவாயைச் சம்பாதித்து, தன் தகப்பனார் பட்டிருந்த அத்தனை கடன் தொகையையும் எல்லோருக்கும் திருப்பிக் கொடுத்து விட்டார். சட்டப்படி இவர் இதைச் செய்ய வேண்டியதில்லையானாலும், குடும்பத்தின் பெருமைக்கு எவ்வித களங்கமும் ஏற்படக் கூடாதென்பதிலே இவர் அதிக சிரத்தையுள்ளவராயிருந்தார். இங்ஙனம் இவர் தகப்பனாருடைய கடனைத் தீர்த்து விட்டார் என்ற விஷயமே, இவருக்கு அதிகமான பெருமையைத் தந்தது.

1907–08ம் வருஷங்களில் வங்காளப் பிரிவினை ஏற்பட்டு அதன் காரணமாக சுதேசியக் கிளர்ச்சி ஏற்பட்டதல்லவா? இந்தக் கிளர்ச்சியில் தாஸர் அதிக பங்கெடுத்துக் கொண்டார். ஸ்ரீ அரவிந்த கோஷ் முதலிய பேரறிஞர்களுடைய துணை கொண்டு இவர் 'வந்தேமாதரம்' என்ற ஆங்கில வாரப்பத்திரிகை யொன்றை ஆரம்பித்தார். இந்தப் பத்திரிகையில் தான் ஸ்ரீ அரவிந்தர், 'புதிய மார்க்கம்' என்ற தலைப்புக் கொடுத்து அரசியல் சம்பிரதாயமான அநேக கட்டுரைகள் எழுதி வந்தார். இது காரணமாக மேற்படி பத்திரிகைக்கும் ஸ்ரீ அரவிந்தருக்கும் அதிகமான புகழ்

ஏற்பட்டது. இந்த 'வந்தேமாதரம்' பத்திரிகைக்கு அநுசரணையாகவே, 'சந்தியா' 'யுகாந்தர்' என்ற இரண்டு பத்திரிகைகள் வங்க பாஷையில் வெளி வரலாயின. இவற்றை வெளியிட்டவர்கள் முறையே ஸ்ரீ ப்ரஹ்ம பாந்தவ்ய உபாத்தியாயா அவர்களும், சுவாமி விவேகானந்தருடைய சகோதரரான பூபேந்திரநாத் தத்தர் என்பவருமாவார். வங்காளத்தில் அப்பொழுது தேசிய உணர்ச்சியைத் தட்டி யெழுப்பியவை இந்த மூன்று பத்திரிகைகளுமே யாகும். இந்தப் பத்திரிகைகளின் வேகமான போக்கைக் கண்டு அரசாங்கத்தார், இவற்றின் மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டனர். அப்பொழுது முஜபர்பூர் என்ற ஊரில் வெடி குண்டு சம்பவமொன்று நடைபெற்றது. கென்னெடி என்ற ஓர் ஐரோப்பியர் சுட்டுக் கொல்லப்பட்டார். இது சம்பந்தமாக குதிராம் போஸ் முதலிய பலர் கைது செய்யப்பட்டனர். மேலே சொன்ன மூன்று பத்திரிகாசிரியர்களும், இங்ஙனம் கைது செய்யப்பட்டவர்களில் ஒன்றாயினர். இவர்கள் மீது தொடுக்கப் பெற்ற வழக்கில், இவர்கள் சார்பாக சித்தரஞ்சனர் ஆஜராகி வாதம் செய்தார். இதன் மூலமாக இவருடைய பெயரானது மிகவும் பிரசித்தி யடைந்தது. வழக்குகளும் ஏராளமாக வரத் தொடங்கின. தாம் ஆஜராகி வாதிக்க முடியாத நிலைமையில் அநேக வழக்குகளை இவர் வேண்டாமென்று மறுத்து விட்டார். 1920ம் வருஷம், ஒத்துழையா இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக இவர் வக்கில் தொழிலை விடுத்தபோது இவருடைய மாத வருமானம் சராசரி ஐம்பதினாயிர ரூபாயாக இருந்தது. இவ்வளவு பெருந்தொகை இவருக்குக் கிடைத்தபோதிலும், இதில் பெரும் பாகத்தை இவர் அநேக அரசியல் வாதிகளுக்கு விநியோகித்து வந்தனர். 1914ம் வருஷத்து ஐரோப்பிய யுத்தத்தின் போது பிரயோகிக்கப்பட்ட இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வங்காளத்தில் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் பலருக்கும் இவர் மாதந் தோறும் பண உதவி செய்து வந்தார்.

தேசபந்து தாஸர் வக்கீலாகவும் அரசியல் வாதியாகவும் மட்டுமில்லை. வங்க சாஹித்தியத்தில் தேர்ச்சியடைந்த பெரும் புலவராகவும் இருந்தார். வங்க இலக்கிய வளர்ச்சிக்காக 'நாராயண' என்றொரு மாதப் பத்திரிகையையும் நடத்தி வந்தார். அநேக கவிகளை இவர் இயற்றி இதில் வெளியிட்டு வந்தார். இவருடைய கவிகளெல்லாம் சேர்ந்து 'மாலஞ்ச' 'மாலா' 'சாகர சங்கீதம்' என்ற பெயர்களுடன் புத்தக வடிவுடன் வெளிவந்திருக்கின்றன.

1917 வருஷம் நடைபெற்ற வங்காள மாகாண மகா நாட்டுக்கு தேசபந்து தாஸர் தலைமைவகித்து நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அதில், இவர் இந்தியாவின் அரசியல் லட்சியமென்ன வென்பதைச் சிறப்பித்துக் கூறியிருக்கிறார். இந்தப் பிரசங்கத்தில் இந்தியாவின் உண்மையான அரசியல் சேவையானது கிராமங்களிலிருந்தே ஆரம்பிக்கப் படவேண்டுமென்று கூறியிருக்கிறார். இந்தக் கருத்தைத் தழுவியே பிந்தியகாலத்து அரசியல் வாதிகளும் பேசியிருக்கிறார்களென்றால் அது தேசபந்து

வின் தீர்க்கதரிசனத்தைக் காட்ட வில்லையா ?

ஐரோப்பிய மகாயுத்தம் முடிந்த பிறகு இந்தியா அரசாங்கத்தார் ரௌலட் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தனர். அடக்குமுறை வலுத்தது. காந்தியடிகள் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தார். இந்தக் காலத்தில்தான் தேசபந்து தாஸர் அரசியல் இயக்கத்தில் பகிரங்கமாகக் கலந்து கொண்டார். பஞ்சாப் மாகாணத்தில் ராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப் பட்ட சம்பவங்களைப்பற்றி விசாரிக்க, காங்கிரஸ் காரியக் கமிட்டியானது, ஒரு விசாரணைசபையை நியமித்தது இதில் தேசபந்து தாஸரும் ஓர் அங்கத்தினர். இந்தக் காலத்தில் இந்திய அரசியல் தலைவர்களில் பலர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் தேசபந்து தாஸரும் ஒருவராயினர். 1922ம் வருஷம் ஜூன்மாதம் சிறையிலிருந்து விடுதலையடைந்தார். சிறைவாசத்தின் காரணமாக இவருடைய தேகசுகம் கெட்டு விட்டது. சிறிது கால ஓய்வெடுத்துக் கொண்ட பிறகு மீண்டும் அரசியலில் பிரவேசித்தார். 1922ம் வருஷம் டிசம்பர்மாதம் கயையில் கூடிய காங்கிரஸுக்கு தேசபந்து தாஸர் தலைவராகத் தெரிந் தெடுக்கப் பட்டார். ஆனால் இதற்கடுத்த வருஷத்திற்குள் அபிப்பிராய வேற்றுமைகள் ஏற்பட்டு விட்டன. சட்ட சபைகளுக்குள் காங்கிரஸ் கட்சியினர் பிரவேசித்து அரசாங்கத்திற்கு முட்டுக் கட்டை போட வேண்டுமென்ற கொள்கையுடைய சுயராஜ்யக் கட்சி கிளம்பியது. இதற்கு தேசபந்து தாஸரும் பண்டித மோதிலால் நேருவும் தலைவர்களாயிருந்து நடத்தினார்கள். இவர்களுக்கு அப்பொழுது நாட்டில் அதிகமான செல்வாக்கு இருந்தது. சட்ட சபைகளுக்குள் பிரவேசிக்காமல் அவற்றிற்கு வெளியேயிருந்து கொண்டு தேசப்பணியாற்ற வேண்டுமென்ற கொள்கையைக் கொண்ட மாறுதல் வேண்டாக் கட்சிக்கு மகாத்மா காந்தி தலைவராயிருந்தார். ஆனால் அப்பொழுது இவர் சிறைவாசத்தை அநுபவித்துக் கொண்டிருந்தார். இதனால் மாறுதல் வேண்டாக், கட்சிக் கிருந்த செல்வாக்கைக் காட்டிலும் சுயராஜ்யக் கட்சிக்கு அதிகமான செல்வாக்கு இருந்த தென்றே சொல்ல வேண்டும். தேசபந்து சுயராஜ்யக்கொள்கையைநாடெங்கணும் பரப்பும் நோக்கத்துடன் கல்கத்தாவில் 'பார்வர்ட்'என்று ஆங்கில தினசரியொன்றை ஆரம்பித்தார்.

1924ம் வருஷம் சுயராஜ்யக் கட்சியினர், கல்கத்தா நகர சபைத் தேர்தலில் போட்டி போட்டு வெற்றி பெற்றனர். தேசபந்து தாஸ் நகர சபை மேயராகத் தெரிந் தெடுக்கப் பட்டார். இவர் மேயர் பதவி வகித்த காலத்தில் நகரத்தின் ஏழை மக்களுக்கு அதிகமான உதவிகளைச் செய்தார்.

வங்காள மாகாணத்திலுள்ள ஹூக்ளி ஜில்லாவிலிருந்த தாரகேசுவர் கோயிலின் நிருவாகம் மிகவும் ஊழலாயிருந்தது. இதற்காக தேசபந்து தாஸர் 1925ம் வருஷம் அங்குச் சென்று சத்தியாக்கிரகம் செய்து கோயிலின் நிருவாகத்தைத் தாம் கைப்பற்றிக் கொண்டு அதனை ஒழுங்கு படச் செய்தார்.

மனிதரின் பரஸ்பர சம்பந்தம்

—ச. மு.

மனிதர்களுக்குள்ள பரஸ்பர சம்பந்தம் மிகவும் ஆச்சரியகரமானது. அந்த சம்பந்தம் பிரபஞ்சமனைத்தையும் ஒன்று கூடும்படி சங்கிலியின் பிணைபோல் கோர்த்துச் சேர்த்துவிடப் பட்டிருக்கின்றது. இக்காலத்து நாகரிக விருத்தியாலும் போக்கு வரத்துச் சாதனங்களாலும் வெவ்வேறான தூரமான இடங்களும் காலமும் அதிகமான தூரபேத வித்தியாசத்தை யுண்டு பண்ணாமல், பண்டங்களை வாங்குவோரும் விற்போரும் நேராகவந்து கட்டினாற் போல உலகமுழுதும் ஒரே மாதிரி மற்ற உலக விவகாரங்களிலும் எல்லா தேசங்களும் ஒன்றோடொன்று சம்பந்தப் பட்டிருக்கின்றன. ஓரிடத்தில் விபத்துக்கள் உண்டாகி அவ்விடத்திய பொருள்கள் நமது பக்கத்துக்கு வரக் கூடாமற் போனால், இவ்விடத்தில் விற்கப்படும் அத் தேசத்துப் பொருள்களுக்கு உடனே விலை ஏறிவிடுகின்றது. இவ்விதமே உலகம் முழுவதுமே ஒரு மார்க்கெட்டு போல் வியாபார ஸ்தலமாக அமைந்திருப்பது மிகவும் விசித்திரமாகும்.

மலையடி வாரங்களிலும் வனங்களிலும் வீடு வாசல் முதலியது ஒன்று மில்லாமல் கிழங்குகளைப் புசித்துக் கொண்டு கேவலம் மிருக ஜாதிகளைப் போலத் திரிந்து கொண்டிருக்கும் காட்டு மனிதர்களை எடுத்துக் கொண்டாலும், அவர்களுக்கும் அன்னியர்களின் உதவியில்லாமல் தீராதென்றே தோன்றும். அவர்களும் மற்ற இடங்களிலிருந்து பல உதவிகளை எதிர் பார்க்கிறார்களென்றே புலப்படும். அவர்கள் அன்னியாக் கூட்டுறவின் அபேக்ஷையை வேண்டாமலே காலந்தள்ளி விடுவதாய் வெளிக்குத் தோன்றினாலும் அது

1925ம் வருஷம் இடைக் காலத்தில் இவருக்கு தேக அசௌக்கியம் ஏற்பட்டது. இதனால் இவர் ஓய்வினின்று மீண்டும் வெளிவரவே யில்லை. 1925ம் வருஷம் ஜூன் மாதம் 16ந் தேதி மாலை டார்ஜீலிங் என்னும் நகரத்தில் இறைவனடி சேர்ந்தார். இவருடைய பிரேதம் கல்கத்தாவுக்குக் கொண்டு வரப்பட்டு மிகுந்த ஆடம்பரத்துடன் தகனம் செய்யப் பட்டது. எந்த இடத்தில் இவர் தகனம் செய்யப் பட்டாரோ அந்த இடத்தில் ‘சித்தரஞ்சன சேவா சதனம்’ என்ற ஒரு கட்டிடம் எழுப்பப்பட்டது. இதில் சிறந்த தொரு ஆஸ்பத்திரி யிருக்கிறது.

உண்மையல்ல. இத்தன்மையான காட்டு மனிதர்கள் எங்கேயோ சிலர் இருக்கிறார்களே யன்றி விசேஷமாகக் கிடையாது. இவ்வுலகத்தில் ஏறக்குறைய எல்லாத் தேசங்களிலும் நாகரீகம் சிலவற்றில் அதிகமாகவும், சிலவற்றில் உபாயமாகவும் பரவியிருக்கிறது. இப்படிப்பட்ட தேசங்களில் ஜனங்கள் அவரவர் வீட்டில் வைத்துக் கொண்டிருக்கும் பொருள்களையும் சாமான்களையும் பார்த்தால், அந்தப் பொருள்களையும் சாமான்களையும் செய்து கொடுக்க இத்தனை வேலைக்காரர்கள் தான் வேண்டியிருக்குமென்று கணக்கிட்டுச் சொல்வது முடியாது.

உலக முழுதும் பரஸ்பரம் சம்பந்தப்பட்டிருப்பதற்கு ஒரு உதாரணம் சொல்லுவோம். மிக்க ஐசுவரியம் பெற்று சகலவித போகங்களையும் அனுபவிக்கிற பணக்காரன் வீட்டிலுள்ள பதார்த்தங்களைப் பார்க்க வேண்டுமென்பதில்லை. ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை யென்று அன்றாடம் வேலை செய்து ஜீவனம் பண்ணுகிற அற்பக் குடியானவன் வீட்டைப் பார்த்தால் போதும்; மற்றொன்றும் வேண்டாம். அவன் மேலே போர்த்துக் கொண்டிருக்கிற ஒரு துணியைப் பார்ப்போம்; அது எத்தனை வேலைக்காரர்கள் சேர்ந்து துணியாயிற்று? பருத்திச் செடி வைத்து வளர்ப்பவன், பஞ்சு எடுப்பவன், நூல் நூற்கிறவன், நெய்கிறவன் முதலான வேலைக்காரர்கள் வேண்டியிருக்கிறது தவிர, இவர்களுள் ஒருவரிடத்திலிருக்கிற சாமானை மற்றொருவரிடத்திற்குக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியதற்காக எத்தனை மூட்டைக்காரர்களும் வர்த்தகர்களும் வேண்டும்? அன்றியும் அநேக சாமான்கள் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு வெகு தூரம் போக வேண்டியிருப்பதால், எத்தனை கப்பல் வேலைக்காரர்களும், எத்தனை ரயில் வண்டி வேலைக்காரர்களும் வேண்டும்?

இது மாத்திரமோ! இந்த வேலைக்காரர்களின் ஆயுதங்கள் ஒவ்வொன்றையும் செய்து கொடுக்க இதரமான வேலைக் காரர்கள் கணக்கில்லாமல் வேண்டியிருக்கும். விசித்திரமான யந்திரங்கள் எத்தனையோ இருக்கின்றன; அவைகளெல்லாம் இருக்கட்டும்; மிகவும் அற்பமான சிறு கத்தியைச் செய்ய எத்தனை பேர் தேவையாயிருக்கிறது? இரும்பு பெட்டி எடுக்கிறவன் முதல் கன்னான் வரையுமுள்ள பல வேலைக்காரர்களுடைய கூட்டுத் தொழிலினால் கத்தி என்பது செய்யப்படுகிறது. ஒரு கத்திக்கு இத்தனை பேர் வேண்டியதென்றால் பெரிய ஆயுதங்களுக்கு எத்தனை பேர் வேண்டும்? இப்படி ஒவ்வொன்றையும் பார்க்கப் போனாலோ, சமுத்திரத்தில் இறங்குகிறது போலிருக்கும்; நுட்பமாய் விசாரிக்கிற தென்றால் கேட்க வேண்டியதில்லை. இன்னும் வளரும்.

இப்படி ஒரு அற்ப துணியை பிடித்துப் பார்க்குங்கால் இவ்வளவு தூரம் இழுத்துக் கொண்டு போனால், மற்றப் பதார்த்தங்களையும் தனித் தனியே இத் தன்மையாய் ஆய்ந்து பார்ப்பது எப்படிப்பட்ட காரியம்? இந்த விஷயத்தை உள்ளாழ்ந்து பார்ப்போமானால், ஒருவன் தனக்கு வேண்டிய சாமக் கிரிகைகளையெல்லாம் தானே செய்து கொள்வது

கூடாத காரியம் என்று விளங்கும். அநேகமாயிரம் பேர்கள் சேர்ந்து ஒருவர்க்கொருவர் ஒத்தாசையாக நின்று வேலை செய்யாவிடின் ஒன்றுமில்லாத ஏழைக்குக் கூட அவனுக்கு வேண்டிய அற்ப பதார்த்தங்கள் கூடக் கிடைக்கமாட்டா. மனிதர்கள் ஒவ்வொருவரும் தம்மால் கூடிய வேலையைச் செய்து, மற்றவர்கள் செய்யும் வேலைகளின் பிரயோஜனத்தைப் பெற்று இவ்வாறாக பரஸ்பரம் ஒற்றுமையாக வாழ்கிறார்கள் என்று நமக்கு நன்றாய் விளங்கும்.

மேற்கண்ட விவரங்களிலிருந்தும் நாம் க்ஷேமமாய் வாழ் வேண்டியிருக்கிறதென்று தெரியவரும். இங்ஙனம் தெரியவரும் பக்குவத்தினால் உலக விவகாரமனைத்தையும் அறிய வேண்டுமென்ற ஆவல் ஒவ்வொருவருக்கும் உதிக்கின்றது. நம் நிலைமையை நாம் அறிந்து விருத்தி செய்து கொள்வதற்கு, மற்றவர்கள் எப்படி முன்னுக்கு வந்தார்கள் என்பதையும் கவனிக்க வேண்டியவர்களாகிறோம். இப்படி எந்த விஷயத்துக்கும் ஓரிடத்தில் இருப்பவர்கள் மற்றோரிடத்திலிருப்பவர்களை எப்பொழுதுமே எதிர்பார்க்க வேண்டியவர்களாகி, இங்ஙனம் உலக முழுதுக்கும் ஒரு அற்புதமான பரஸ்பர சம்பந்தம் தொடரப் பெற்றிருக்கின்றது.

மேற்சொல்லியது உலக முழுதும் வியாபித்துள்ள முதன்மையான பரஸ்பர சம்பந்தமாகும். இனி மற்றொரு பரஸ்பர சம்பந்தம் இருக்கின்றது. அதாவது, ஒவ்வொருவரும் பொது நன்மையில் அக்கரை கொண்டு, இவ்விதம் அநேகம் பேர் சேர்ந்து பொதுவான அக்கரைகளை ஏற்றுக் கொண்டவர்களாகி தங்களுக்குள் ஒரு கட்டுப்பாடு கொண்டு ஒரு ஜன சமூகமாக அமைந்து, பரஸ்பர சம்பந்தத்தை விருத்தி செய்து அவற்றின் மூலம் அநுகூலங்களையும் முன்னேற்றத்தையும் அடைவதாகும். இப்படி முன்னேற முயற்சிப்பதிலே சீக்கிரத்தில் வெற்றியை எதிர்பார்ப்பதானது ஏமாற்றங்கட்கு அடிக்கடி இடம் கொடுத்து விடும். ஏனெனில், உலக அநுபவம் எவ்வாறு இருக்கிறதென்றால், ஒரு மனிதனுடைய விவகாரத்தில் இன்று செய்த காரியத்துக்குப் பல வருஷங்களுக்குப் பிறகு பிரதிபலனை எதிர்பார்க்க வேண்டியிருப்பது போல்; ஜன சமூகத்தின் வாழ்க்கையில் ஒரு தலைமுறை செய்கிற காரியங்களின் பலனை மறு தலைமுறை அனுபவிப்பதே அரிதாகி, அந்தப் பலனைப் பெறுதற்கு நூற்றாண்டுக் கணக்காய் தாமஸப்படவும் வைத்து விடுகிறது. ஆகவே அடிக்கடி நேரும் ஏமாற்றங்களால் மனம் தளர்ந்து போகாமல் பரஸ்பர சம்பந்தத்தை மேன்மேலும் பெருக்கி ஐக்கியக் கட்டுப்பாட்டை இன்னும் விருத்தி செய்து கொண்டே சென்று, அதன் பலனைப் பின் சந்ததியாருக்கு வைத்துவிட்டு, இப்போது நாம் உழைப்பதொன்றையே நமது கடமையாகக் கருதிச் செல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். இதுகாறும் கூறியவற்றிலிருந்தும், நாம் பரஸ்பர சம்பந்தம் கொண்டவர்களாயிருக்கிறோமென்பதும், ஒரு ஜன சமூகமாகச் சேர்ந்து ஒருவர்க்கொருவர் உழைப்பின் மூலம் உதவிபுரிய வேண்டியவர்களாயிருக்கிறோமென்பதும், பலனை எதிர்பாராமல் நமது கடமைகளைச் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோமென்பதும் ஒருவாறு விளங்கும்,

அஹிம்சா தர்மத்தின் அந்தரங்கமென்ன?

சுவாமி பரமானந்தரைத் தழுவி யெழுதியது

—"ஆசிரமவாசி"

(சென்ற மாதத் தொடர்ச்சி)

இனி காந்தியைப் பற்றிப் பேசுவோம். அவர் நல்ல வழிக்கு ஒரு பெரிய சக்தியை உண்டாக்கியிருக்கிறார். 'துன்புறுதல் மனித வர்க்கத்தின் பட்டயம். அதுவே கால நியதியற்ற நீதி. குழந்தை சுகமாக வாழ்வதற்காகத் தாய் வருத்தப்படுகிறாள். இறப்பிலிருந்தே பிறப்புத் தோன்றுகின்றது. விதைத்த தானியம் அழிந்த பிறகுதான் புதுத் தானியப் பயிர் வளரும். வருத்தமாகிய அக்கினிச் சுவாலையினால் பரிசுத்தப்படாத நாடு ஒருபோதும் மேலோங்கி வளராது. வருந்துதலுக்கும் வாழ்வுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. வளர்ச்சி யென்பது பட்ட துயரத்தின் அளவைப் பொறுத்தது' என்று மஹாத்மா கூறுகின்றார். மேல்நாட்டார் இக் கொள்கையை விரும்பாவிடினும், பாரபட்சமின்றி கூர்ந்து ஆராய்பவருக்கு அஹிம்சா தர்மம் சீரிய ஒழுக்கத்துக்கு அடிப்படை என்பதைத் தெள்ளிதல் உணர்வர் சுயநல விருப்புள்ளவர் அத்தருமத்துக்கு அருகரல்லர்.

'அஹிம்சா தர்மமே இந்தியாவின் யோக்கியதா பத்திரம்' என்கிறார் ரோமெயின் ரோலண்ட் என்னும் மேற்றிசை ஞானி. 'அவள் அதைக் கைவிடின் அழிவை யடைவாள்' என்பது அவர் கருத்து. 'என்னை ஒருவன் பகைக்கின் நான் எங்ஙனம் அவனை நேசிப்பேன்' என்று பதில் கூறுகின்றனர். 'ஆம், நன்றாய் நேசிக்கலாம்' என்று பதில் கூறுகின்றோம். ஏனெனில் தனக்கு எவ்வளவு தீமையை ஒருவன் நினைத்தானோ அவ்வளவு அன்பை அவன் மீது தாம் செலுத்தியதாக புத்த பகவான் ஒரு முறை கூறியுள்ளார். ஆகையால் உன் மீது யாரேனுந் தீய எண்ணங்களை ஏவினால் நீ அவற்றை நல்லெண்ணங்களினால் நிவர்த்திப்பாயாக. உன்னை ஒருவன் பகைக்கில் அன்புக் கணைகளால் அப்பகையை வெல்வாயாக. 'இனிய உத்தாரம் கோபத்தை நீக்கும்' என்று விவிலிய நூல் கூறவில்லையா?

ஒரு பெரியாரைப் பற்றிப் பேசும்போது 'அவருடைய நெற்றியிலிருந்து ஒரு பிரபை தோன்றுகிறது. அதே அவருடைய யோக்கியதையின் முத்திரையாகும்' என்று சொல்லப் பட்டிருக்கின்றது. ஒரு உயர்ந்த இலட்சியத்தின் மீது சதா தியானத்தில் ஆழ்ந்திருப்பதால் நன்மை செய்வதற்கு ஒரு பெரிய சக்தி யுண்டாகின்றது. அத்தகைய சக்தி வாய்ந்தவர்,

தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் ஆண்டவனுக்கு அர்ப்பணஞ் செய்து விட்டு, தம் வாழ்நாளை பிறர் நல சேவைகளில் செல விடுவர். அப்படி இறப்பதே அவர்களுக்கு இறவாமையை அளிக்கின்றது.

அஹிம்சை, சரணாகதி என்னுந் துறைகளில் தம் வாழ்நாளை நடத்துபவர் அழியா இன்பத்தை அடைவர். அவர்கள் அறிவு, ஆற்றல், வலி என்பனவற்றைப் பெறுகின்றனர்.

முதன் முதல் காந்தியடிகளின் கொள்கையானது இராஜரீகத்தைப் பொருத்திருந்தது. பல கோடி மக்களின் தேசிய இலட்சியத்தை அடைவதற்கு வழி காட்டுவதே அவருடைய நோக்கமாக இருந்தது. தற்சமயம் அந் நோக்கமானது தன் எல்லையைக் கடந்து உலகனைத்தும் பரப்பி யிருக்கின்றது. 'நான் கடவுளைக் காண வேண்டும். சத்தியமே கடவுள் என்பதை நான் அறிவேன். கடவுளை அறிவதற்கும், அவர் தரிசனம் பெறுவதற்கும் அஹிம்சா (அதாவது அன்பு தர்மமே) ஒரு நிச்சயமானவழி. இந்தியாவின் சுயேச்சைக்காக நான் வாழ்கின்றேன். நான் அதற்காக உயிர் விடவுந் தயார். ஏனெனில் அதுவும் உண்மையில் ஒரு பகுதிதான். சுயேச்சை பெற்ற இந்தியாவே உண்மைக் கடவுளை வழிபட முடியும்' என்று கூறுகின்றார்.

இக்காலத்து மகானாகிய காந்தியடிகள் அன்னை இந்தியாவின் அருந்தவப் புதல்வன் மட்டுமின்றி, புத்தர், கிறிஸ்து என்பவரின் வழித் தோன்றலாகவும் விளங்குகின்றார். வணக்கத்துக்குரிய பிரான்சிஸ் ஞானியாரின் சகோதரன் எனலாம். கோடிக்கணக்கான மக்களின் எதிர்கால நியதிக்கு வழி காட்டுவதற்குத் தகுதியற்றவரென உணர்ந்து, தான் ஆண்டவனிடத்துச் சரணாகதியடைந்து, அவனருளும் வலியும் பெற்று அப் பெரும் பணியை ஆற்றி வருகின்றார். இந்த இரகசியத்தையே கிறிஸ்து நாதரும் 'எனக்காக எவன் தன் உயிரை இழப்பானோ அவனே அதைப் பெறுவன்' எனக் கூறியுள்ளார். விரும்பினால் நாம் அனைவரும் அப்படிச் செய்யலாம்.

இராஜரீகத் துறையில் மட்டும் காந்தியடிகள் முயன்றிருப்பின் அவரை ஒரு உதாரண புருஷராக உலகுக்கு எடுத்துக் காட்ட மாட்டோம். இந்தியாவில் வருந்தும் மக்களின் மீதுள்ள தயையே அவர்களுக்காக அவ்வளவு பாடுபடும்படி அவரை ஏவியது. துன்பம், பிணி, வறுமை, அகால மரணம் என்பவற்றை நீக்கி, பசித்தோருக்கு அன்னம், உடையில்லாருக்கு உடுப்பு, அடிமைகளுக்குச் சுயேச்சை இன்றியமையாது வேண்டப்படுவன என்பதை உணருகிறார்.

மனிதனுக்கு விமோசன மளிக்கக் கூடிய ஒரு புதிய வழியை மஹாத்மா தம் வாழ்வினால் காண்பிக்கிறார். 'இம் மண்ணுலகில் ஒருவரையும் பகைக்க என்னால் முடியாது. நாற்பது ஆண்டுகளாகப் பயின்ற அப்பியாசத்தின் பலனாக, நான் எவரையும் பகைப்பதை ஒழித்து விட்டேன்' என்று உறுதி மொழி கூறுகின்றார். நீண்ட காலப் பயிற்சியைப் பார்த்து நாம் பயப்பட வேண்டியதில்லை, ஏனெ

னில் மனதைப் பண்படுத்தினால் ஒரு காலத்தில் இயலாத காரியம் மற்றொரு காலத்தில் எளிதாக முடியலாம். சதா காலமும் அலைகள் போன்று எழும் பகை, கோபம், முதலியவற்றை மனோ வலியால் தடுக்க வேண்டும். பகையைக் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைத்து அன்பை மிக மிகப்பெருக்கு. இப்படி முயலின் பகை உன் சுபாவத்திலிருந்து நீங்கும்.'

மஹாத்மா காந்தியோ நாற்பது ஆண்டுகளாகப் பகையாமையைக் கைக்கொண்டார். சாதாரண மக்களாகிய நமக்கு அப்படிச் செய்வது இயலாத காரியம். ஆகையால் நாற்பதாண்டுகளுக்குப் பதிலாக, நாற்பது நாளைக்கு அல்லது நாற்பது நிமிஷத்துக்குத் தானும் நாம், ஆயுதங்களையும், நமது மனத்தில் எழும் அழுக்காறு, அவா வெகுளி என்னுந் தீய குணங்களையும் ஒழித்து சமாதானம், சாந்தி, தயை என்னுஞ்சீரிய எண்ணங்களை மனதில் உட்கொண்டால் நமது வாழ்வு தூய்மை பெற்றுப் புனித மடையும். அப்பொழுது இவ்வுலகமே உருமாறி நமக்கு ஒரு சிறந்த புதிய உலகமாகத் தோன்றும்.

‘எனது அன்பு ஒரு சாதியாருக்கோ அல்லது சமயத்தாருக்கோ மட்டும் உரித்தானதல்ல. முஸ்லீம்களை நேசிக்கும் நான் ஆங்கிலேயரை வெறுப்பதற்கு இடமில்லை. இந்து முஸ்லீம்களை அவர்களின் முறைகள் எனக்கு விருப்புள்ளதாயிருப்பதால் நான் நேசித்தால், அவர்களின் முறைகள் திருப்தியீனத்தை அளிக்குங்கால் நான் அவர்களை வெறுக்க வேண்டி நேரிடும். நேசிக்கப்படுபவரின் நலங்கண்டு அதற்காக நேசிப்பது வியாபார சம்பந்தமான அன்பேயாகும். உண்மையன்பு’ ஒரு’ காரணத்தையும் அடிப்படையாகக் கொண்டதல்ல; அன்புக்கு அன்பு செய்வது; ஒழுக்கத்துக்காக ஒழுக்கத்தைப் பேணுதல் போல்வன உண்மை அன்பைக் குறிக்கும். அன்பு செய்வது மனித சுபாவம். ஆகையால் கைம்மாறு கருதாது அன்பு செய் என்கிறார் மஹாத்மா. உன்னிடமுள்ள எல்லாவற்றையும் பிறருக்குக் கொடு; ஆனால் ஒரு பலனையும் எதிர்பாராதே. உபகாரத்தை எதிர் பார்ப்பவனுக்கு அவனுடைய சமுத்திரம் போன்ற கொடையும் ஒரு சிறு துளி போன்று குறுகும்' என்று சுவாமி விவேகாநந்தர் கூறியுள்ளார்.

:

கிறிஸ்து சமயத்தில் அன்பும் தயையும் உருவெடுத்தால் போன்று இயேசு நாதர் விளங்குகின்றார். அவரைச் சிலுவை யேற்றியபோதும் ‘தந்தையே! அவர்களை (தன்னைத் தண்டிப்பவர்களை) மன்னிப்பாயாக! ஏனெனில் அவர்கள் செய்வதை நன்கு உணர்ந்தவர்கள் அல்லர்' என்று கூறியிருக்கிறார். ‘நான் என்னைச் சூனிய மாகும்வரை சுருக்கல் வேண்டும். ஏனெனில், ஒருவன் தன்னை மக்களெல்லாரினுங் கடையனாகக் கருது மட்டும் அவனுக்கு விமோசனமில்லை. ஆகையால் அஹிம்சை யென்பது தாழ்மையின் வரம்பு எனலாம்' என்று மஹாத்மா கூறுகின்றார்.

செர்வூட் எட்டி (Sherwood Eddy) என்னும் அமெரிக்கப் பெரியார் மஹாத்மா காந்தியைப் பற்றிப் பேசும் பொழுது ‘அவர் (காந்தி) புத்

தந்தையை தயையையும், வணக்கத்துக்குரிய பிரான்ஸிஸ் (St. Francis ஞானியின் தூய்மையையும், தொமாஸ் ஜெவ்வரசன் (Thomas Jeffersen) என்பவரின் அரசியல் திறமையையும் ஒருங்கு வாய்ந்தவர்' என்று கூறியிருக்கிறார். இந்துவாயினும், மகம்மதியனாயினும், சீனனாயினும் ஜப்பானியனாயினும் அல்லது அமெரிக்கனாயினும் விரும்பத்தக்க ஒரு பெரும் புகழ் அல்லவா இது? நமது மூடக் கொள்கைகளையும் சாதிவித்யாசங்களையும் ஒழித்து, மனித வாழ்க்கையை ஒன்று படுத்துவதற்கு ஒரு சிறந்த சீரிய முறையை நாம் கைப்பற்றினால் சத்திய யுகத்தை இப்போதே இங்கு வரப் பண்ணலாம். அத்தகைய வாழ்க்கை முறைக்கு அடிப்படை அஹிம்சாதர்மம் என்று புத்த பகவான் கூறுகிறார்; இயேசு கிறிஸ்து நாதர் அன்பே அதற்கு அஸ்திவாரம் என்கிறார்; காந்தியடிகளும் அஹிம்சையே அதற்குச் சிறந்தவழி என வற்புறுத்துகின்றார். சீரான முறைகளைக் கைக்கொண்டு ஒழுகுபவர் தெய்வீகக் குழந்தைகளாகின்றனரென்றும், அவர்களின் தேஜஸிலிருந்து கண்ணுக்குப் புலப்படாத ஆயுதக்கதிர் பரவி அவர்களைக் காப்பாற்றுகின்றனவென்றும் லாஓட்ஸ் (Laotse) என்னுஞ் சீனப் பெரியார் கூறுகின்றார்.

போர்வீரர் சண்டைக்கு அணிவகுத்துப் பவனி போகும் போது சங்கீத வாத்தியங்கள் முழங்குவது வழக்கம். அதைக் கேட்டு யுத்த வீரர் பயம் ஒழிந்து உற்சாகம் பெறுகின்றனர். இது செயற்கை முறையால் அடைந்த மனவுறுதியாகும். ஆனால் உண்மையான மனோதிடம், வலி, சகிக்கும் ஆற்றல் முதலியன மனிதனின் சீரிய ஒழுக்கத்திலும், ஆத்மீக உணர்ச்சியிலும் தங்கியிருக்கின்றன. பகை, பேராவா, அழுக்காறு, கோபம் முதலிய தீய குணங்கள் நம்மிடம் இருக்கும் வரை அந்த உணர்ச்சி நமக்குச் சொந்தமாகாது.

காந்திஜியின் கொள்கை அவருடைய காலத்துக்குப் பின் சித்தியடையக் கூடியதல்லவென்று சிலர் கருதுகின்றனர். அவர்கள் கூற்று முற்றிலுந் தவறென்று ஆயிரம் முறை கூறினாலும் மிகையாகாது. சீரிய நோக்கம் எதுவாயினும் ஒரு போதும் பயனடையாமலில்லை. கிறிஸ்து நாதர் இறக்கும் போது எத்தனை சீடரை விட்டுச் சென்றார்? மிகச் சிறிய தொகையினராயினும் அவருடைய கொள்கைகள் உலகெங்கும் பரவி மானிட வர்க்கத்துக்கு ஆறுதலளிக்கவில்லையா?

நாம் உண்மையாக ஆயுத பாணிகளாவதற்கு நம்மிடத்துள்ள ஆயுதங்களைக் களைதல் வேண்டும். அச்சம், பகைமலிந்த தற்காலம் நீங்கி ஒரு சத்திய யுகம் பிறக்கும் என்பது எமது துணிபு. அது இருள் மயம் பொருந்திய இக்கால வாழ்வை மறக்கச் செய்யும். நமது பாதுகாப்பானது, உணவு, பானம், உடை, படை முதலியவற்றில் மட்டுந் தங்கியிருக்கவில்லை. உங்களைப் பார்க்கிலும் வலிமிகுந்த சாதியார் உங்களுடைய அரண்களையும் ஆயுதங்களையும் இலகுவில் அழித்து விடுவர். ஒரு சாதியார் ஒரு மடங்கு படை தயாரித்தால் மற்றொரு ஜாதியார் பன் மடங்கு படை திரட்டி விடுகின்றனர்.

ஒருவன் மற்றொருவனைப் பார்க்கிலும் பெருமை யடைவதற்கு முயலும் முயற்சியைப்பற்றி ஸ்ரீராம கிருஷ்ணர் பின் வருமாறு கூறுகின்றார்:- மாலை வேளையில் ஒரு மின் மினிப் பூச்சி தோன்றித் தன் சிற்றொளியால் வெளிச்சத்தைக் கொடுக்கின்றது. அத்தருணம், அது தன்னை விடப் பெரியார் யாருமில்லை யென்று அகம்பாவங் கொள்ளுகின்றது. நட்சத்திரங் தோன்றினவுடன் அதன் வெளிச்சமானது மின் மினிப் பூச்சியின் வெளிச்சத்தை மங்கச் செய்கின்றது; உடனே மின் மினிப் பூச்சி தன் பெருமையை நினைத்து வெட்கித் தலை குனிகின்றது. அத்தருணம் நட்சத்திரமோ தன்னை விடப் பெரியார் யாருமில்லை யென்று அது மகிழ்கின்றது. சற்றுப்பின் சந்திரன் தோன்றித் தன் வெண் கதிர்களைப் பரப்பி, நட்சத்திரத்தை நாணும்படி செய்து தற்பெருமை கொள்கின்றது. சூரியன் உதயமானதும் சந்திரனும் கதிரவன் முன் தலை காட்ட முடியாமல் மறைந்து விடுகின்றான்.' இதே போன்றவை தான் மனிதனால் கை யாடப்படும் நூதன கருவிகளும். அவை எக்காலத்துக்கும் நமக்குப் பாதுகாப்பை அளிக்கத் தக்கனவல்ல. அவற்றில் நம்பிக்கை வைப்பதைப் பார்க்கிலும், ஆத்மீகக் கொள்கைகளைப் பின்பற்றி ஆண்டவனின் வலியையே நமது ஆயுதமாக்கிக் கொண்டால் அதை விடச் சிறந்த பற்றுக் கோடு நமக்கு வேறுண்டோ?

தற்கால நிலையைக் கண்டு நாம் மனந் தளர்ந்து விடக் கூடாது. மனித சமுதாயம் இத்தகைய கொடுமைகளைப் பல முறை அநுபவித்ததுண்டு. அவற்றால் அது ஒரு காலமும் முற்றாய் அழிந்து போனதில்லை. உண்மை மறுபடியும் ஜயமடைவது நிச்சயம். அதை நாம் மறவாதிருப்போமாக! துன்பமானது நமது மனதைப் பரிசுத்தம் பண்ணி நம்மை ஆண்டவனுக்குச் சரணாகதி யடையும்படி செய்யுமாயின் அதே நமக்குப் பெரிய பாக்கியமாகும்.

நமது ஆன்றோர் அருளிய இலட்சியங்களும் போதனைகளும் பல. அவை எல்லாவற்றையும் நாம் அறிந்து கொள்ள முடியாது. ஒரு இலட்சியத்தையேனும் வாழ்வில் கடைப் பிடித்தொழுகினால் நாமும் பெருமை யடையலாம். ஆதலால் நாம் அனைவரும் அஹிம்சா தர்மத்தின் கொள்கைகளை நமது வாழ்வில் கைக் கொண்டொழுகுவோமாக. மனம், மொழி, மெய்யினால் நம் சகோதரர்களுக்குப் பொல்லாங்கு செய்யா திருப்போமாக! மனிதருக்கு மட்டுமன்றி, விலங்கு, பறவை தாவரங்களுக்கும் எமது அன்பு உரியதாகுக! அப்படி அன்புக்கு அன்பு செய்தால் தான் நாம் உயர்ந்த இலட்சியங்களுக்கு அருகராவோம்.

எல்லோரும் ஒரு குலம் போல் ஒருமித்து வாழ்வதற்கு நாம் முயலுதல் வேண்டும். அன்பும், பிறர் பொறுப்புக்களை உணருந் தன்மையும் ஐக்கிய வாழ்வுக்கு இன்றியமையாதவை. நமது இலட்சியத்தின் சந்நிதானத்தில் சதா வாழ்வது அவற்றை அடைவதற்கு முதற்படியாகும். நாம் அத் துறையில் முயல்வோமாயின் சகல ஜீவராசிகளுடனும் சமாதானமாக வாழ்ந்து, உலகில் சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்குத் தகுதியுடையவராவோம்.



உலகம் சுற்றும் தமிழன்

எழுதியவர்: ஸ்ரீ ஏ. கே. செட்டியார்; வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், 52, அரமனைக்காரத் தெரு, சென்னை., டபிள் கிரவுன் அளவு 1x16; 104 பக்கங்கள்; விலை: 12 அணா.

இந்தப்புஸ்தகத்தில் மொத்தம் 13 கட்டுரைகள் அடங்கி யிருக்கின்றன. இவற்றில் ஐந்து கட்டுரைகள் 'ஜோதி' யில் வெளிவந்தவை. ஆதலின், இந்தப் புஸ்தகத்தைப் பற்றியோ, ஸ்ரீ ஏ. கே. செட்டியார் அவர்களைப் பற்றியோ, 'ஜோதி' வாசகர்களுக்கு நாம் அறிமுகப்படுத்த வேண்டியது அவசிய மில்லை. ஸ்ரீ செட்டியார், வசீகரமான நடை யெழுதுவதில் கைதேர்ந்தவர் என்பது தெரிந்தது தானே. புஸ்தகம் மிகவும் எடுப்பா யிருக்கிறது. ஆனால் பன்னிரண்டணா விலை சிறிது அதிகமென்று சிலர் கருதக் கூடும்.

கட்ட பொம்மு

ஆசிரியர்: ஸ்ரீ தி. நா. சுப்பிரமணியன்; வெளியிட்டோர்; நவயுகப் பிரசுராலயம் லிமிடெட், ஜார்ஜ் டவுன், சென்னை; டபிள்கிரவுன் அளவு 1x16; 220 பக்கங்கள்; விலை: ரூ 1-8-0

இது, திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாஞ்சாலங் குறிச்சியைப் பற்றிய சரித்திரம். கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும் தமிழ்நாட்டு வீரர்களுக்கும் இடையில் நடைபெற்ற போர்களைப்பற்றியும், தமிழர்களின் ராஜதந்திர அறிவைப் பற்றியும் இதில் விரிவாகக் கூறப்பட் டிருக்கிறது. இந்நூலாசிரியர், சரித்திர ஆராய்ச்சியில் நிரம்பிய புலமை யுடையவர் என்பதை இந்நூலினின்று நன்கு தெரிந்து கொள்கிறோம். இந்த மாதிரியான தமிழ்நாட்டுச் சரித்திர நூல்கள் பல வெளியாக வேண்டு மென்பது நமது பெருவிருப்பம். ஸ்ரீ சுப்பிரமணியம், இந்த விருப்பத்தை ஓரளவாவது பூர்த்தி செய்ய வேண்டுகிறோம்.

இந்திய சமஷ்டி அரசியல்

—கே. வி. ராமசுப்பிரமணியம் B. A. B. L.

சமஷ்டி சர்க்கார் வசூலிக்கும் வருமான வரியில் ஒரு பாகத்தை மாகாணங்கள் அடைய வேண்டுமென்றும் அந்தத் தொகையை நிஷ்கரிஷை செய்து ஒரு மன்னர் உத்திரவு (Order-in-Council) வெளியிடப்பட்டிருக்கிறதென்றும் சென்ற மார்ச் மாத இதழில் குறிப்பிட்டிருந்தோம். சென்ற மார்ச் மாதம் வெளியிடப்பட்ட மற்றொரு மன்னர் உத்திரவு மூலம் தொகை சம்பந்தமாக சொல்ப மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மாறுதல்கள் மூலம் மாகாணங்களுக்குக் கிடைக்கக் கூடிய தொகைகொஞ்சம் குறைந்திருக்கிறது.

சமஸ்தானங்களிலிருந்து சமஷ்டி சர்க்காருக்குக் கிடைக்கக் கூடிய வரி, வருமானங்களைப் பற்றி இனி ஆராய்வோம், சாதாரணமாக சமஷ்டி ஆட்சியில் சேர்ந்திருக்கும் ஒவ்வொரு வியக்தி (unit) க்கும் சம உரிமைகளும் சம பொறுப்புகளும் உண்டு. பாத்தியா பாத்தியங்களிலாவது வரி வசூல் சம்பந்தமாகலாவது யாதொரு தாரதம்மியமும் இருப்பதில்லை. ஆனால் இந்திய சமஷ்டி அரசியல் சம்பந்தமாக இந்த அம்சம் பூர்த்தியாக இருக்க இயலவில்லை.

தற்காலத்தில் இந்திய சர்க்கார் வசூலிக்கும் வரிகளில் முக்கால் பங்குக்கு மேல்பட்டவை மறைமுகமான வரிகள்(indirect taxes). கால் பங்குக் குறைவான பங்கே நேர்முகமான வரிகள் (direct taxes). (இந்த வரிகளைப் பற்றி நாம் ஏற்கனவே முன் ஒரு வியாசத்தில் எழுதியிருக்கிறோம்).

இந்த நேர்முகமான வரிகளில் முக்கியமானது வருமான வரி. இந்த வரி மாகாணங்களிலிருந்து மட்டும் வசூலிக்கப்படும். இந்திய சமஸ்தானப் பிரஜைகளிலிருந்து யாதொரு வருமான வரியும் வசூலிக்கப்பட மாட்டாது. ஆனால் வருமான வரியின் மீது சர்சார்ஜ் (Sur charge) என்ற அதிக வரி விதிக்கும் பக்ஷத்தில், இந்த அதிக வரி மாகாணப் பிரஜைகளிடமிருந்து மட்டும் இல்லாமல் சமஸ்தானப் பிரஜைகளிடமிருந்தும் வசூலிக்கப்படும். (இவ்வித சர் சார்ஜ் என்ற அதிகவரி சென்ற ஐரோப்பிய யுத்தம் நடந்த காலத்திலும், அதற்குப் பின்பு கொஞ்ச காலமும் இந்திய சர்க்கார் விதித்தது நம் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.) இந்த அதிக வரி விதிப்பிலும் சமஸ்தானங்களுக்கு ஒரு பிரத்தியேக சலுகை காண்பிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, சமஷ்டி

சர்க்கார் இந்த வரியை பிரஜைகளிடம் நேரில் வசூலிக்காமல், இந்த வரி மூலமாக எவ்வளவு தொகை வசூலாகக் கூடுமோ அந்தத் தொகையைசமஸ்தானாதிபதியே செலுத்துவிக்க அந்தந்த சமஸ்தானாதிபதிக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. சமஷ்டி சர்க்கார் சமஸ்தானப் பிரஜைகளிடமிருந்து நேருக்கு நேராக இந்த வரியை வசூலித்தால் சமஸ்தானாதிபதிகளின் ஆதிபத்தியம் பாதிக்கப் பட்டு விடும் என்று சமஸ்தானாதிபதிகள் அபிப்பிராயப் பட்டதால் இந்த உரிமை அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

இந்த சர் சார்ஜ் வரி தவிர இன்னும் ஒரு நேர்முகமான வரி இந்திய சமஸ்தானப் பிரஜைகள் செலுத்த வேண்டும். இதற்கு ஆங்கிலத்தில் 'கார்பொரேஷன் டாக்ஸ்' என்று பெயர். கம்பெனிகளின் வரும்படியின் பேரில் விதிக்கும் சூபர் டாக்ஸ் (Supertax)க்குத்தான் Corporation tax என்று பெயர். இந்த வரியும் சமஷ்டி அரசியலை ஸ்தாபித்து 10 வருஷத்துக்குப் பிற்பாடுதான் சமஸ்தானங்களில் விதிக்க வேண்டும். இந்த வரியும் சமஸ்தானாதிபதிகள் இஷ்டப்பட்டால் சமஷ்டி சர்க்காருக்கு மொத்தமாகக் கட்டி விடலாம்.

இந்த இரண்டு விதமான வரிகளைத் தவிர வேறு யாதொரு நேர்முகமான வரியும் சமஸ்தானப் பிரஜைகள் செலுத்த வேண்டியதில்லை.

தற்காலம் சில சமஸ்தானங்கள் இந்திய சர்க்காருக்குக் கப்பம் கட்டுகின்றன. பல காரணங்களை முன்னிட்டு இந்தக் கப்பம் செலுத்தும் வழக்கம் ஏற்பட்டது.

(a) சில தேசங்கள் செலுத்தும் கப்பம் அந்த தேசம் பிரிட்டிஷ் சர்க்காரின் ஆதிபத்தியத்தை ஒப்புக் கொண்டு, அதனுடைய உதவியை நாடி அதற்குப் பிரதியாகச் செலுத்தும் தொகையைக்குறிக்கும். ஜெயபூர், உடையபூர், மைசூர், முதலிய சமஸ்தானங்கள் செலுத்தும் கப்பம் இந்த வகுப்பைச் சேர்ந்தவை.

(b) பிரிட்டிஷ் சர்க்காருக்கு ராணுவ உதவி செய்யச் சில சமஸ்தானங்கள் உடன்படிக்கைகள் மூலம் கட்டுப்பட்டிருந்தன. ராணுவம் அனுப்புவதற்குப் பதிலாக ரொக்கமாகத் தொகைகள் சில சமஸ்தானங்கள் செலுத்தி வருகின்றன. போபால், இந்தூர் முதலிய சமஸ்தானங்கள் செலுத்தும் கப்பம் இந்த வகுப்பைச் சேர்ந்தவை.

(c) தங்கள் சமஸ்தானத்தின் பாதுகாப்பை யுத்தேசித்து சர்க்காரைச் சேர்ந்த ராணுவத்தின் ஒரு சிறு பகுதியை தங்கள் சமஸ்தானத்தில் வைத்து வைப்பதற்குப் பிரதியாக சில சமஸ்தானங்கள் கப்பம் செலுத்துகின்றன. திருவாங்கூர் கொச்சி இவைகள் செலுத்தும் கப்பம் இந்த வகுப்பைச் சேர்ந்தவை.

(d) இன்னும் பல வேறு விதமான உதவி செய்வதற்காக மற்ற சமஸ்தானங்கள் கப்பம் செலுத்தி வருகின்றன.

இந்த கப்பம் சம்பந்தமான விவரங்களை விரிவாக 'டேவிட்சன் கமிட்டி ரிப்போர்ட்' என்ற ஒரு ரிப்

போர்ட்டிலிருந்து நேயர்கள் அறிந்து கொள்ளலாம். இந்திய அரசியல் சட்டம் 147-வது செக்ஷனிலும் இதைப் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது.

இவ்விதம் சமஸ்தானங்கள் செலுத்தும் கப்பம் சுமார் 75 லக்ஷம் ரூபாய் ஆகிறது. சமஷ்டி அரசியல் ஏற்பட்டவுடன் இந்தக் கப்பம் வசூல் செய்வது நிறுத்தப்படும். பூராத் தொகையும் உடனேயே நிறுத்தி விடப்பட மாட்டாது. சமஷ்டி அரசியல் ஆரம்பித்து 20 வருஷத்திற்குள் சிறுகச் சிறுக மேற்படி தொகையைக் குறைத்து, 20 வருஷம் பூர்த்தியானதும் பூராத் தொகையும் வஜா செய்யப்படும். எந்தக் காரணத்தையிட்டுச் சில சமஸ்தானங்கள் கப்பம்செலுத்துகின்றனவோ அதே காரணத்துக்காக வேறு சில சமஸ்தானங்கள் தங்களுக்குச் சேர்ந்த இடங்களில் சிலதை இந்திய சர்க்காருக்குக் கொடுத்திருக்கின்றன. இதற்குப் பிரதியாக இந்திய சர்க்கார் இந்த சமஸ்தானங்களுக்குத் தேவையான போது ராணுவ உதவி செய்வதாக ஒப்புக் கொண்டார்கள். சில சமஸ்தானங்களுக்கும் இந்திய சர்க்காருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி இந்திய சர்க்காருக்கு சில ராணுவங்கள் பட்டாளங்கள் சப்ளை செய்வதாகச் சில சமஸ்தானங்கள் ஒப்புக் கொண்டிருந்தனர். இதற்குப்பதிலாக சில இடங்களை இந்த சமஸ்தானங்கள் இந்திய சர்க்காருக்குக் கொடுத்திருக்கின்றன. இந்த இரண்டு வித காரணத்தினால் சில சமஸ்தானங்களுக்குச் சேர்ந்த இடம் இந்திய சர்க்காருடைய ஆளுகையில் இந்திய மாகாணங்களுடன் சேர்க்கப்பட்டு இருக்கிறது. இந்த இடங்களைத் திரும்ப சமஸ்தானங்களிடம் ஒப்புவிப்பது சாத்யமில்லை. ஆகையால் இந்த இடங்களுக்குப் பதிலாக ரொக்கமாகச் சில தொகைகள் சமஸ்தானங்களுக்குக் கொடுக்கப் படவேண்டும் என்று தீர்மானமாகி யிருக்கிறது. ஹைதராபாத், குவாலியர் (Gwalior) இந்தூர், (Indore) தார், (Dhar) சங்கிலி (Sangli) ஆக இந்த ஐந்து சமஸ்தானங்களும் இவ்விதம் இடங்கள் கொடுத்திருக்கின்றன. ஹைதராபாத் நீங்கலாக மற்ற 4 சமஸ்தானங்களுக்கும் இந்த வகையில் செலுத்தப்பட வேண்டிய தொகை சுமார் 37 லக்ஷம் ஆகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. ஹைதராபாத் சமஸ்தானம் மட்டும் இந்தத் தொகையைப் பெற விரும்பவில்லை. ஏற்கனவே அமுலிலிருக்கும் ஏற்பாடு ஊர்ஜிதத்திலிருந்து வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. அதாவது பீரார் மாகாணம் ஆதியில் ஹைதராபாத்தைச் சேர்ந்திருந்தது. பிரிட்டிஷ் சர்க்கார் தங்களுக்குச் சேர்ந்த ராணுவத்தின் ஒரு பகுதியை ஹைதராபாத் சமஸ்தானத்தின் பாதுகாப்பின் பொருட்டு, ஹைதராபாத்தில் வைக்க ஒப்புக் கொண்டார்கள். இந்த ஏற்பாடு 1800ம் வருஷம் ஏற்பட்டது. முதலில் இந்த ராணுவத்தின் செலவை ஹைதராபாத் சமஸ்தானம் ரொக்கமாகச் செலுத்தி வந்தது. பிறகு 1853ம் வருஷம் முதல் பீரார் மாகாணப் பிரதேசத்தை பிரிட்டிஷ் சர்க்காரிடம் ஒப்புவித்து, இந்தப் பிரதேசத்தின் வரும்படியிலிருந்து மேற்படி ராணுவத்தின் செலவை பர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. 1902ம் வருஷம் ஏற்பட்ட உடன்படிக்கை மூலம் இந்த மாகாணம் இந்திய

சர்க்காருக்கு சாசுவத குத்தகைக்கு விடப்பட்டு இந்த மாகாணத்தின் பூரா வரும்படியையும் இந்திய சர்க்கார் அடைந்து வருகிறார்கள். ராணுவச் செலவு நீக்கி மீதம் கிடைக்கக் கூடிய வரும்படி ரூபாய் 25 லக்ஷம் என மதிப்பிடப்பட்டு இந்தத் தொகைக்குச் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த பீரார் மாகாணம் மத்திய மாகாணங்களுடன் சேர்ந்து நிர்வகிக்கப் பட்டு வருகிறது. ஆனால் பீரார் ஹைதராபாத் சமஸ்தானத்தைச் சேர்ந்த பிரதேசமாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. பீரார் தேசத்துப் பிரஜைகள் பிரிட்டிஷ் இந்தியப் பிரஜைகள் அல்ல. அவர்கள் ஹைதராபாத் சமஸ்தானப் பிரஜைகள்.

புதிய இந்திய அரசியலிலும் இந்த ஏற்பாடு ஊர்ஜிதப்பட்டிருக்கிறது.

வரி சம்பந்தமாகச் சில சமஸ்தானங்கள் சில சுதந்திரங்கள் அனுபவித்து வருகின்றன.

(1) இந்திய மாகாணங்கள் சமஸ்தானங்கள் இவை இரண்டும் மத்திய சர்க்காருக்கு சுங்கவரி செலுத்துகின்றன என்பதை ஏற்கனவே கூறியிருக்கிறோம். ஆனால் சில சமஸ்தானங்கள் தங்கள் தேசத்திற்குள் வரும் சாமான்களுக்கு சுங்கவரி (Customs duty) விதிக்கின்றன. கடலோரம் இருக்கும் சில சமஸ்தானங்களே முக்கியமாக திருவாங்கூர் கொச்சி கத்தியவார் இருக்கும் சமஸ்தானங்கள் இந்த வரி விதிக்கின்றன. இந்த வரி விதிக்கப் படும் சாமான்கள் இந்த சமஸ்தானங்களிலிருந்து பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வந்தால் அவை மறுபடியும் இந்திய சர்க்காருக்குச் சுங்கவரி செலுத்த வேண்டும். ஆகவே இந்த சமஸ்தானத் துறைமுகங்களில் நேராக இறக்குமதி செய்யப் பட்டு சமஸ்தானத்தில் உபயோகிக்கப்படும் சாமான்கள் இந்திய சர்க்காருக்கு யாதொரு சுங்கவரியும் செலுத்துவதில்லை. வரி வசூலிக்கும் பாத்தியதையை இந்த சமஸ்தானங்கள் விட்டுக் கொடுக்க சம்மதப்படவில்லை. இது விஷயமாக இந்த சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன. முடிவான ஒப்பந்தம் ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால் ஒரு விஷயம் மட்டும் இந்திய அரசியல் சட்டத்தில் ஸ்பஷ்டமாகத் துலக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் சுங்கவரி வசூலிக்கும் சமஸ்தானம் பிரிட்டிஷ் சர்க்காருக்கு தங்கள் பிரதேசத்தின் சில இடங்களைக் கொடுத்திருக்கும் பக்ஷத்தில், இந்த வரி வசூல் மூலமாகவும் இன்னும் கீழே சொல்லப்போகும் சுதந்திரங்கள் மூலமாகவும் சமஸ்தானங்களுக்கு என்ன வரும்படி கிடைக்கிறதோ அந்தத் தொகையிலிருந்து கழித்து மீதத் தொகைகளை மட்டுமே சமஸ்தானத்துக்குக் கொடுக்கப்படும்.

இவ்விதம் சமஸ்தானங்கள் சுங்க வரிகள் விதித்து அதனால் இந்திய சர்க்காருக்கு நஷ்டம் ஆக ஏற்படும் தொகை சுமார் 182 லக்ஷம் என்று மதிக்கப் பட்டிருக்கிறது.

(2) சில சமஸ்தானங்கள் தங்களுக்கு வேண்டிய உப்பைத் தாங்களே தயாரித்துக்கொள்கின்றன. இவ்விதம் தயார் செய்யும் உப்பு சம்பந்தமாக இந்திய சர்க்கார் இழக்கும் வரும்படி

சுமார் 46 லக்ஷம் என்று மதிக்கப் பட்டிருக்கிறது.

(3) சில சமஸ்தானங்கள் தந்தி தபால் விஷயமாக சில சுதந்திரங்கள் அனுபவித்து வருகின்றன.

(a) சமஸ்தானாதிபதிகளின் கடிதப் போக்கு வரத்தும் சமஸ்தானத்தின் உத்தியோகப் பற்றுள்ள (officers) கடிதப் போக்கு வரத்தும் இந்தியா தபால் இலாகாவினால் இலவசமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இது சம்பந்தமாக இந்திய சர்க்கார் இழக்கும் வருமானம் சுமார் ரூ 7 லக்ஷம் என்று மதிக்கப்பட்டிருக்கிறது.

(b) சில சமஸ்தானங்களுக்கு ஓர் குறிப்பிட்ட அளவுக்குத் தபால் தலைகள் இலவசமாகக் கொடுக்கப் படுகின்றன. இதன் மதிப்பு சுமார் 3 லக்ஷம்.

(c) சில சமஸ்தானங்கள் தங்கள் சமஸ்தான எல்லைக்குள் தனித் தபால் இலாகா வைத்திருக்கின்றன. இது மூலம் இந்திய சர்க்கார் அடையும் நஷ்டத்தை சரியாக மதிப்பிடக் கூடியதில்லை என்று டேவிட்சன் கமிட்டியார் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(4) சில சமஸ்தானங்கள் தங்கள் சமஸ்தானங்களில் மட்டும் செலாவணியாகக் கூடிய வெள்ளி பித்தளை முதலிய நாணயங்களும், கரன்ஸி நோட்டுகளும் அச்சிடுகின்றன. இதில் ஹைதராபாத் மட்டும்தான் கரன்ஸி நோட்டுகள் வெளியிடுகிறது. சுமார் 9 கோடி ரூபாய் மதிப்புள்ள நோட்டுகள் மேற்படி சமஸ்தானத்திற்குள் செலாவணியாகிக் கொண்டிருக்கின்றன. இதனால் வருஷம் ஒன்றுக்கு சுமார் 17 லக்ஷம் ரூபாய் லாபம் கிடைக்கிறது என்று மதிக்கப் பட்டிருக்கிறது. ஹைதராபாத்து உள்பட 8 சமஸ்தானங்களில் ரூபாய் நாணயங்கள் அச்சிடப்படுகின்றன.

சமஷ்டி அரசியல் ஏற்பட்டவுடன் நாணயங்கள் கரன்ஸி நோட்டுகள் இவைகளை அச்சிடும் பாத்தியம் சமஷ்டி சர்க்காருக்குத் தனித்து பாத்தியப்பட்டு விடும். சமஸ்தானங்களுக்கு அவ்வித உரிமை கொடுக்கப் படமாட்டாது. தந்தி தபால் இவைகள் சம்பந்தமான உரிமைகளும் சமஷ்டி சர்க்காரைச் சேர்ந்தது. சில சமஸ்தானங்களில் இருக்கும் தனி தபால் இலாகாக்களும் நிறுத்தப்பட வேண்டியிருக்கும்.

மேலே சொல்லப்பட்ட சுதந்திரங்களைத் தவிர காஷ்மீர் சமஸ்தானம் மத்திய ஆசியாவை ஒட்டி இருக்கிறது. மத்திய ஆசியாவிலிருந்து காஷ்மீர் வழியாக பிரிட்டிஷ் இந்தியாவுக்குச் செல்லும் சரக்குகளின் மீது சுங்கவரி விதிக்காமல் விருப்பதற்காக மேற்படி சமஸ்தானத்தில் கடல் மூலமாக இறக்குமதி செய்யப்படும் சரக்குகளுக்கு விதிக்கும் சுங்கவரி வஜா செய்யப்படுகிறது. இந்த சுதந்திரம் வருஷம் ஒன்றுக்கு ரூ 25 லக்ஷம் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

மேலே கண்ட எல்லா விஷயங்களையும் கணக்கெடுத்து சமஸ்தானங்கள் கொண்டாடும் பாத்தியங்களை வரையறை செய்து அவைகளைத் தீர்மானித்து அந்தந்த சமஸ்தானம் சமஷ்டியில் சேருவதாக ஒப்புக் கொண்டு எழுதிக் கொடுக்கும் பிரவேச சாசனத்தில் மேற்படி விஷயங்களைக் குறிப்பிட வேண்டும்.

இந்தப் பூர்வாங்கமான ஏற்பாடுகள் எல்லாம் முடிவடைந்த பின்னரே

இலங்கையில் இந்து மதம்

—"லங்கா புத்திரன்"

இலங்கை புத்த சமயத்துக்குப் பெயர் பெற்ற இடமாயினும் இந்து மதமும் அங்கு பிரதான சமயமாக விளங்குகின்றது. அதன், ஜனத்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பங்கு மக்கள் சைவ சித்தாந்த வழிபாட்டைக் கடைப் பிடித்தொழுகும் இந்துக்களாகும். அவர்கள் அனைவரும் தென்னிந்திய திராவிட பரம்பரையிலுள்ள தமிழ்ச் சாதியாராவர். அவர்களுடைய மூதாதையர்கள் சரித்திரத்துக்கு முற்பட்ட காலத்தில் இத்தீவுக்குக் குடியேறி'' யிருக்கலாம். இந்தியாவின் நிலப் பரப்பின் ஒரு பாகமாக இலங்கை யிருந்த காலத்து அனாதியாக வசித்தவர்கள் இத்தமிழர் என்றுஞ் சிலர் கூறுகின்றனர்.

இந்நாட்டு இந்துக்களாகிய தமிழர் தென்னிந்திய சைவ சமயாசாரியர்களாகிய அப்பர், சுந்தரர், திருஞான சம்பந்தர், மாணிக்க வாசகர் என்பவர்களைப் பின்பற்றுபவர். இந்த நாயன்மார்கள் திருவாய் மலர்ந்தருளிய தேவார, திருவாசகம் போன்ற அருட்பாக்கள் அவர்களுடைய சிறந்த சமய நூல்களாக விளங்குகின்றன. வணக்கத்துக் குரிய டாக்டர் போப் என்னும் பேரறிஞர் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். அந்நூல் கவிநுட்பம், கவித்வம், பக்தி ரசம் என்னும் துறைகளில் இலக்கிய உலகில் தலை சிறந்து விளங்குகின்றது. இந்துக்கள் இலங்கையின் பல பாகங்களிலிருந்த போதிலும், யாழ்ப்பாணம், மட்டக் கழப்பு, திருக்கோணமலை, நீர் கொழும்பு என்னும் பகுதிகளில் ஏராளமாக வசிக்கின்றனர்.

சமஷ்டி அரசியலை அமுலுக்குக் கொண்டு வரமுடியும். ஆனால் சமஷ்டி அரசியல் ஏற்படக் கூடிய காலம் பின்னடைந்து கொண்டு போய்க் கொண்டிருக்கிறது. சமஷ்டிக்கு எதிர்ப்பு அதிகமாகிக் கொண்டு வருகிறது. இந்தியாவை இந்திய இந்தியா என்றும் முஸ்லிம் இந்தியா என்றும் பிளவுபடுத்தவேண்டும் என்று ஜனப் ஜின்னா அவர்களின் முஸ்லீம்லீக் கூறுகிறது.

ஐரோப்பிய யுத்தம் மும்முரமாகிக் கொண்டு வருகிறது. சிறிய நாடுகளை எல்லாம் ஹிட்லர் கபளீகரம் செய்து கொண்டு வருகிறார். நேச தேசத்தார் தங்கள் பூரா பலத்தையும் உபயோகிக்க வேண்டிய காலமும் வந்துவிட்டது. இந்த நிலைமையில் இந்தியாவில் சமஷ்டி அரசியல் எப்பொழுது ஏற்படும் என்று யார்தான் சொல்ல முடியும்?

ருஉ

விக்கிரமன்

இந்துக்கள், இந்தியத் தமிழர் இலங்கைத் தமிழர் என இரு வகுப்பினைச் சேர்ந்தவர். இலங்கைத் தமிழர் நன்கு கல்வி பயின்று சமூக வாழ்வில் உயர்ந்த அந்தஸ்தை வகிப்பவர். இந்தியத் தமிழர் பெரும் பான்மையும் கூலியாளர் வகுப்பைச் சேர்ந்தவர். காலத்துக்குக் காலம் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குக் குடியேறுபவர், தேயிலைத் தோட்டங்களில் சில காலம் வேலை செய்து விட்டுப் பின் தாய் நாடு செல்பவர். தமிழர், இஸ்லாமியர் என்னும் இரு வகுப்பினருக்கும் தாய்ப் பாஷை தமிழேயாம்.

தமிழ் இலங்கை வாசிகள் பெரும்பாலும் சைவ சமயிகளாயினும் அவர்கள் சிவ பெருமானின் புத்திரர்களாகிய கணேசரையும் (பிள்ளையார், கணபதி, ஆனைமுகன்) சுப்பிரமணியரையுமே (கந்தசாமி, வேல் முருகன், ஆறுமுக வடிவேல், கார்த்திகேயர்) வழிபடுகின்றனர். சுமார் 2157 இந்து தேவாலயங்கள் இலங்கையில் உண்டு. அவையனைத்தும் கணேசர் அல்லது சுப்பிரமணியர் ஆலயங்களாகும். அவற்றுள் கதிர்காமம், தொந்தரை, சிலாபம், திருக் கோணமலை என்னுமிடங்களிலுள்ள கோயில்கள் புத்தருடைய காலத்துக்கு முந்தியவை.

இலங்கையில் கங்கை போன்று விளங்கும் மாணிக்க கங்கைக் கரையில் கதிர்காம க்ஷேத்திரம் அமையப் பெற்றிருக்கின்றது. அது மிகப் பரிசுத்தம் பொருந்திய சுப்பிரமணிய ஸ்தலம். அதைச் சுற்றி யிருப்பது மனித சஞ்சார மில்லாத ஆரண்யமாகும். அப்படி யிருந்தும் திருவிழாக் காலமாகிய ஆடி, ஆவணி மாதங்களில் ஜனத்திரள் நிறைந்த பட்டணம் போன்று காட்சி யளிக்கின்றது. தென்னிந்தியாவிலிருந்தும், இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் லக்ஷக் கணக்கான இந்துக்கள், பௌத்தர், முகம்மதியர் முதலியோர் ஒருங்கு சேருகின்றனர். பௌத்த சமயிகளாகிய சிங்களவர் கந்தசாமியை (சுப்பிரமணியரை) ஒரு தெய்வமாகவும், தேசிய வீரனாகவும் கருதுகின்றனர். பௌத்த சமயத்தை சேரு முன்னர் சிங்களவர் கந்தசாமியையே வழிபட்டவர்கள் என்று கூறுவாருமுளர். இந்தியாவிலுள்ள புத்த கயா என்னும் பௌத்த ஆலயம் எங்ஙனம் இந்துக்கள் பாதுகாப்பில் இருக்கின்றதோ அதே போன்று இந்த இந்து தேவாலயமும் பௌத்த சமயத்தவர்களின் ஆதிக்கத்துக்குள்ளிருக்கின்றது.

பௌத்தருடைய ஆலயங்களிலும் கந்தசுவாமிக்குத் தலையாய இடங் கொடுக்கப் பட்டிருக்கின்றது. மலைத் தேச நகரங்களாகிய வதுளை, கண்டி என்னுமிரு இடங்களிலும் இரு கந்தசுவாமி கோயில்கள் பௌத்த சமயிகளின் பராமரிப்புக்குள்ளிருக்கின்றன. அசோக வம்சத்து வழித் தோன்றலும், புத்தமத போதகருமாகிய மகேந்திரரால் இலங்கையின் புராதன இராஜதானியாகிய அநுராதபுரத்தில் நாட்டப்பட்ட திவ்விய ஆலவிருக்ஷத்தின் கீழும் கந்தசுவாமியின் விக்கிரகம் நிறுவப் பட்டிருக்கிறது. சுமார் 6200 புத்த ஆலயங்கள் இலங்கையில் உண்டு. அவையனைத்திலும் கந்தசுவாமி இடம் பெற்றிருக்கிறார். புத்த பகவான் ஆகாய மார்க்கமாக இலங்கையை மூன்று முறை தரிசித்ததாகவும், அதை நீங்கிப் போகும்

போது விஷ்ணுபகவானை அத்தீவின் பாதுகாவலனாக நியமித்தனர் என்று பழைய வரலாறுகள் கூறுகின்றன. ஆகையால் "இந்துக்களின் தெய்வமாகிய விஷ்ணுவையும் பௌத்த சமயிகள் வணங்குகின்றனர். கொழும்பு மாநகரில் பௌத்தர்கள் நிறுவிய விஷ்ணு ஆலயம் ஒன்றுண்டு. டீயத்தளாவா என்னும் மலை நகரத்திலுள்ள ஒரு புத்த ஆலயத்தின் இரு பக்கங்களிலும் கந்த சுவாமிக்கும், விஷ்ணுவுக்கும் தனித் தனி ஆலயம் நிறுவப்பட்டிருக்கின்றது." டம்புலா என்னுமிடத்து மலையைக் குடைந்து கட்டப் பெற்ற ஆலயங்கள் சிறந்த சிற்ப சித்திரங்களாக விளங்குகின்றன. இராமர், லெக்ஷ்மணர், வி'ஷணர், சுப்பிரமணியர், கணேசர், விஷ்ணு போன்ற இந்து தேவதைகளின் சிலைகள் கல்லில் பொறிக்கப் பட்டிருக்கின்றன. மலைத் தேசத் தலை நகரமாகிய கண்டியிலும் புத்த ஆலயங்களுக் கருகாமையில் விஷ்ணு முதலிய இந்து தெய்வங்களுக்கு ஆலயங்கள் உண்டு. புத்த ஆலயங்களின் கிரியைகள் இந்து ஆலயங்களில் செய்யப்படுவன போன்றவை. இலங்கையை அரசு புரிந்த கடைசி ஐந்து அரசர்களும் தமிழர் அல்லது இந்துக்கள் ஆவர். அவர்கள் மதுரை தஞ்சாவூர் என்னும் ஊர்களிலிருந்து இராஜ வம்சத்தில் பெண் எடுத்தனர்.

இலங்கையில் சிவனொளி பாதமலை என்னும் மலைச் சிகரம் ஒன்றுண்டு. அது தரைமட்டத்திலிருந்து 7500 அடி உயரத்திலுள்ள ஒரு விசேஷயாத்திரை ஸ்தலம். புத்த பகவான் ஆகாய மார்க்கமாக வந்து அவரது பாதமுத்திரையை யிட்டுச் சென்றதாக பௌத்த சமயிகள் நம்புகின்றனர். இந்துக்களோ அது சிவபெருமானுடைய திருவடி முத்திரை யென்று நம்பி காலந் தோறுந் தரிசனஞ் செய்து வழிபடுகின்றனர். இம் மலைச் சிகரத்திலிருந்து இலங்கையின் மகோன்னத இயற்கைக் காட்சியைக் காணலாம். இயற்கை வனப்பு வாய்ந்த மலைச் சிகரங்களில் கடவுள் வழிபாட்டிற்குரிய ஆலயங்களை அமைப்பது இந்துக்களின் வழக்கமாகும். திருச்சிறுப்பள்ளி, பட்சி தீர்த்தம், அமர்நாத், கேதார்நாத், பத்ரிநாத் என்னும் புண்ணிய க்ஷேத்திரங்கள் இதற்குச் சான்றாகும்.

திருக்கோணமலை கீழ்த் தேசத்தில் ஒரு சிறந்த கடல் படைத்தளம். அங்கு சுவாமிமலை யென்னும் ஒரு திவ்யஸ்தலம் உண்டு. அதற்குக் கோணேசர் மலையென்பது மற்றொரு பெயர். அங்கு வழிபடும் மூர்த்தியின் பெயர் கோணேஸ்வரன், அல்லது சிவபெருமான். அந்த விக்கிரகத்தை ஆயிரங்கால் மண்டபத்தில் வைத்திருந்ததாகவும், போர்த்துக்கீசர் அதை உடைத்துத் தரை மட்டமாக்கினரென்றும் சரித்திரம் கூறுகின்றது. ராவணன் மிகுந்த சிவபக்தனென்றும், அவன் அங்கு தினமும் வழிபாடு செய்ததாகவும், அப்படி வருவதற்குச் சிரமமாயிருந்தபடியால் அக்கோயிலை அவ்விடத்திலிருந்து தூக்கி தனக்கு வசதியான ஒரு இடத்துக்குக் கொண்டு போக முயன்றதாகவும், அம்முயற்சி தெய்வாதீனமாகத் தடைப் பட்டதென்றும் புராணம் கூறுகின்றது.

சரித்திர காலத்துக்கு முற்பட்ட முனீஸ்வரம் என்னும் திவ்விய சிவ ஸ்தலம். சிலாபம் என்னும் நகரத்தில் உள்ளது. அது இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் பொதுவான யாத்திரை ஸ்தலம். இராவண சங்காரத்தின் பின் ஸ்ரீ ராமச் சந்திரனே அத்தேவாலயத்தை அமைத்தாரென்றும், அதில் அவரே முதன் முதல் வழிபட்டாரென்றும் புராணங் கூறுகின்றது. ஆனால் சரித்திர ஆராய்ச்சியாளர் அதைப் பற்றி ஒன்றுங் கூற முடியவில்லை. செயின்ட் நிஹல்சிங் என்பவர், உலகத்துக்குள்ளே மிகவும் புராதன வழி பாட்டு ஸ்தலங்களில் இதுவும் ஒன்று எனக் கூறியுள்ளார். சிவபெருமானே முழு முதற் கடவுளெனக் கருதி அவருக்குத் தலையாய இடங் கொடுத்த போதிலும் அவருடைய பாரியாகிய பார்வதி தேவிக்கு அது உகந்த இடமாகக் கருதப்படுகின்றது. ஆதலால் அதைப் பத்திர காளி பீட ஸ்தானம் என்று கூறுவாருமுளர். இந்து மதத்தில் கூறப்பட்டுள்ள தேவதைகளின் விக்கிரகங்கள் பல அவ்வாலயத்தில் காணலாம். அவற்றுள் ஆறு தலையும், பன்னிருகையும் உடைய கந்தவேளின் திருவுருவம் மிகவுஞ் சிறந்தது. அவ்விக்கிரகம் மலையாள தேசத்து அரசனொருவனால் உதவப்பட்டது. அகஸ்திய முனிவர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்ததாகவும், பார்வதி தேவி அவருக்குத் தரிசன மளித்ததாகவும் புராணம் கூறுகின்றது.

இலங்கையில் பிரசித்த பெற்ற ஸ்தலங்களில் தொந்தரை என்னுமிடத்திலுள்ள விஷ்ணு கோயிலும் ஒன்றாகும். பழைய காலந் தொடங்கி இவ்விடத்தில் துறவிகள் பக்தர்கள் கூடுவது வழக்கம். அங்கு அநேக புத்த ஆலயங்களிருந்தாலும் விஷ்ணு கோயிலுக்கு நிகரானவையல்ல. கோயில் கட்டப்பட்டு 1500 வருடமாகின்றது. இந்து ஆயினுஞ் சரி பௌத்தராயினுஞ்சரி இலங்கை அரசர்களெல்லாரும் அந்த ஆலயத்தில் வழிபட்டு வந்தனர்.

மன்னார் என்னுமிடத்திலுள்ள கேதாரேஸ்வர சிவாலயமும் வெகு புராதனமானது. தொந்தரை, மன்னார் என்னுமிரண்டு ஆலங்களையும் போர்த்துக்கீசர் உடைத்து அவற்றின் நிதிகளைக் கொள்ளையடித்தனர். மன்னாரிலுள்ள சிவாலயத்தை தேவ தச்சனாகிய விஸ்வகர்மாவே கட்டினானென்றும், அது அழிவுற்ற பின்னர் அகஸ்திய முனிவர் தாம் இலங்கைக்கு வந்த போது அதை மீட்டுங் கட்டினாரென்றும் சில வரலாறுகள் கூறுகின்றன. பௌத்தர்களும் இந்துக்களும் இவ்விடத்திலும் ஒருமித்து வழிபடுகின்றனர்.

சென்ற 17ம் 18ம் நூற்றாண்டுகளில் கண்டியரசர்களுக்குத் தென்னிந்தியா அறிவிற் சிறந்த அமைச்சரை உதவியது. அவ்வரசனின் மாளிகைகள் தஞ்சாவூரிலுள்ள மாளிகைகள் போன்றவை. இலங்கைத் தமிழ் அரசர்கள் இந்து அபிமானிகளாயினும், தமது பிரஜைகளாகிய பௌத்தருடைய கருத்துக்களையும், கொள்கைகளையும் பாதிக்காத வண்ணம், புத்திசாலித்தனமாக ஆண்டு வந்தனர். பிற்காலத்துக் கண்டியரசர்களின் கொலுமண்டபமும் தஞ்சாவூரிலுள்ள அரண்மனை மண்டபத்தைப் போன்றது. கண்டி தேசத்து நடிகர்களின்

நாட்டியம் தஞ்சாவூர் மாளிகை நடிகரின் நடனத்தைப் பின் பற்றியிருக்கின்றது.

17ம் 18ம் நூற்றாண்டுகளில் இவ்விரு தேசத்துக்கும் நெருங்கிய தொடர்பிருந்த தென்பதைக் குறிக்கும் கல்வெட்டுகள் இப்பொழுதுமிருக்கின்றன. இலங்கையின் இரண்டாம் இராஜதானியாயிருந்த பொலநறுவா என்னுமிடத்தில் பல சிவாலயங்கள் இன்றுங் காணலாம். சிங்கள மன்னர் தங்கள் இந்து மனைவிமாருக்கு இவ்வாலயங்களை நிறுவினர். இந்துக்களின் திருவிழாக்களில் பௌத்தர்களும் கலந்து கொள்வது வழக்கம். அவர்களுடைய வழிபாடும் இந்துக்களுடையதைப் போலவே. தேங்காய் உடைப்பது, பலகாரம் சிற்றுண்டி படைத்தல், வில்வம், புஷ்பம், பத்திரம் அளித்தல், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப் பல்லாண்டு, திருப்புகழ் போன்ற திருவருட்பாக்கள் பாடுவது, திரு நீறு, சந்தனம், மஞ்சள் அணிதல் என்பன வழிபாட்டின் முக்கிய அம்சங்களாகும்.

புத்த சமயத்தில் நாகர் என்று கூறப்படும் தேவதைகள் இந்து சமயத்திலிருந்தே வந்திருக்க வேண்டும். அவர்கள் புத்த ஆலயங்களின் பாது காவலர்களாகக் கருதப்படுகிறார்கள். ஸ்தூபிகளிலும் கல்லில் பொறிக்கப்பட்ட பல நாகர் உருவங்களைக் காணலாம். ஒவ்வொரு புத்த பகவானின் சிலையிலும் ஒரு படமெடுத்த நாகத்தைக் காணலாம். நாகரின் படங்கள் வரையப் பெற்ற மட்பாத்திரங்கள் இலங்கை நூதன சாலையில் உண்டு. மழை காலங்களில் சர்ப்பத்தினால் தொந்திரவு ஏற்பட்டால் இந்துக்கள் நாக தேவதை அல்லது மானசா தேவியை வழிபட்டு அவ்விடையூறுகளின்றும் நீங்குவர். நாகவழிபாடு இந்துக்களின் யோகசாதனையில் கூறிய குண்டலினி சக்தியையே குறிக்கின்றது.

புத்தருடைய காலத்துக்கு முன் இலங்கையில் இந்து மதம் பிரசித்தி பெற்றிருந்த தென்றும், புத்த சமயம் பரவத் தொடங்கியபின் அது ஈனதசையை அடைந்த தென்றுஞ் சரித்திரங் கூறுகின்றது. இந்தியாவில் புத்தருடைய கொள்கைகள் பரவிய போதும் இந்து மதம் தன்னுடைய அந்தஸ்தை இழக்கவில்லை. ஏனெனில் அதற்குப் புத்தசமயக் கொள்கைகளை தன் அங்கத்தின் ஒரு பாகமாகச் சேர்த்து அதைத் தனியிடம் பெறாத வண்ணம் ஒன்று படுத்துஞ் சக்தி அதனிடத்திருந்தது. இலங்கையிலுள்ள இந்து மதமோ இந்த ஆற்றலை இழந்தமையினாலே புத்தமதம் தலையெடுத்து அதன் ஒளியை மங்கச் செய்தது. இன்னுமொரு புதிய ஆத்ம ஞான அலையானது இந்தியாவிலிருந்து இலங்கை செல்லுமாயின் இந்து மதம் புது சக்தி பெற்று புத்த மதத்தைத் தன்வயத்தில் ஒருங்கு சேர்த்துக் கொள்ளுமென்பதற்குச் சந்தேகமில்லை.



1940

ஏப்ரல்

30 ருஷ்யாவின் எல்லையையும் பின்லாந்தின் எல்லையையும் நிர்ணயிக்கிற ஒப்பந்தம் இன்று மாஸ்கோவில் இரு நாட்டுப் பிரதிநிதிகளாலும் கையெழுத்திடப் பெற்றது.

ஹாலந்து, தற்போதைய யுத்தத்தில் கலந்து கொள்ளாதென்றும் அது நடுநிலைமையையே வகிக்குமென்றும் ஹாலந்தின் பிரதம மந்திரி இன்று கூறினார்.

மே

1 நார்வேயில்வெற்றியடைந்ததற்காக ஹிட்லர், ஜெர்மானியத் துருப்புகளைப் பாராட்டி ஒரு செய்தி விடுத்திருக்கிறார்.

பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல்கள் இனி மத்திய தரைக் கடல் வழியாகச் செல்ல வேண்டாமென்றும், தென்னாப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு தான் செல்ல வேண்டுமென்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இன்று உத்திர விட்டிருக்கின்றனர்.

ஹிட்லரை உயிரோடு பிடித்துக் கொடுப்பவர்களுக்கு இரண்டரை லட்சம் டாலர் இனாம் கொடுப்பதாக ஓர் அமெரிக்கர் அறிவித்திருக்கிறார்.

நார்வேயில், நேசக் கட்சிப் படைகள் வெற்றிகரமாக நடந்து கொள்ளவில்லையென்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூக்குரலிட ஆரம்பித்திருக்கின்றன.

2 தற்போதைய ஐரோப்பிய யுத்தத்தில் ஜப்பான் தலையிட்டுக் கொள்ளவில்லையென்று மேற்படி நாட்டின் பிரதம மந்திரி இன்று கூறினார்.

நார்வே நாட்டுப் போராட்ட விஷயத்தில் நேசக் கட்சிப்படைகள் எவ்வாறு நடந்து கொண்டன வென்பதைப்பற்றி காமன்ஸ் சபையில் சேம்பர்லேன் நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

நார்வே போராட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற பிரிட்டிஷ் படைகள் இன்று பின்வாங்கி இங்கிலாந்துக்குக் கப்பலேறி விட்டன.

3 நேச தேசப்படைகள், நார்வேயிலுள்ள ட்ரோண்ட்ஜெம்மை விட்டு ஒழுங்காகப் பின் வாங்கின

ஸ்வீடனுக்கும் ருஷ்யாவுக்கும் வியாபார சம்பந்தமான ஒப்பந்தப் பேச்சுகள் நடைபெற்றன.

1914ம் வருஷத்தில் பெல்ஜியத்திற்கு நேர்ந்த கதி, இந்த 1940ம் வருஷத்தில் நேராதென்று தாம் நம்புவதாக பெல்ஜியத்தின் பிரதம மந்திரி இன்று கூறினார்.

ராஜ கோட்டை திவானாக, தர்பார் வீர வல்லாவுக்குப் பதிலாக என். என். ஆங்கிலேசேரியா என்ற ஒரு பாரிஸ்டர் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

4 தற்போதைய யுத்தம் பலாத்காரத்தின் பயனற்ற தன்மையை விளக்குகின்றதென்றும், தற்போதைய நெருக்கடியான நிலைமையில் பிரிட்டனை ஒரு அசந்தர்ப்பமான நிலைமையில் கொண்டு வைக்கத் தாம் இஷ்டப்படவில்லையென்றும் மகாத்மா

காந்தி இன்று 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதி யிருக்கிறார்.

மத்திய தரைக் கடலிலுள்ள டொடேகானீஸ் தீவில், இத்தலி பலமான பந்தோபஸ்து செய்து வருகிறது. இதே மாதிரி ரோட்ஸ் தீவிலும் பலத்த பந்தோபஸ்து செய்து வருகிறது.

யூகோஸ்லேவிய அரசாங்கம், தனது எல்லைப் புறத்தை பந்தோபஸ்து செய்து வருவதைப் பற்றிக் கண்டித்து இத்தலி ஒரு கண்டன அறிக்கை அனுப்பி யிருக்கிறது.

5 'சண்டே பிக்டோரியல்' என்னும் பத்திரிகையில் மாஜி பிரதம மந்திரியான ஸ்ரீ லாயிட் ஜார்ஜ் எழுதியுள்ள ஒரு கட்டுரையில், நேசக் கட்சியினர் நார்வே போராட்டத்தில் ஒழுங்காக நடந்து கொள்ளவில்லை யென்று குறிப்பிட்டிருக்கிறார்.

நார்வே நாட்டுப் பிரதம மந்திரியும் அந்நிய மந்திரியும் உள் நாட்டு மந்திரியும் இன்று இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்திருக்கின்றனர்.

6 நார்வேயில் ஜெர்மன் படையெடுப்பினால் பெரிய நஷ்டம் ஏற்பட்டு விட்டதென்று இங்கிலாந்துக்கு வந்திருக்கும் நார்வேயின் அந்நிய நாட்டு மந்திரி கூறுகிறார்.

இங்கிலாந்திலுள்ள ஜனங்கள், ஓரளவுக் குட்பட்டே வெண்ணெயையும் சர்க்கரையையும் உபயோகிக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் உணவுப் பொருள் மந்திரி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்,

பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவரான ஜார்ஜ் லான்ஸ்பரி இறந்து போனார்.

7 ராம்கார் காங்கிரஸுக்கு பர்மாவிலிருந்து சென்ற பர்மிய தூது கோஷ்டியினர் இந்தியாவின் பலபாகங்களிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்து விட்டு இன்று இரங்கூன் வந்து சேர்ந்தனர்.

துருக்கியில், அவசிய மிருந்தால் அரசாங்கத்தார் எல்லாச் சொத்துக்களையும் ஸ்வீகரித்துக் கொண்டு உபயோகித்துக் கொள்ளலாம் என்று ஒரு புதிய உத்திரவு பிறந்திருக்கிறது.

நார்வேயில் பிரிட்டிஷ் படை ஏன் தோல்வியுற்றதென்பதை விளக்கி, காமன்ஸ் சபையில் நெவில்லி சேம்பர்லேன் ஒரு சொற் பொழிவு நிகழ்த்தினார்.

8 பிரிட்டிஷ் மந்திரிச் சபை, காமன்ஸ் சபையினருடைய பெரும்பான்மையோருடைய அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறதா இல்லையா வென்பதைப் பற்றி நிர்ணயிக்க, இன்று ஓட் எடுக்கப் பட்டது. அரசாங்கத்திற்குச் சாதகமாக 200 ஓட்டுகள் கிடைத்தன.

ஹாலந்து அரசாங்கம், தன்னைப் பாதுகாத்துக் கொள்ள பலத்த முஸ்தீப்புகள் செய்து கொண்டிருக்கிறது.

ஸ்வீடனைச் சுற்றி கடல் சுரங்கங்கள் போட்டிருப்பதாக ஓர் அறிக்கை கூறுகிறது.

9 சென்னை கவர்னர் பதவியினின்று விலகிப் போன லார்ட் எர்ஸ்கைன், மீண்டும் பார்லிமெண்ட் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

சத்துருவுக்கு உளவு சொல்கிறவர்கள், மரண தண்டனைக்குட் படுத்தப்படுவார்கள் என்னும் விஷயமடங்கிய ஒரு மசோதா இன்று பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டது.

லாட்வியா, எஸ்டோனியா, லிதுனியா ஆகிய மூன்று நாடுகளுடன் எப்படி ஒப்பந்தம் செய்து கொண்டதோ அப்படியே பின்லாந்துடனும், ஸ்வீடனுடனும் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டுமென்று ருஷ்யா கோருவதாக ஒரு செய்தி கூறுகிறது.

காந்தி-லின் லித்கோ சம்பாஷணைக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா வென்று பார்லிமெண்டில் ஹார்வி என்பார் கேட்க அதற்கு இந்தியா மந்திரியின் சார்பில் பதிலளிக்கப் படுகையில் இது சம்பந்தமாக ராஜப் பிரதிநிதி தக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதாக கூறப்பட்டது.

ஸ்காத்லாந்து துறைமுகத்தை யொட்டி ஜெர்மானிய ஆகாய விமானங்கள் குண்டுகளை வீசியெறிந்தன.

ஸ்வீடனுடைய நடு நிலைமையைப் பாது காப்பதற்காக ஸ்வீடனைச் சுற்றி யுள்ள கடற் பிரதேசங்களில் கடற் சுரங்கங்கள் போடப் பட்டிருக்கின்றன.

10 இன்று பிரிட்டிஷ் பிரதம மந்திரியான ஸ்ரீ சேம்பர்லேன், தமது பதவியினின்று ராஜிநாமா செய்து விட்டார்.

இன்று ஹாலந்து, பெல்ஜியம், லக்ஸம்பர்க் ஆகிய மூன்று நாடுகளின் மீதும் ஜெர்மனி படை யெடுத்தது.

ஐஸ்லாந்தில் பிரிட்டிஷ் துருப்புகள் வந்திறங்கின.

ஸ்விட்ஜர்லாந்து அரசாங்கம், இன்று படை திரட்டும் உத்திரவு கொடுத்தது.

ஹாலந்து ராணி, தனது நாட்டின் சுதந்திரம் கடைசிவரை காப்பாற்றப் படும் என்று ஜனங்களுக்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

ஹாலந்தின் மீது, ஜெர்மன் ஆகாய விமானங்கள் குண்டுகள் போட்டன.

இந்தியாவின் தன் மதிப்பு குன்றாமல், சமரஸம் ஏற்படுமானால் அதற்குத் தாம் எப்பொழுதும் தயார் என்று மகாத்மாகாந்தி 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

11 பிரிட்டிஷ் படைகளும் பிரெஞ்சுப் படைகளும், டச்சுப் படைகளுடனும் பெல்ஜியப் படைகளுடனும் சேர்ந்து சண்டை யிடுகின்றன.

பெல்ஜியத்தின் தலை நகரான ப்ரஸ்ஸல்ஸ், ஜெர்மன் ஆகாய விமானங்களால் பலமாகத் தாக்கப்பட்டன.

இங்கிலாந்தில் புதிய மந்திரிச் சபை அமைந்து விட்டது. அது வருமாறு.—

"வின்ஸ்டன் சர்ச்சில்—பிரதம மந்திரியும் பாதுகாப்பு மந்திரியும்.

நெவில்லி சேம்பர்லேன்-லார்ட் பிரஸிடெண்ட் ஆப் தி கவுன்ஸில்.

ஸி. ஆர். அட்லி-லார்ட் பிரிவி ஸீல்.

லார்ட் ஹாலிபாக்ஸ்-அந்நிய நாட்டு மந்திரி

ஏ. வி. அலெக்ஸாண்டர்-கடற் படை மந்திரி,

அந்தோனி ஈடன்-யுத்த மந்திரி.

ஸர் ஆர்ச்சி பால்ட்ஸிங்க்ளேர்-ஆகாய மந்திரி.

எல். எஸ். அமெரி-இந்தியா மந்திரி ஸர் ஜான் ஸைமன்-லார்ட் சான்ஸலர்

லார்ட் லாயிட்—குடியேற்ற நாட்டு மந்திரி.

ஸர் ஜான் ஆண்டர்ஸன்-உள் நாட்டு மந்திரி.

ஹெர்பர்ட் மாரிஸன்—விநியோக இலாகா மந்திரி.

டப் கூப்பர்—செய்தி இலாகா மந்திரி."

சீன-ஜப்பானிய யுத்தத்தில் ஒன்றரை லட்சம் ஜப்பானியப் படையொன்றை சீனப் படைகள் முறியடித்து விட்டன வென்று ஒரு செய்தி கூறுகிறது.

12 ஜெர்மானியருடைய பெல்ஜியப் படையெடுப்பில் பெல்ஜியத் துருப்புகள் ஒழுங்காகப் பின்வாங்கிக் கொண்டிருக்கின்றன.

ஹாலந்தின் தலைநகரமான ஆம்ஸ்டர்டாம், ஜெர்மன் ஆகாய விமானங்களால் பலமாகத் தாக்கப்பட்டது.

கிழக்கிந்தியத் தீவுகளாகிய ஜாவா, சுமாத்ரா, போர்னியோ முதலிய தீவுகளில் வசிக்கும் ஜெர்மானியர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டார்கள். மேற்படி பிரதேசத்தில் ராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது.

13 ஜெர்மானியப் படைகள், ஹாலந்து, பெல்ஜியம் படை யெடுப்பில்' இன்று

மியூஸ் நதியையும் எஸ்ஸெல் நதியையும் கடந்து விட்டன.

ஹாலந்து நாட்டு அரச குடும்பத்தினர் இன்று லண்டன் வந்து சேர்ந்து விட்டனர்.

பாரிஸ் நகரத்தில் இன்று ஜெர்மன் ஆகாய விமானங்களின் இரைச்சல் கேட்டதாகச் சொல்லப்பட்டது.

ரோமா புரியில் பிரிட்டிஷாருக்கு விரோதமான சில சம்பவங்கள் நடைபெற்றன.

14 இன்று பெல்ஜியத்தில் நடை பெறும் போராட்டத்தில், ஜெர்மானியப் படைகள் நாமூர், செடான் கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டதோடு கூட ரைன் நதிக் கரையையும் கடந்து விட்டது.

இத்தலியிலுள்ள அமெரிக்கர்கள், அந்த நாட்டை விட்டு வெளியேறும்படி இத்தாலிய அரசாங்கத்தாரால் உத்திர விடப்பட்டிருக்கின்றனர்.

எகிப்தின் மேற்கு எல்லையிலுள்ள ஜனங்கள், அரசாங்கத்தின் உத்திரவு பேரில் தங்கள் தங்கள் ஊர்களை விட்டுக் காலி செய்து கொண்டு வருகிறார்கள்.

பெல்ஜியம், ஹாலந்து பிரதேசங்களில் யுத்தத்தினால் துன்ப முற்றவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு தென்னாப்பிரிக்கா யூனியன் அரசாங்கத்தார் ஒரு லட்சம் பவுன் நன்கொடை யளித்திருக்கின்றனர்.

ஹாலந்திலுள்ள ராட்டர்டாம் நகரம் இன்று ஜெர்மானியப் படைகளுக்குப் பணிந்து விட்டது.

15 ஜெர்மானியர், இன்று மேற்குப் போர் முனையில் முன்னேறி பிரெஞ்சு எல்லைக்குள் புகுந்து விட்டனர்.

ஹாலந்து, இன்று ஜெர்மனிக்கு சரணாகதி யடைந்து விட்டது.

இந்தியா குடியேற்ற நாட்டந்தஸ்தைப் பெற உரிமை யுண்டென்று புதிய இந்தியா மந்திரியான எல். எஸ். அமெரி ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தில் ஸ்திரீகளின் இலாகா ஸ்ரீமதி சுசீதா கிருபாளினி தலைமையில் வேலை செய்யத் தொடங்கிற்று.

16 அமெரிக்காவின் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட், யுத்தத்தை நிறுத்துவித்து ஒரு வித சமாதானம் ஏற்பாடு செய்யும்படி முஸோலினிக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஸ்விட்ஜர்லாந்தின் மீது ஜெர்மனி படையெடுக்கக் கூடு மென்று கருதி, ஸ்விட்ஜர்லாந்து அரசாங்கத்தார், படைகளைத் திரட்ட உத்திரவு கொடுத்திருக்கின்றனர்.

வருஷத்தில் 15000 ஆகாயவிமானங்கள் உற்பத்தி செய்யக் கூடிய ஏற்பாட்டை அமெரிக்கா அரசாங்கம் செய்திருப்பதாக பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் இன்று ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

17 பிரிட்டனிலுள்ள அமெரிக்கர்கள் இன்று பிரிட்டனை விட்டு அமெரிக்காவுக்குச் செல்கிறார்கள்.

ஹாலந்தில் ராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

தென்னாப்பிரிக்காவைச்சுற்றி யுள்ள கடற் பிரதேசங்களில் கடல் சுரங்கங்கள் போடப் பட்டிருக்கின்றன.

பெல்ஜிய அரசாங்கத்தின் தலை நகரம் இன்று ஆஸ்டெண்ட் என்ற ஊருக்கு மாற்றப் பட்டிருக்கிறது.

லண்டனின் கிழக்குப் பகுதியிலிருந்து சுமார் பதினாயிரம் குழந்தைகள் இன்று வேல்ஸ் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்றன.

டச்சு கிழக்கிந்திய தீவுப் பிரதேசங்களின் மீது மற்ற வல்லரசுகள் படைகளனுப்பாவிட்டால் தானும் அனுப்பப் போவதில்லை யென்று ஜபபானிய அரசாங்கம் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

பெல்ஜியத்திலுள்ள ப்ரஸ் ஸெல்ஸ் நகரமும் லூவெயின் நகரமும் இன்று ஜெர்மனிக்குப் பணிந்து விட்டன.

18 ஆகஸ்ட் மாதம் 15ந் தேதிக்குள் சமாதானத்தைக் கொண்டு வந்து விடுவதாக ஹிட்லர் ஜெர்மானியர்களுக்கு உறுதி மொழி கொடுத்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

பிரஞ்சு மந்திரிச் சபை மீண்டும் திருத்தியமைக்கப் பட்டிருக்கிறது. ரேனாட் பிரதம மந்திரியாகவும், மார்ஷல் பெடெயின் டலாடீயர் முதலியோர் மற்ற மந்திரிகளாகவும் நியமனம் பெற்றிருக்கின்றனர். ஹாலந்து முதலிய பிரதேசங்களின் மீது படை யெடுத்திருப்பதைக் கண்டித்து அமெரிக்காவிலுள்ள இருபத்தோரு நாடுகள் ஒரு கண்டன அறிக்கையை ஜெர்மனிக்கு அனுப்பி யிருக்கின்றன.

19 பெல்ஜியத்தின் வடபாகத்திலிருந்து சண்டை போட்டுக் கொண்டிருந்த பிரிட்டிஷ் துருப்புகள் இன்று பின்னடைந்து விட்டன.

ஹாலந்து முதலிய பிரதேசங்களில் ஜெர்மனி படை யெடுத்து வெற்றி பெறுவதைக் கண்டு ருஷ்யா அதிக கலக்கங் கொண்டிருப்பதாக ஒரு செய்தி பரப்பப் பட்டிருக்கிறது.

ஜெர்மானிய ஆதிக்கத்துக்குட் பட்ட ஹாலந்துக்கு டாக்டர் செயிஸ் இன்குவார்ட் பிரதம அதிகாரியாக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

20 பிரான்சில் போர் புரியும் நேசக் கட்சிப் படைகளுக்கு தளபதி வெய்காண்ட் என்பவர் பிரதம சேனாதிபதியாக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

ஹாலந்தின் முக்கிய நகரமாகிய ராட்டர்டாமை ஜெர்மானியர்கள் ஆகாய விமானக் குண்டுகளால் தாக்கிய பொழுது ஒரு லட்சம் பேர் இறந்து போனதாக ஒரு செய்தி கூறுகிறது.

21 பிரான்சிலுள்ள அர்ராஸ் என்ற இடமும் அமீன்ஸ் என்ற இடமும் இன்று ஜெர்மானியர் வசம் அகப்பட்டுக் கொண்டன.

பிரெஞ்சு பார்லிமெண்டில் பிரதம மந்திரியான ரெயினாட் பேசுகையில் பிரான்சின் திறமையான துருப்புகள் பெல்ஜியத்திற்கு அனுப்பப் பட்டுவிட்டன வென்றும், இன்னும் ராணுவத் தலைவர்கள் தவறானபோர் முறைகளைக் கையாண்டார்க ளென்றும் இதனாலேயே பிரெஞ்சுப் படைகள் பின் வாங்க நேரிட்ட தென்றும் கூறினார்.

பிரிட்டனுக்கு எல்லா வித உதவிகளையும் கானடா செய்யு மென்று கானடாவின் பிரதம மந்திரியான மெக்கன்ஸி கூறியிருக்கிறார்.

சீன-ஜப்பானிய யுத்தத்தில் ஹூபே ஹோனான் மாகாணத்தில் சீனர்கள் பெருந் தோல்வி யடைந்தார்க ளென்று ஒரு செய்தி கூறுகிறது.

ஜிப்ரால்டர் தீவிலுள்ள ஸ்திரீகளும் குழந்தைகளும் காலி செய்யப்பட்டு வருகிறார்கள்.

22 ஜெர்மன் எல்லைப் புறத்திலும் ஹங்கேரியின் எல்லைப்புறத்திலும் ருஷ்யத் துருப்புகள் அணிவகுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன வென்று ஓர் செய்தி கூறுகிறது.

பிரிட்டனின் விசேஷப் பாதுகாப்பு அவசரச் சட்டம் இன்று பார்லிமெண்டில் இரண்டரை மணி நேரத்திற்குள் சட்டமாக்கப் பட்டது.

23 விசேஷ அவசரச் சட்டத்தின் கீழ் பார்லிமெண்ட் அங்கத்தினர் சிலர் கைது செய்யப் பட்டிருக்கின்றனர்.

காமன்ஸ் சபையில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு இந்தியா மந்திரியான எல். எஸ். அமெரி பதிலளிக்கையில், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளுடன் இந்தியாவும் சம அந்தஸ்து பெற வேண்டு மென்பதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின நோக்க மென்று குறிப்பிட்டார்.

யுத்த நிலைமை முன்னிட்டு ஏடனிலும் பிரிட்டிஷ் சோமாலி லாந்திலும் உள்ள ஜனங்கள் பம்பாய்க்கு அனுப்பப் பட்டு வருகிறார்கள்.

24 இந்தியா மந்திரி, காமன்ஸ் சபையில் கூறிய அறிக்கைக்குப் பதிலாக மகாத்மா

யுத்தப் பிரதேசங்களைப் பற்றி

பெல்ஜியம்

ஐரோப்பாவிலுள்ள சிறிய நாடுகளில் பெல்ஜியம் ஒன்று. ஐரோப்பிய நாடுகளில் விஸ்தீரணத்தில் பதினொருவது வரிசையிலும் ஜனத் தொகையில் எட்டாவது வரிசையிலும் உள்ளது. இதன் விஸ்தீரணம் 11,737 சதுர மைல்; ஜனத் தொகை 8,247,950. இதில் ஜெர்மானிய பாஷையைப் பேசுகிற பெல்ஜியர்கள் 90,000 பேர். நிருவாக சௌகரியத்திற்காக பெல்ஜியம், ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தலை நகரம் ப்ரஸ்ஸல்ஸ். மற்ற முக்கிய நகரங்கள் ஆண்ட்வர்ப், லீஜ், நாமூர் முதலியன. இந்த நாட்டின் ஊடே ஷெல்ட், ம்யூஸ் என்ற இரண்டு நதிகள் ஓடுகின்றன.

பெல்ஜியம், சுதந்திரமுள்ள ஒரு தனி நாடாக வாழத் தொடங்கியது 1839ம் வருஷத்திலிருந்து தான். ஆனால் இதனுடைய பூர்விக சரித்திரம் ரோம ஏகாதிபத்தியம், ஐரோப்பாவில் செழித்தோங்கியிருந்த காலத்திலிருந்து ஆரம்பமாகிறது. ஆனால் இது, நெதர்லாண்ட்ஸ் என்ற டச்சு ஏகாதிபத்தியத்துடன எப்பொழுதும்—அதாவது 1839ம் வருஷம்

காந்தி விடுத்துள்ள ஓர் அறிக்கையில், கௌரவமான ஒரு சமரஸத்திற்கு வரத் தாம் எப்பொழுதும் தயாரென்றும், ஆனால் இந்தியாவின் லட்சியம் பூரண சுதந்திரம் அடைவதென்றும் இதை யாரும் தடைப் படுத்த முடியாதென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மாஜி கெய்ஸர், ஜெர்மனியிலுள்ள பாட்ஸ்டாம் என்ற ஊருக்கு வந்து விட்டார்.

25 பிரான்ஸில் நடை பெறும் பலத்த போராட்டத்தைப் பற்றி விவரமான செய்திகளை தெரிவிப்பது சத்துருவுக்குச் சாதகமாக முடிகிறதென்றும் ஒரு செய்தி கூறுகிறது.

மெக்ஸிகோவில் வசிக்கும் ட்ரோட்ஸ்கியைக் களவாடிச் செல்ல, சுமார் முப்பது பேர் ட்ரோட்ஸ்கியின் வீட்டில் நுழைந்தனர். ஆனால் அவர்கள் முயற்சி பலிக்கவில்லை. ட்ரோட்ஸ்கியும் அவர் மனைவியும் தப்பித்துச் சென்று விட்டார்கள்.

அவசியத்தினிமித்தம், தேசத்தின் ஆயுத பலம், ஆள் பலம், பொருள் பலம் முதலிய அனைத்தையும் அரசாங்கத்தினர் சுவாதீனப் படுத்திக் கொள்வர் என்ற விசேஷ அவசரச்சட்டம் ஒன்று இத்தாலியில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

இங்கிலாந்திலுள்ள யார்க்ஷைர் முதலிய மாகாணங்களில் ஜெர்மன் ஆகாய விமானங்கள் குண்டுகளை எறிந்தன.

இந்த நெருக்கடியில் பிரிட்டனை ஒரு நிர்ப்பந்தமான நிலைமையில் வைப்பது தமது நோக்கமில்லை யென்று இன்று 'ஹரிஜன்' பத்திரிகையில் மகாத்மா காந்தி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்:

இந்தியாவின் ராணுவ பலம் அதிகரிக்கப்படுமென்று இந்தியா அரசாங்க அறிக்கை யொன்று கூறுகிறது.

பம்பாய், மத்திய மாகாண சட்ட சபைகளின் அங்கத்தினர்களுக்கு ஜூலை மாதம் முதல் தேதியிலிருந்து சம்பளம் கொடுக்கப் படமாட்டாதென்று ஓர் அறிக்கை கூறுகிறது.

29 போலோன், கலே முதலிய பிரெஞ்சு துறைமுகப் பட்டினங்கள் இன்னும் நேசக் கட்சியினரிடமே இருக்கின்றன வென்று பிரிட்டிஷ் செய்தி யொன்று கூறுகிறது.

எகிப்தில் விளக்கணைப்புத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது.

வரை—சம்பந்தப் பட்டிருந்திருக்கிறது. பெல்ஜியத்தின் மீது ஆதிக்கங் கொள்ள ஆஸ்திரியா, ஸ்பெயின் முதலிய பல நாடுகள் முயன்றிருக்கின்றன. இதில் வெற்றியும் பெற்றிருக்கின்றன.

1830ம் வருஷம் பிரான்சில் புரட்சி ஏற்பட்டது. இந்தப் புரட்சி எண்ணங்கள் பெல்ஜியத்திலும் பரவின. பெல்ஜியர்கள் சுதந்திரக் கொடி நாட்டினார்கள், ஆனால் டச்சு அரசாங்கம் இதனை எதிர்த்தது. கடைசியில் மேற்படி வருஷத்தில் லண்டனில் கூடிய ஒரு சமாஸ மகாநாடு, பெல்ஜியத்தின் சுதந்திரத்தை அங்கிகரித்தது. லியோபால்ட் என்ற ஒரு மன்னன் அரசனாக நியமனம் பெற்றான். ஆனால் டச்சுக்காரர், இதனை அங்கீகரிக்க இஷ்டப்படாமல், பெல்ஜியத்தின் மீது படை யெடுத்தனர். சுமார் எட்டு வருஷம் இந்தப் போராட்டம் சிறிது சிறிதாக நடைபெற்றுக் கொண்டு வந்தது. கடைசியில் 1839ம் வருஷத்தில், வியன்னா என்ற நகரத்தில் கூடிய வல்லரசுகளின் மகாநாடு, பெல்ஜியத்தின் சுதந்திரத்தை அங்கீகரித்தது. அதனோடு, பெல்ஜியம், எப்பொழுதும் மற்ற வல்லரசுகளால் ஒரு நடுநிலைமை நாடாகக் கருதப்பட வேண்டுமென்றும் உறுதி கொடுத்தது. இந்த நடுநிலைமையை ஜெர்மனி அழிக்கப் பார்த்த தென்பதற்குத்தான் 1914ம் வருஷம், இங்கிலாந்து, ஜெர்மனியின் மீது யுத்தம் தொடுத்தது.

1832ம் வருஷமுதல் 1914ம் வருஷம் பெல்ஜியத்தின் சுதந்திரமும் நடுநிலைமையும் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றன. 1870ம் வருஷம் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் சண்டை நடை பெற்றபோது, பெல்ஜியத்தின் நடுநிலைமை பாதிக்கப் படக்கூடும் என்று அப்பொழுதைய ராஜதந்திரிகள் பயந்தார்கள். நல்லவேளையாக, துர்ச் சம்பவம் ஒன்றும் நடைபெறவில்லை.

1914ம் வருஷத்தில் பெல்ஜியத்தின் நடுநிலைமை பாதிக்கப் பட்டதோடு ஜெர்மன் படையெடுப்பினால் அதிக சேதத்தையும் அடைந்தது. பலநகரங்கள் பாழாக்கப்பட்டன. இந்த யுத்தத்திற்குப் பிறகு, பெல்ஜியத்தில் தொழிலாளர் கட்சி யொன்று ஏற்பட்டது. இந்தக் கட்சி, வாண்டர் வில்டே என்பவனுடைய திறமையான தலைமையின் கீழ் வளர்ச்சியடைந்தது. சிறிது காலம் அரசாங்க நிருவாகத்தையும் ஏற்று நடத்தி வந்தது.

பெல்ஜியத்தில் எல்லோருக்கும் வாக்குரிமை யுண்டு. முடியாட்சி நடைபெற்று வந்ததே யாயினும், ஜனங்களிட மிருந்தே, எல்லா அதிகாரங்களும் பிறக்கின்றன வென்ற தத்துவம் அங்கீகரிக்கப் பட்டிருந்தது.

ஓம்.

நோய்கள் தீர வேண்டுமானால்!

தி ஸதானந்த ஆயுர்வேதிக் மெடிஸன்ஸ் & ஸோப்ஸ் லிமிடெட் கம்பெனியாரால்

தலைவர் சுவாமி ஆத்மானந்த பாரதி அவர்களின் மேற் பார்வையில் பதில் மருந்துகள் சேராமல் விதிப்படியுள்ள மருந்துகள் மட்டும் கிடைக்குமிடங்களிலிருந்து தருவித்து தயார் செய்யப்பட்ட தைலம், மருந்து, சோப் முதலியவைகளை வாங்கி உபயோகியுங்கள்.

நாட்டரசங்கோட்டை பிருஞ்சு ஆபீஸில் சிகிச்சைக்கு வருபவர்களுக்கு, இலவசமாய்ப் பரிசை௯ஷ செய்து வியாதிகளுக்குத் தகுந்த சிகிச்சை செய்ய வைத்தியர்களும் வைத்திருக்கிறோம். வியாதியஸ்தர்களிடம் மருந்துக்கிரயமட்டிலும் வாங்கப்படும்.

தி ஸதானந்த ஆயுர்வேதிக் மெடிஸன்ஸ்
& சோப்ஸ் லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—சதானந்தபுரம் (திருவாங்கூர்)

பிருஞ்சு ஆபீஸ்:— நாட்டரசங்கோட்டை (கோட்டயம்)

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி
லிமிடெட்டால்

பிரதி இங்கிலீஷ் மாதம்

முதல் வாரம் வெளியிடப் பெறும்.

"ஜோதி"

வருஷ சந்தா

பர்மாவுக்கு	4—0—0
இந்தியாவுக்கு	4—8—0
மலேயா முதலிய எல்லா வெளி நாடுகளுக்கு	6—0—0

தனிப் பிரதி

பர்மா, இந்தியா	0—6—0
வெளி நாடுகளில்	0—8—0

— ஏஜெண்டுகள் எங்கும் தேவை —

விளம்பரங்கள்

முதலிய விபரங்கட்கு நேரே எழுதுக.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்.

நெ. 47, 31-வது வீதி,

இரங்கூன்.